
ஓம் விஸ்வப்
பிரமனே நம
பாரிஸ்
லா சப்பலில்
ESANE
JEWELLRY
தங்க நகை
சேமிப்புத் திட்டத்தில்
இணைபவர்களுக்கு
முதல் மாதம் இலவசம்!
8, Rue Cail,75010 Paris
email: esanejewellery@gmail.com
Tel: 01 42 81 18 03
Port: 06 66 09 55 11



பிரான்சின் ஏக விநியோகஸ்தர்கள் ...
SKYROSE
YUPPTV
14, RUE CAIL - 75010 PARIS
01 77 17 63 58
M° Gare du Nord / La Chapelle



ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 05 | 26 நவம்பர் - 09 டிசம்பர் 2019 | முழக்கம் 113





## மண்ணின் விடுதலைக்காய் மரணித்த மாவீரர்களின் செங்குருதியின் வெப்பத்தில் ஒளிரும் ஒளி தமிழீழத் தேசிய விடுதலையின் இருள் கிழிக்கும் வழிகாட்டி


V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

நல்ல நிலையில்
கடந்த 4 வருடங்களாக
இயங்கிவரும்
BB Grill Bail
விற்பனைக்கு

தொடர்புகளுக்கு:
07 64 08 93 83


IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான்
சுப்பர் மார்சே
பல்பொருள்
வாணிபம்


64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord


குபேரன்
GOLD HOUSE
உங்களின் மனதிற்குப்
பிடித்தமான வடிவங்களில்
உங்கள் தங்கநகைகளைச்
செய்து கொள்ள...
4 rue Cail - 75010 Paris
Tél.: 06 95 35 46 83

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04


LINGAM CONSEIL
À VENDRE
À LOUER
பல வருடங்களுக்கும் மேலான அனுபவம் மிக்கவர்கள்.
VOUS AVEZ UN PROJET IMMOBILIER?
VENDRE · ACHETER · INVESTIR
Conseil pour tout type de projet immobilier et commercial (Fonds de commerce/Local commercial)
Obtention de crédits de financement
Une grande expérience à votre service
Simple, rapide et efficace
குறைந்த வட்டி
Nouveau projet près de la Gare de Drancy Réserver rapidement afin de bénéficier de frais notaires offerts
புதிய வீடுகள் கட்டும் பிரபல நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிகின்றோம்
உங்கள் விருப்பப்படி...
நீங்கள் தெரிவு செய்யும் இடத்தில்!
LINGAM CONSEIL IMMOBILIER
"CRÉDIT TAUX 0% SUR LE NEUF"
PROVEFA
"Pavillons Drancy"
83 Avenue de la République
93150 Le Blanc-Mesnil
B RER B Le Blanc-Mesnil
1 Bis, Rue de la Réunion - 75020 Paris
Tél: 09.50.46.47.17 ou 07.67.98.84.45
M 2 AVRON M 9 BUZENVAL
Du lundi au samedi de 10h à 18h lingamconseil@hotmail.com


V S · CO Cash & Carry
இலங்கை இந்திய மரக்கறி வகைகள்,
மளிகைப் பொருட்கள், குளிர்பான வகைகள்,
பரிசுப் பொருட்கள் அனைத்தையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
ஒரே கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65 Fax: 01 53 26 72 04


இலங்கை, இந்திய அறுசுவை உணவுகள்...
உங்கள் மண்டப அல்லது வீட்டுக் கொண்டாட்டங்களுக்கு
சாப்பாடுகள் உங்கள் விருப்பத்திற்கேற்ப செய்து தரப்படும்!
BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
51, 67 rue Louis Blanc, 75010 Paris / Tél: 01 42 09 35 84 / 01 58 20 06 20

ஈழமுரசு
mediacentre ஊடகமையம்
முரசு 05 26 நவம்பர் – 09 டிசெம்பர் 2019 முழக்கம் 113

“இன்று மாவீரர் நாள். தமிழீழச் சுதந்திரப் போரை இந்தப் பூமிப்பந்திலே முதன்மையான விடுதலைப் போராட்டமாக முன்னிறுத்திய எமது மாவீரச் செல்வங்களை நினைவுகூரும் தூய நாள். ஆயிரமாயிரம் அக்கினிப் பந்துகளாக, எரி நட்சத்திரங்களாக எரிந்து, எமது விடுதலை வானை அழகுபடுத்தி, அலங்கரித்து நிற்கும் எமது சுதந்திரச் சிற்பிகளை நினைவுகூரும் புனிதநாள்.”

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



# உயிரூட்டம் பெறும் தமிழீழத் தனிநாட்டுக்கான நியாயப்பாடு


கலாநிதி
**சேரமான்**

நடந்து முடிந்த சிங்கள தேசத்து அதிபர் தேர்தல் முடிவுகள், ஒற்றையாட்சி அரசமைப்பும், எண்ணிக்கை அடிப்படையிலான பெரும்பான்மைவாத தேர்தல் முறைமையும் தொடரும் வரை தமது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் தகுதியற்றவர்களாகவே தமிழர்களும், தமிழ் பேசும் முஸ்லிம்களும் இருக்கப் போகின்றார்கள் என்பதையே இடித்துரைக்கின்றன.

சஜித் பிரேமதாசாவிற்குத் தமிழர்கள் வாக்களித்தாலும் சரி, வாக்களிக்காது விட்டாலும் சரி, கோத்தபாய ராஜபக்சவை வெற்றியீட்ட வைப்பதென்று சிங்கள - பௌத்த மக்கள் தீர்மானித்து விட்டால், அதனை ஆண்டவன் நினைத்தாலும் மாற்ற முடியாது என்ற கருத்தை, கடந்த நான்கு வாரங்களுக்கு முன்னர் வெளிவந்த ‘சிங்கள தேசத்து அதிபர் தேர்தலும், தேசியத் தலைவரின் சிந்தனையும்’ என்ற தொடரின் இறுதிப் பத்தியில் முன்வைத்திருந்தேன். இதனை நிரூபிக்கும் வகையிலேயே நடந்து முடிந்த சிங்கள தேசத்து அதிபர் தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கின்றன.

தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் பரப்புரைகள் சூடுபிடிக்கத் தொடங்கிய பொழுது மூன்று தரப்புக்களில் இருந்தும் (தமிழ், சிங்கள, முஸ்லிம் தரப்புக்கள்) ஒரு எதிர்வுகூறல் மேற்கொள்ளப்பட்டது. அதாவது சிங்கள தேசத்து அதிபர் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் வாக்காளர்களால் செலுத்தப்படும் மொத்த வாக்குகளில் ஐம்பது விழுக்காடு வாக்குகளைப் பெறப் போவதில்லை என்றும், எனவே தேர்தல் இரண்டாவது சுற்றுக்கு நகர்ந்து, முதலாம், இரண்டாம் விருப்பு வாக்குகள் கூட்டப்பட்டு, அதன் அடிப்படையிலே வெற்றிவாகையர் தீர்மானிக்கப்படுவார் என்பதே அவ் எதிர்வுகூறலாகும்.

தொடர்ச்சி 04ம் பக்கம்












ஈழமுரசு

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE" JOURNAL TAMOUL bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
அருளப்பு (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
POP,
30, rue Raspail,
93120 La Courneuve.

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
**பிரான்ஸ்** 75€
**ஐரோப்பா** 85€
**ஏனைய நாடுகள்** 99€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

சங்கதி24

www.sankathi24.com

TAMILPOLITY.COM

# உயிரூட்டம் பெறும் தமிழீழத்...

இவ்வாறு நடக்கலாம் என்ற ஐயம் சிறீலங்கா தேர்தல் ஆணையத்திற்கும் இருந்தது. அதனால் தான் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதற்கு தாமதம் ஏற்படலாம் என்று தேர்தல் ஆணையர் மகிந்த தேசப்பிரிய கூறியிருந்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், பொது வேட்பாளர் ஒருவரைத் தமிழர்கள் களமிறக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் காட்சிப்பதிவு ஒன்றை வெளியிட்ட இந்தியாவில் வசிக்கும் மு.திருநாவுக்கரசு என்ற முன்னாள் யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர், தமிழ் மக்களின் வாக்குகளே இம்முறை நடைபெறும் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கப் போகின்றன என்றும், இதனை விஞ்ஞான ரீதியாகத் தான் கணித்துக் கூறுவதாகவும் தெரிவித்திருந்தார். அவரது காட்சிப்பதிவின் சம்பந்தப்பட்ட பகுதியை வாசகர்களுக்காக இவ்விடத்தில் எழுத்து வடிவில் பதிவு செய்கின்றோம்:

'முதலாவது தேர்வை எங்களது தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிக்கின்ற ஒருவருக்குப் போடுவோம். போட்டு ஒருவரையும் வெல்லாமல் பண்ணுவோம். எஸ்.எல்.எப்.பியோ, யூ.என்.பியோ, இரண்டு பேரையும் வெல்லாமல் பண்ணுவோம். ராஜபக்சாவை - இரண்டு பேரையும் வெல்லாமல் பண்ணுவோம். இரண்டாவது வாக்கு நாங்கள்... எங்களுக்கு உள்நாட்டு அரசியலில் எந்தவொரு சிங்களத் தலைவனையும் நம்ப முடியாது. எனவே, உள்நாட்டுத் தலைவர்கள் என்ற அடிப்படையில் வாக்குறுதி, ஒப்பந்தம் இரண்டுமே வேண்டாம். சர்வதேச சமாதானக் குழு ஒன்று நிறுவப்பட்டு, இந்தியா, அமெரிக்கா மேற்குலகம் - இவை சம்பந்தப்பட்ட - ஒரு சமாதானக் குழு பொறுப்பேற்று, இரண்டாவது வாக்கை யாருக்கு அளிப்பதென்று அவர்கள் உத்தரவாதம் அளிப்பதன் பேரில் நாம் இரண்டாவது வாக்கை அளிக்கலாம்.'

இதே பாணியில் மு.திருநாவுக்கரசு அவர்களின் அரசியல் மாணாக்கர்களில் ஒருவரான நிலாந்தன் என்பவரும் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அக்கட்டுரையில் சம்பந்தப்பட்ட பகுதியை அப்படியே இங்கு தருகின்றோம்:

'இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் ஐம்பது வீதத்துக்கும் கூடுதலான வாக்குகள் கிடைக்காத போது, வாக்காளர்களின் இரண்டாவது விருப்பத் தெரிவு எண்ணப்படும். இதில் தமிழ் மக்கள் யாருக்குத் தமது இரண்டாவது விருப்பத் தெரிவு வாக்கை அளிப்பார்களோ, அவரே வெற்றி பெறுவார். அதாவது இரண்டாவது சுற்று வாக்கு கணக்கெடுப்பில் தமிழ் மக்களால் தீர்மானிக்கப்படும் ஒரு ஜனாதிபதியே தெரிவு செய்யப்படுவார்.'

ஆக, தமிழ் மக்கள் தான் இத் தேர்தலில் கிங் மேக்கர்ஸ் ஆக (ஆட்சியாளரைத் தீர்மானிப்பவர்களாக) இருக்கப் போகின்றார்கள் என்ற கற்பனையில் தான் மூத்த அரசறிவியலாளர்கள், முன்னணி அரசியல் விமர்சகர்கள் என்று கூறப்பட்டு வந்த பலரும் மிதந்து கொண்டிருந்தார்கள்.

இவர்கள் யாருக்கும் தேர்தல் புறக்கணிப்பு என்ற நிலைப்பாடு பிடிக்கவில்லை. இதனை மு.திருநாவுக்கரசு அவர்கள் பகிரங்கமாகவே தனது காட்சிப் பதிவில் குறிப்பிட்டிருந்தார். சிங்கள தேசத்து அதிபர் தேர்தலைக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரியதற்கு அமையத் தமிழர்கள் புறக்கணித்தால், அது தமிழர்களுக்குப் பாதகமான அமையும் என்றும் அவர் வாதிட்டார்.

இதே கற்பனையில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸ் உள்ளடங்கலான தமிழ் பேசும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் மிதந்தன. இதுவே சஜித் பிரேமதாசாவிற்கு வாக்களிக்குமாறு தமிழ் - முஸ்லிம் மக்களை இக்கட்சிகள் விரல் சுட்டியமைக்குக் காரணமாகும்.

ஆனால் சிங்கள - பௌத்த இனம் விழித்தே இருந்தது. தமிழீழ தேசியத் தலைவரின் வார்த்தைகளில் கூறுவதானால், மகாவம்ச மனோநிலையில் மூழ்கிக் கிடக்கும் சிங்கள - பௌத்த இனம், ஈழத்தீவை தமக்குப் புத்தர் கையளித்த முதிசமாகக் கருதும் துட்டகாமினியின் இனம், நவீன துட்டகாமினியை ஆட்சிக் கட்டில் அமர்த்துவதற்குத் தீர்மானித்தது.

இதன் விளைவு தான் தமிழ் - முஸ்லிம் மக்களின் வாக்குகள் இன்றி கோத்தபாய ராஜபக்ச ஈட்டிய தேர்தல் வெற்றி. கோத்தபாயவிற்கும் இது தெரியும். தன்னை நவீன துட்டகாமினியாகக் கருதும் சிங்கள - பௌத்த மக்கள், தனது தேர்தல் வெற்றிக்கு வழிசமைப்பார்கள் என்று கோத்தபாய உறுதியாக நம்பினார். இவ்விடத்தில் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் துட்டகாமினியின் மாமனாரின் பெயரும் கோத்தபாய தான். தமிழ் வேந்தன் எல்லாளனை வெற்றிகொள்வதற்கு முன்னர் அன்றைய துட்டகாமினி, கோத்தபாய ஆகியோர் ஆட்சி செய்த உறுகுணை சிற்றரசு தான் இன்றைய கோத்தபாய, மகிந்த ஆகியோரின் பூர்வீக இடமான அம்பாந்தோட்டை.

**ஈழத்தீவின் அரசியல் களத்தில் கட்டவிழ்ந்துள்ள மாற்றங்கள், தமிழீழத் தனியரசு என்ற மாவீரர்களின் கனவை காலநீட்சியில் நனவாக்கும் என்ற நம்பிக்கையோடு எமது அரசியல் பயணத்தை நாம் தொடர்வோமாக.**

இன்று சிங்கள - பௌத்த இனம் வெற்றி கண்டு விட்டது. தமிழ் - முஸ்லிம் மக்களின் தயவு இன்றித் தங்களைத் தாங்களே ஆளலாம் என்பதை ஐயம்திரிபறச் சிங்கள -பௌத்தர்கள் நிரூபித்து விட்டார்கள்.

இதனால் தான் சிங்களவர்களுக்கு வலுவான ஒரு தலைவன் கிடைத்து விட்டான் என்றும், அப்படி ஒரு தலைவன் இருக்கும் பொழுது இனி தமது செயற்பாடுகளுக்குத் தேவையில்லை என்று கூறி வரும் பொதுத் தேர்தலுடன் தமது அமைப்புக்களைக் கலைக்கப் போவதாக பொதுபல சேனா, சிங்கள ராவய ஆகியவை பகிரங்கமாகவே அறிவித்துள்ளன.

கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சியென்பது சிறீசேனவின் ஆட்சிக்காலம் போன்று வெறும் ஐந்தாண்டுகளில் முடியப் போகும் ஒன்று அல்ல. அது குறைந்தது இன்னுமொரு தசாப்தத்திற்காவது தொடரப் போகும் ஒன்று. ஒரு வேளை வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மகிந்த ராஜபக்ச பெறுவாராக இருந்தால், நாட்டின் அரசியலமைப்பு திருத்தியமைக்கப்பட்டு, அடுத்த ஐந்து ஆண்டுகளின் பின் நடைபெறப் போகும் அதிபர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச போட்டியிட்டு அதிபராகலாம். அல்லது பிரதமருக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு, ஒரு பொம்மை அதிபராக குடியரசுத் தலைவர் பதவியில் கோத்தபாய இருக்கலாம். எது எப்படியோ, இனி வரும் ஒரு தசாப்த காலத்திற்கு ஈழத்தீவின் ஆட்சியதிகாரம் ராஜபக்ச குடும்பத்திடமே இருக்கப் போகின்றது.

சஜித் பிரேமதாசா ஆட்சிக்கு வந்தால் தமிழர்களுக்கு சமஸ்டித் தீர்வு கிட்டும் என்று இராஜவரோதயம் சம்பந்தர் வழங்கிய வாக்குறுதி இத்தோடு கானல்நீராகி விட்டது. சிறீலங்காவின் ஒற்றையாட்சி அமைப்பையும், இறையமைமையையும் உலக நாடுகள் மதித்து நடக்க வேண்டும் என்று தான் எதிர்பார்ப்பதாக அதிபராகப் பதவியேற்றதும் கீச்சகத்தின் (ரிவிட்டர்) ஊடாக விடுத்த செய்தியில் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்திருப்பது, சம்பந்தரின் சமஸ்டி கனவுக்கு சாவுமணி அடிக்கப்பட்டதை பட்டவர்த்தனமாக்குகின்றது.

ஏன் கால நீட்சியில் மாகாண சபை முறைமையை கோத்தபாய ராஜபக்சவும், மகிந்த ராஜபக்சவும் இல்லாதொழித்தாலும் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்புரிமையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரத்துச் செய்த பொழுது இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், மோடியின் பாணியில் ஒரு காலத்தில் மாகாண சபை முறைமைக்கு அடிப்படையாக விளங்கும் அரசியலமைப்பின் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தையும் தாங்கள் இல்லாதொழிக்கும் நிலை வரலாம் என்று மகிந்த ராஜபக்ச அவர்கள் தெரிவித்திருந்ததை வாசகர்களுக்கு நாம் நினைவூட்ட விரும்புகின்றோம்.

ஆக தமிழர்களுக்கு சமஸ்டியும் கிட்டப் போவதில்லை, மாகாண சபைகளும் நீண்ட காலத்திற்குத் தமிழர்களிடம் இருக்கப் போவதில்லை.

இது தமிழீழத் தனிநாட்டுக்கான தமிழர்களின் நியாயப்பாட்டிற்கு உயிரூட்டமளிக்கும். நடந்து முடிந்த சிங்கள தேசத்து அதிபர் தேர்தலைத் தமிழர்கள் முற்றாகப் புறக்கணித்திருந்தால், தமிழீழத் தனிநாட்டுக்கான தமிழர்களின் நியாயப்பாடு வலுவான தளத்தில் உயிரூட்டம் பெற்றிருக்கும்.

இதனைச் சற்றுப் பின்னடைவுக்கு ஆளாக்கியதில் சிங்கள தேசத்து அதிபர் தேர்தலில் எண்பது விழுக்காடு தமிழர்களை வாக்களிக்க வைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், அவர்களின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாக உறுதுணை நின்ற ஊடகங்கள், அரசறிவியலாளர்கள், அரசியல் விமர்சகர்களுக்குப் பங்கு உண்டு எனலாம்.

எது எப்படியோ, இத் தேர்தலில் ஆர்வம் காட்டாது, எந்தவொரு வேட்பாளர்களுக்கும் வாக்களிக்காது, தமிழீழ தாயகத்தில் (புத்தளம் உள்ளடங்கலான) வசிக்கும் 649, 004 தமிழ் பேசும் மக்கள் (தமிழர்களும், முஸ்லிம்களும்) தேர்தல் புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளார்கள். இதன் மூலம் ஏமாற்று அரசியலில் சிக்கிக் கொள்ளாதவர்களாகவும், சிறீலங்காவின் தேர்தல் முறைமையை ஏற்றுக் கொள்ளாதவர்களாகவும், அதன் ஆட்சியமைப்பில் நம்பிக்கை அற்றவர்களாகவும் இருபது விழுக்காடு தமிழீழ மக்கள் இருக்கின்றார்கள் என்பது மௌனமாக வெளிப்பட்டுள்ளது.

இந்த இருபது விழுக்காட்டை இனி வரும் ஒரு தசாப்த காலத்திற்குள் நூறு விழுக்காடாக உயர்த்தும் வகையிலான பௌத்த - சிங்கள மேலாதிக்க ஆட்சியை ராஜபக்ச சகோதரர்கள் மேற்கொள்ளத் தான் போகின்றார்கள். இன்றைய தமிழ் - முஸ்லிம் தலைமைகள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, இந்தியாவும், மேற்குலகமும் தலைகீழாக நின்றாலும் சரி, நிற்காவிட்டாலும் சரி, இது நடக்கத் தான் போகின்றது.

எனவே, மாவீரர்களை நெஞ்சில் நிறுத்தி நாம் பூசிக்கும் இப் புனித நாட்களில் ஈழத்தீவின் அரசியல் களத்தில் கட்டவிழ்ந்துள்ள மாற்றங்கள், தமிழீழத் தனியரசு என்ற மாவீரர்களின் கனவை காலநீட்சியில் நனவாக்கும் என்ற நம்பிக்கையோடு எமது அரசியல் பயணத்தை நாம் தொடர்வோமாக.

ஈழமுரசு

# கோத்தா ஜனாதிபதி

‘பாரதி’ திரைப்படத்தில் ஒரு காட்சி. சிறு வயதில் பாரதியாருக்கு திருமணம் செய்து வைத்துவிடுவார்கள். திருமணத்தின்போது சிறுமி கண்ணம்மாவின் கன்னத்தில் பாரதியார் முத்தமிட்டுவிடுவார். அழுதுகொண்டே ஓடிப்போகும் சிறுமி, அழுதுகொண்டே தாயார், உறவினர்களிடம் கேட்பார் ‘எனக்கேன் இப்படியொரு புருஷின் வந்து வாய்க்கவேணும்?’ என்று.

இப்படித்தான் இருக்கின்றது அமெரிக்க மக்களின் நிலையும். ‘எங்களுக்கு ஏன் இப்படியொரு ஜனாதிபதி வந்து வாய்க்க வேண்டும்?’ என்றுதான் இப்போது அமெரிக்காவின் பெரும்பாலன மக்கள் புலம்புகின்றார்கள். டொனால்ட் டிரம்ப்பின் கோமாளித்தனங்களும், முறட்டுத்தனமான முட்டாள்தனமான முடிவுகளும் அவர்களை அப்படிச் சிந்திக்க வைத்திருக்கின்றது. டொனால்ட் டிரம்ப் வரவேண்டும் என்று விரும்பியவர்களும் இப்போது அவரை ஆட்சி முடிவடைவதற்குள் எப்படி அகற்றிவிடலாம் என்று அங்கலாய்க்கின்றார்கள். அதற்கான நடவடிக்கைகளையும் அவர்கள் தீவிரப்படுத்திவிட்டார்கள்.

இந்த நிலைமைதான் நாளை சிங்கள மக்களுக்கும் ஏற்படப்போகின்றது. ‘ஏன் நாங்கள் இப்படிப்பட்ட ஒருவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தோம்?’ என்று சிங்கள மக்கள் புலம்புகின்ற காலம் வெகு தூரத்தில் இல்லை என்றே நம்பலாம்.

இலங்கையில் நடந்த இன விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதப் போராட்டமாக சித்தரித்தவர்களால், இலங்கைத் தீவில் இரண்டு இனங்கள் வெவ்வேறு கொள்கையுடன் வாழ்கின்றன என்ற கோட்பாட்டை தகர்க்கமுடியவில்லை. சிறீலங்கா ஆட்சி அதிகாரத்திற்காக நடைபெறும் தேர்தல்களில் பலமுறை அப்பட்டமாக வெளித்தெரியும் இந்தக் கோட்பாடு, இம்முறை எதிர் எதிர் இனங்கள் வாழ்கின்றன என்பதை ஓர் இனம் மட்டும் தனியாக தமது நாட்டிற்கான ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் உறுதிப்படுத்திவிட்டார்கள். கோத்தபாய வந்துவிடக்கூடாது என்ற தமிழ் - முஸ்லிம் - மலையக மக்களின் எதிர்பார்ப்பை, சிங்கள மக்கள் தகர்த்தெறிந்து தமது ஜனாதிபதியைத் தாங்களே தேர்ந்தெடுத்திருகின்றார்கள்.

பாதுகாப்புச் செயலராக இருந்து மிகப் பெரும் இனவெறிப் படுகொலை ஆட்டத்தை ஆடிய கோத்தபாய ராஜபக்ச, இப்போது ஜனாதிபதி போர்வையைப் போர்த்திக் கொண்டு மீண்டும் களமிறங்கியிருக்கின்றார். சிங்கம் பசுத்தோல் போர்த்திக்கொண்டால், அதன் குணம் என்ன மாறிவிடவா போகின்றது?



கோத்தா ஜனாதிபதியாகிவிட்டதால் இனி இலங்கைத் தீவில் என்ன நடக்கும்..?

* இலங்கைத் தீவு சீன மாநிலங்களில் ஒன்றாக மாறலாம்.
* குடும்ப ஆட்சியில் இலங்கைத் தீவே மூச்சுத் திணறலாம்.
* அண்ணனின் ஆட்சியில் அவலங்களைக் கண்டவர்கள், தம்பியின் ஆட்சியிலும் துன்பங்களைச் சுமக்கலாம்.
* ‘அவோன்கார்ட்’ ஆயுதக் கப்பல் விசாரணைகள், ஊழல் நிதி மோசடி விசாரணைகள் முடிவின்றியே நின்றுபோகலாம்.
* அதிகாரத்தில் இருப்பவர்கள் தலைகால் புரியாமல் தாண்டவம் ஆடலாம். மேர்வின் சில்வா போல் மரத்தில் கட்டி வைத்தும் அடிக்கலாம்.
* இலகத்தகடின்றி வெள்ளை வான்கள் அதிகளவில் ஓடலாம். முதலைகள் அதிகம் மனித உடல்களை விரும்பி உண்ணலாம்.
* வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தை கைவிட நேரலாம். அல்லது அவர்களும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்படலாம்.
* நில மீட்புப் போராட்டங்கள் நின்று போகலாம். தமிழர் நிலங்களை மேலும் இழக்கலாம்.
* துயிலும் இல்லங்களில் கால்வைப்பவர்களும், மாவீரர்களை மனதால் நினைப்பவர்களும் கடத்தப்படலாம், ஏன் காணாமலும் கூடப் போகலாம்.
* விடுமுறையில் செல்வதுபோல், கொழும்பின் 4ம் மாடிக்கு தினமும் தமிழர்கள் அதிகளவில் விசாரணைக்குச் சென்று வரலாம்.
* வடக்கில் டக்ளசும், அங்கஜனும் - கிழக்கில் கருணாவும் பிள்ளையானும் வைத்ததே சட்டங்கள் ஆகலாம்.
* பிள்ளையான் வெளிக்காற்றை மூச்சு முட்டச் சுவாசிக்க, வெளியில் சிலர் ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் மூச்சை இழக்கலாம்.
* இந்து ஆலயங்களிலும் வடக்கு, கிழக்கிலும் புத்தர்கள் வகைதொகையின்றி குடியேறலாம். எதிர்ப்பவர்களைத் தேரர்கள் வன்முறையால் அடக்கலாம்.
* கோத்தாவின் சுட்டுவிரலில் கே.பியின் கொலைக் கரங்கள் மீண்டும் புலம்பெயர் நாடுகளுக்கு நீளலாம். பனிக்குளிருக்குள் வீழ்ந்த பரிதியைப் போன்று, விடுதலை உணர்வுள்ள சிலர் விதையாகவும் வீழலாம்.
* விடுமுறையைக் கழிக்க செல்லும் புலம்பெயர் உணர்வுத் தமிழர்கள் உயிரிழக்க நேரலாம். அது விபத்து மரணம் என்றே சட்டத்தில் பதிவாகலாம்.
* 2010ல் தமக்கு வாக்களிக்க மறுத்த தமிழ் மக்களைப் பழிவாங்கியதுபோல், இப்போது மீண்டும் வாக்களிக்க மறுத்த தமிழர்கள் பழிவாங்கப்படலாம்.
* இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வில்லைப்போல் கோத்தாவை வளைக்க முயலலாம். முடியாது போனால் ‘ஆடு நனைவதாக ஓநாய் அழுவதுபோல்’, தமிழர்களுக்காக இவர்களும் கண்ணீர் வடிக்கலாம். கோத்தாவைக் கழுவேற்றவும் துடியாய் துடிக்கலாம்.

**இவையும் நடக்கலாம். இதற்கு மேலாகவும் நடக்கலாம். ஏனெனில் பதவிக்கு வந்திருப்பது இனத்தை அழித்த கோத்தபாய ராஜபக்சவும் குடும்பமும்.**

**மாற்றார் சிதைத்தாலும் மாவீரர் கல்லறை**
**மண்ணாய் நிலைக்குமையா...**
**ஆற்றல் மிகுந்த மாவீரர் கல்லறை**
**மண்ணில் அனலே முளைக்குமையா...**





# தமிழர்களின் தன்னாட்சி உரிமையே அரசியல் தீர்வுக்கு அடிப்படை

## - பிரித்தானிய நிழல் நிதித்துறை அமைச்சர்



தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தன்னாட்சி உரிமையின் அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்று பிரித்தானிய தொழிற்கட்சி வலியுறுத்தியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா விலகுவதில் (பிரெக்ஸிட்) இழுபறி நீடித்து வரும் நிலையில், அந்த நாட்டு நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே, எதிர்வரும் 12.12.2019 அன்று பிரித்தானியாவில் பொதுத் தேர்தல் இடம்பெற இருக்கின்றது.தற்போதைய நாடாளுமன்றத்தில் ஆயுள் காலம் முடிவடைவதற்கு முன்னரே நடைபெறும் இந்தத் தேர்தலில் ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி, முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

இந்நிலையில் தொழிற்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் 21.11.2019 அன்று அக்கட்சியின் தலைவரும், தமிழ் மக்களுக்காகக் கடந்த முப்பத்தாறு ஆண்டுகளாக ஓயாது குரல் கொடுத்து வருபவருமான ஜெரமி கோர்பின் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதில், தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஐ.நா. மன்றம் ஊடாகவும், பொதுநலவாய அமைப்பு ஊடாகவும் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இது பற்றித் தனது முகநூல் பக்கம் ஊடாகக் காட்சிப்பதிவு ஒன்றை வெளியிட்டிருக்கும் தொழிற்கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவரும், நிழல் நிதித்துறை அமைச்சருமான ஜோன் மக்டொனல், தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக இலங்கைத் தீவில் இழைக்கப்படும் கொடூர ஒடுக்குமுறைகளைத் தமிழ் இனத்தை அழிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் என்றே தானும், தனது கட்சித் தலைவர் ஜெரமி கோர்பின் அவர்களும் உறுதியாக நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இக் கொடூர ஒடுக்குமுறைகள் தமிழர் தாயகத்தை சிறீலங்கா படைகள் ஆக்கிரமித்துள்ளதன் காரணமாகத் தொடர்வதாகவும், இதற்கு முடிவு கட்டுவதற்குத் தமிழர் தாயகத்தை விட்டு சிறீலங்கா படைகள் வெளியேற வேண்டும் என்று தாங்கள் வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு அமைதிவழியில் அரசியல் தீர்வு கிட்டுவது அவசியம் என்று இக் காட்சிப்பதிவில் குறிப்பிட்டிருக்கும் ஜோன் மக்டொனல், அவ் அரசியல் தீர்வு தமிழர்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அமைவது முக்கியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்படுவது, புதிய அதிபராக கோத்தபாய ராஜபக்ச பதவியேற்றிருப்பது போன்றவை எதிர்காலம் பற்றிய கவலையைத் தோற்றுவித்திருப்பதாக மேலும் குறிப்பிட்டிருக்கும் பிரித்தானிய நிழல் நிதித்துறை அமைச்சர், தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் ஈழத்தீவின் மனித உரிமைச் சூழலைக் கண்காணிக்கும் பொறுப்பைக் கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகத்திற்கு வழங்கும் என்றும் உறுதியளித்துள்ளார்

இதுஇவ்வாறிருக்க, தேர்தலில் வெற்றி பெற்றால் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்காக இந்தியாவிடம் மன்னிப்பு கேட்கப் போவதாக அந்த நாட்டு தொழிற் கட்சி உறுதியளித்துள்ளது. முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி, ‘உண்மையான மாற்றத்துக்கான காலம் இது’ என்ற தலைப்பிடப்பட்ட தனது தேர்தல் அறிக்கையில், கடந்த காலங்களில் பிரித்தானியா இழைத்ததாகக் கூறப்படும் அநீதிகள் குறித்து நீதிபதி தலைமையில் விசாரணை நடத்தப்படும். பிரித்தானிய காலனியாதிக்கத்தின் போது நடந்த நிகழ்வுகளும் விசாரணைக்கு உள்படுத்தப்படும்.

இந்தியாவில் 100 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு முறைப்படி மன்னிப்பு கேட்கப்படும். மேலும், அமிருதசரஸ் பொற்கோயிலில் நடத்தப்பட்ட ‘operation blue star’ நடவடிக்கையில் பிரித்தானியாவின் பங்கு குறித்தும் விசாரணை நடத்தப்படும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமிருதசரஸிலுள்ள உள்ள பொற்கோயிலில் பதுங்கியிருந்த காலிஸ்தான் போராளிகளை வெளியேற்றுவதற்காக இந்திய இராணுவம் 1984ம் ஆண்டு மேற்கொண்ட operation blue star நடவடிக்கையில் இந்தியாவுக்கு பிரித்தானியா ஆலோசனை அளித்ததாக 2014ம் ஆண்டு வெளியான பிரிட்டன் ஆவணத்தில் தெரியவந்தது. அது எந்த வகையிலான ஆலோசனை என்பது குறித்து விளக்கமளிக்க வேண்டுமென்று பிரித்தானிய சீக்கிய அமைப்புகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றன. இந்த நிலையில், தொழிலாளர் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இந்த அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

முன்னதாக, தேர்தலையொட்டி, பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்ஸனுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ஜெரமி கோர்பினுக்கும் இடையே முதல்முறையாக நேரடி தொலைக்காட்சி விவாதம் நடைபெற்றது.

கொன்சர்வேடிவ் கட்சியின் தலைவரும், பிரதமருமான போரிஸ் ஜோன்ஸனுக்கும், தொழிலாளர் கட்சித் தலைவர் ஜெரமி கோர்பினுக்கும் இடையிலான நேரடி தொலைக்காட்சி விவாதம் முதல் முறையாக கடந்த 19ம் திகதி நடைபெற்றது. அந்த விவாதத்தின்போது கடும் கருத்து மோதல் இடம்பெற்றது.


பிரெக்ஸிட்டை நிறைவேற்றுவதில் தனது உறுதிப்பாட்டை போரிஸ் ஜோன்ஸன் தொடர்ந்து வலியுறுத்தினார். இது குறித்து அவர் கூறுகையில், வரும் ஜனவரி மாதம் 31ம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா நிச்சயம் வெளியேறும். அதற்கான ஒப்பந்தம் தயார் நிலையில் உள்ளது. வரும் 2021ம் ஆண்டுக்குள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தக உறவை ஏற்படுத்துவேன் என்றார்.

எனினும், போரிஸ் ஜோன்ஸனின் கால அட்டவணை நடைமுறை சாத்தியமல்லாதது என ஜெரிமி கோர்பைன் விமர்சித்தார். மேலும், பிரித்தானியா மதிப்பு மிக்க பொது மருத்துவ சேவையை அமெரிக்காவுக்குத் தாரை வார்க்க போரிஸ் ஜோன்ஸன் முயன்று வருவதாக அவர் குற்றம் சாட்டினார். இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுடன் இரகசிய பேரத்தில் ஈடுபட்டு வருவதாக போரிஸ் ஜோன்ஸன் மீது ஜெரிமி கோர்பின் குற்றம் சாட்டினார். இந்தத் தொலைக்காட்சி விவாதத்தையொட்டி இடம்பெற்ற கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் போரிஸ் ஜோன்ஸனுக்கு ஆதரவாக 51 சதவீதத்தினரும் கொர்பைனுக்கு ஆதரவாக 49 சதவீதத்தினரும் வாக்களித்துள்ளனர்.

எனினும் இந்த விவாதம் மட்டுமன்றி, பிரபல தொலைக்காட்சி ஊடகங்கள் நடத்தும் மேலும் பல விவாதங்களில் போரிஸ் ஜோன்ஸனும், ஜெரிமி கோர்பைனும் நேரடியாகப் பங்கேற்கவிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




## பிரித்தானிய மண்டை ஓடுகள் சிறீலங்காவிடம் ஒப்படைப்பு !



ஒன்பது மனித மண்டையோடுகளை பிரித்தானியாவின் எடின்பேர்க் பல்கலைக்கழகம் சிறீலங்காவிற்கு கடந்த 22ம் திகதி கையளித்தது. குறித்த மனித மண்டையோடுகள் வேதா வேடுவ மக்களின் மூதாதையரின் எச்சங்கள் என்றும் அவை 200 க்கும் மேற்பட்ட ஆண்டுகள் பழமையானவை என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர். குறைந்தது ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் கையகப்படுத்தப்பட்டதிலிருந்து அவை எடின்பேர்க் பல்கலைக்கழகத்தின் உடற்கூறியல் சேகரிப்பின் ஒரு பகுதியாக இருந்துள்ள ஒன்பது மனித மண்டையோடுகளே கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நிகழ்வு பிரித்தானிய எடின்பேர்க் பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது குறித்த மண்டையோடுகளை கையேற்பதற்காக இலங்கையின் வேடுவர் தலைவர் உறுவாரிகே வன்னியாலே அத்தோ பிரித்தானியாவுக்கு சென்றிருந்தார். குறித்த ஒன்பது மண்டையோடுகளையும் இலங்கையில் காட்சிப்படுத்தவுள்ளதாக வேடுவ இனத்தலைவர் தெரிவித்துள்ளார். இந்த இறப்புக்கள் தமது வேடுவர் சமூகத்துக்கு முக்கியமானவை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். பிரித்தானியாவின் இரண்டாவது தர பல்கலைக்கழகமாக விளங்கும் எடின்பேர்க் பல்கலைக்கழகம் தமது நூதனசாலையில் சுமார் 12 ஆயிரம் மரபுரீதியான எச்சங்களை பாதுகாத்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 2007ம் ஆண்டு மாவீரர் தின உரையில் ஆற்றிய கருத்துக்கள் இன்றும் வரலாற்றுப் பொருத்தமாக அமைந்திருக்கின்றன. மீண்டும் இலங்கைத் தீவு மகிந்த குடும்ப ஆட்சி அதிகாரத்திற்குள் சென்றுள்ள நிலையில், அந்த உரையில் இருந்து இன்றைய காலத்திற்குப் பொருத்தமான பகுதிகளை மட்டும் இங்கு தேர்ந்தெடுத்துத் தருகின்றோம்.**



# மகிந்த அரசு தமிழின அழிப்புப்போரைக் கைவிடப்போவதில்லை

பௌத்தம் ஓர் ஆழமான ஆன்மீகத் தரிசனம். அன்பையும் அறத்தையும் ஆசைகள் அகன்ற பற்றற்ற வாழ்வையும், தர்மத்தையும் வலியுறுத்தி நிற்கும் தார்மீகத் தத்துவம். இந்தத் தார்மீக நெறியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் சிங்களம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இனவாத விசத்தினுள் மூழ்கிக்கிடக்கிறது. சிங்கள இனவாத விசம் இன்று மிருகத்தனமான வன்முறையாகக் கோரத் தாண்டவமாடுகிறது. அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வன்முறை அகன்ற அகிம்சை வழியிலும், ஆயுதவழியிலும் தமிழர் நீதி கேட்டபோதும் சிங்கள உலகிலே சிறிதளவும் மனமாற்றம் நிகழவில்லை. எத்தனையோ இழப்புக்கள், எத்தனையோ அழிவுகள், எண்ணற்ற உயிர்ப்பலிகள் நிகழ்ந்த போதும் சிங்களத் தேசம் மனந்திருந்தவில்லை. தொடர்ந்தும், அது வன்முறைப் பாதையிலேயே பயணிக்கிறது. அடக்குமுறையாலும் ஆயுதப்பலத்தாலும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவே அது விரும்புகிறது.

★★★★

எமது பிராந்தியத்திலே உலகப் பெருவல்லரசுகளின் இராணுவ, பொருளாதார, கேந்திர நலன்கள் புதைந்து கிடப்பதை நாம் நன்கு அறிவோம். அந்த நலன்களை முன்னெடுக்க உலக வல்லரசுகள் முனைப்புடன் முயற்சிப்பதையும் நாம் விளங்கிக்கொள்கிறோம். இதற்கு இலங்கைத்தீவில் நெருக்கடி நிலை நீங்கி, சமாதானமும் நிலையான நல்லாட்சியும் தோன்ற அனைத்துலக நாடுகள் ஆர்வமும் அக்கறையும் காட்டுவதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். இதேநேரம் பேரினவாதச் சிங்கள அரசு உலக நாடுகளின் நலன்களையும் அவை எமது பிராந்தியத்திற் பதிந்திருப்பதையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறது. போலியான, பொய்யான பரப்புரைகள் வாயிலாக உலக நாடுகளைத் தமது வஞ்சக வலைக்குள் வீழ்த்தி, தமிழரது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் திருப்பி விடுகின்ற கைங்கரியத்தைச் செய்து வருகிறது.

சிங்கள அரசின் வஞ்சக வலைக்குள் வீழ்ந்து, உலக நாடுகள் எமது பிரச்சினையில் எதிர்மறையான தலையீடுகளைச் செய்வதுதான் எமக்கும் எமது மக்களுக்கும் வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

இப்படியான அநீதியில் அமைந்த அந்நியத் தலையீடுகள், காலங்களை விழுங்கி நீண்டுசெல்லும் எமது போராட்டத்திற்குப் புதியவை அல்ல.

★★★★

தமிழரது தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் எதையும் தொட்டு நிற்காத, தமிழரின் அரசியல் அபிலாசைகள் எதையும் பூர்த்திசெய்யாத அந்த அரைகுறைத் தீர்வைக்கூடச் செயற்படச் சிங்களப் பேரினவாதிகள் அன்று அனுமதிக்கவில்லை. சிங்களத் தேசம் பற்றியும் அதன் நயவஞ்சக அரசியல் பற்றியும் நாம் நன்கு அறிவோம். எமக்கு அது பற்றிய நீண்ட பட்டறிவும் கசப்பான வரலாறும் இருக்கின்றன. எனவேதான், நாம் அன்று இந்தியாவுடன் பல்வேறு தடவைகள் பல்வேறு இடங்களிற் பல்வேறு மட்டங்களில் நடந்த பேச்சுக்களின்போது, சிங்களப் பேரினவாதம் பற்றி அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூறினோம். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, தமிழர் தேசத்தில் அமைதியைக் கொண்டுவருவது சிங்கள அரசின் நோக்கமன்று, தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து, தமிழரின் வளங்களை அழித்து, தமிழரை அடிமைகொண்டு, அழித்தொழிப்பதுதான் சிங்கள அரசின் நோக்கம் என்பதை அன்று இந்தியாவிற்கு எடுத்துரைத்தோம்.

இதனால், தமிழ் மக்கள் தமது மண்ணிலேயே பெரும் அழிவுகளையும் அனர்த்தங்களையும் சந்தித்தனர். அன்று இந்தியா இழைத்த தவறை இன்று சர்வதேசமும் இழைத்து நிற்கிறது. சிங்கள அரசின் சாதுரியமான, சாணக்கியமான, பரப்புரைகளுக்குப் பலியாகி, சமாதான முயற்சிகளுக்குப் பாதுகாவலனாக நின்ற நாடுகளே, எமது விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டிருக்கின்றன. இதில் வேதனையான, ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்னவென்றால் ஒரு காலத்தில் எம்மைப் போன்று தமது சுதந்திரத்திற்காகப் போராடிய தேசங்களும் எம்மைப் பயங்கரவாதிகளாகப் பட்டஞ்சூட்டியமைதான்.

**இராணுவ அடக்குமுறை என்ற அணுகுமுறை மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை மகிந்த அரசு இனியும் உணர்ந்துகொள்ளப் போவதில்லை.**

★★★★

இராணுவ அடக்குமுறை என்ற அணுகுமுறை மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை மகிந்த அரசு இனியும் உணர்ந்துகொள்ளப்போவதில்லை. இராணுவ மேலாதிக்கத்தை எட்டிப்பிடிக்கவேண்டும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துச் சிங்களமயமாக்கி விடவேண்டும் என்ற ஆதிக்கவெறியும் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து அகன்றுவிடப்போவதில்லை. தொடர்ந்தும் கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டி, உலகெங்கிலிருந்தும் அழிவாயுதங்களையும் போராயுதங்களையும் தருவிக்கவே மகிந்த அரசு முனைப்புடன் செயற்படுகிறது. எனவே, மகிந்த அரசு தனது தமிழின அழிப்புப்போரைக் கைவிடப்போவதில்லை.

★★★★

தமிழரின் தேசியப் பிரச்சினையை நீதியான முறையிற் சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதிப்பாடும் தென்னிலங்கையில் எந்த அரசியற் கட்சியிடமுமில்லையென்பது கடந்த அறுபது ஆண்டுகளில் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது. தமிழரின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளவும் தென்னிலங்கைக் கட்சிகள் தயாரில்லையென்பதும் இன்று சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என ஆளும்கட்சி அடம்பிடிப்பதும் தீர்வுத்திட்டமே வேண்டாம் என மஞ்சள், சிவப்புக் கட்சிகள் பிடிவாதமாக நிற்பதும் கடந்தகால நிலைப்பாடுகளிலிருந்து குத்துக்கரணம் அடித்து, அரசின் போர் நடவடிக்கைக்கும் ஆதரவு, சமாதான முயற்சிகளுக்கும் ஆதரவு எனப் பிரதான எதிர்க்கட்சி எதையும் தெளிவாகக் கூறாது இழுவல் மொழியில் நழுவிக் கண்ணாம்பூச்சி விளையாடுவதும் இதனைத்தான் தெளிவுபடுத்துகின்றன.

இதன்மூலம் சிங்கள அரசியற் கட்சிகள் அனைத்தும் அடிப்படையில் தமிழின விரோதப் பேரினவாதக் கட்சிகள் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படியான இனவாதக் கட்சிகளிடமிருந்து யாரும் தீர்வை எதிர்பார்த்தால், அது அரசியல் அசட்டுத்தனமேயன்றி வேறொன்றுமன்று.

★★★★

உலக நாடுகள் தமது சொந்தப் பொருளாதாரக் கேந்திர நலன்களை முன்னெடுக்கின்ற போதும் மனித உரிமைகளுக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் மதிப்புக்கொடுக்கத் தவறுவதில்லை. இந்தப் பிரபஞ்சமும் சரி, மனித வாழ்வியக்கமும் சரி, உலக உறவுகளும் சரி தர்மத்தின் சக்கரத்திலேயே இன்னமும் சுழல்கின்றன. இதனால்தான், விடுதலைக்காகப் போராடிய கிழக்குத்தீமோர், மொன்ரிநீக்ரோ போன்ற தேசங்கள் சர்வதேசத்தின் ஆதரவோடும் அனுசரணையோடும் புதிய தேசங்களாக அடிமை விலங்கை உடைத்தெறிந்துகொண்டு விடுதலை பெற்றன. கொசோவோ போன்ற தேசங்களின் விடுதலைக்காகவும் சர்வதேசம் தொடர்ந்தும் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. இருப்பினும், எமது தேசியப் பிரச்சினையிற் சர்வதேச நாடுகளின் நகர்வுகளும், நடவடிக்கைகளும் எம்மக்களுக்குத் திருப்தி தருவனவாக அமையவில்லை. இந்நாடுகள் மீது எம்மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்று தகர்ந்துபோயிருக்கிறது.

இந்நாடுகளின் நடுநிலைச் செயற்பாட்டிலே இன்று பெரும் கேள்விக்குறி எழுந்திருக்கிறது.

## கழுத்து வெட்டியின் வழக்கு ஒத்திவைப்பு

பிரித்தானியாவிலுள்ள சிறீலங்கா உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக கடமையாற்றிய இனப்படுகொலை இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் பிரியங்க பெர்ணான்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, டிசெம்பர் மாதம் 6ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத்



தெரிவிக்கப்படுகின்றது. பிரித்தானியாவிலுள்ள சிறீலங்கா உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் கடந்தாண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி நடைபெற்ற சிறீலங்காவின் 70வது சுதந்திரத்தினக் கொண்டாட்டத்தின் போது, அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை படுகொலை செய்வதாக அச்சுறுத்திய சம்பவம் தொடர்பிலேயே, இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## மாலிக்கு சென்றுள்ள இனப்படுகொலை இராணுவம் !

மாலி நாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான பணிகளில் ஈடுபடுவதற்காக சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தை சேர்ந்த 243 பேர் கடந்த வாரம் பயணமாகியுள்ளனர். போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான இராணுவத்தளபதி சவேந்திர டி சில்வா சிறீலங்காவின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டதற்கு எதிராக, சிறீலங்காப் படையினரை மேலதிகமாக ஐ.நா. சமாதான படையில் ஈடுபடுவதற்கு



அனுமதிப்பதில்லை என்று கூறப்பட்டிருந்த நிலையில், தற்போது இந்தப் படையினர் பயணமாகியுள்ளனர்.

விஜயபாகு படை றெயிமென்ட், வைத்திய, பொறியியல் மற்றும் சேவைப் படையணிக்கு உட்பட்ட 20 அதிகாரிக



ளும், ஏனைய தரத்திற்கு உட்பட்ட 223 படையினரும் மாலியில் பணியில் ஈடுபடவுள்ளனர். இவர்களை அழைத்துச் செல்வதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் எதியோப்பியா விமானசேவைக்கு உட்பட்ட 767 – 300 ரக போயிங் விமானம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவர்களை வாழ்த்தி வழியனுப்புவதற்காக இனப்படுகொலை இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் சிலர் விமான நிலையத்திறந்கு சென்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# செய்திகளும் எழும் கேள்விகளும்



திருமகள்

**செய்தி:-** கல்முனை பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விவகாரத்தில் முஸ்லிம்களுக்கு சார்பாக நடந்து கொள்ளும் சம்பந்தன் வாப்பாவின் மரபணுவைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்று கருணா என்கின்ற விநாயகமூர்த்தி முரளீதரன் தெரிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** *அது ஒரு புறம் இருக்கட்டும். தமிழ் மக்களை அழித்த கோத்தபாய ராஜபக்சவை ஆதரித்துப் பிரச்சாரம் செய்த கருணா தாத்தேயின் மரபணுவை எந்த வாப்பாவைக் கொண்டு நாங்கள் பரிசோதனை செய்து பார்ப்பது?*

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகப் 'பிரபாகரன் சேருக்கு' தான் நாற்பத்திரண்டு கடிதங்களைப் பரிமாறியதாகவும், அவற்றைத் தேவையேற்பட்டால் பகிரங்கப்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் சந்திரிகா குமாரதுங்க அம்மையார் தெரிவித்திருக்கின்றார்.

**எழும்கேள்வி:-** *இந்தக் கடிதங்களை 1999ஆம் ஆண்டு தான் ஆங்கிலத்தில் எழுதிய நயவஞ்சனை அரசியல் என்ற நூலிலும் பின்னர் 2004ஆம் ஆண்டு ஆங்கிலத்திலும், 2005ஆம் ஆண்டு தமிழிழும் எழுதிய போரும் சமாதானமும் என்ற நூலிலும் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டு விட்டாரோ? ஒரு வேளை தமிழர்களுக்கு செலெக்டிவ் அம்னீசியா என்கின்ற தெரிவு செய்யப்பட்ட மறதி என்ற நோய் ஏற்பட்டிருப்பதாக சந்திரிகா அம்மையார் கருதுகின்றாரோ?*

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** சஜித் பிரேமதாசா தோற்கடிக்கப்பட்டுத் தமிழர்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு மறுக்கப்பட்டால், சர்வதேச சட்டங்களின் கீழ் வெளியக சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கும் உரிமை தமிழர்களுக்கு இருப்பதாக தேர்தலுக்கு முன்னர் இரா.சம்பந்தன் எச்சரித்திருந்தார்.

**எழும்கேள்வி:-** *தேர்தலில் சஜித் பிரேமதாசா தோற்கடிப்பட்டு விட்டார். பிறகென்ன? தனிநாட்டுப் பிரகடனத்தை எப்பொழுது சம்பந்தன் அவர்கள் மேற்கொள்ளப் போகின்றார்?*

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** எதிர்காலத்தில் சிறீலங்கா அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளும் என்று ஏபிரகாம் சுமந்திரன் அவர்கள் அறிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** *இன்னும் சுமந்திரனுக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவில்லையா? அப்படியென்றால் எந்த அடிப்படையில் அமைச்சருக்குரிய ஆயுதம் தாங்கிய சிறப்பு அதிரடிப் படைப் பாதுகாப்புடன் வலம் வருகின்றார்?*

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** சஜித் பிரேமதாசாவைத் தோற்கடிப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குக் கோடிக் கணக்கில் பணம் வழங்கி அவருக்கு ஆதரவாக அவர்களை ரணில் விக்கிரமசிங்க பிரச்சாரம் செய்ய வைத்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** *இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துக் கருணாவை வளைத்து இயக்கத்தையே உடைத்த ரணிலிற்கு சஜித்தை வீழ்த்துவது என்ன கடினமான காரியமா?*

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** அரச செயலகங்களில் தனது படங்களை வைக்க வேண்டாம் என்று கோத்தபாய ராஜபக்ச உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** *அது எப்படி அண்ணன் மகிந்த ராஜபக்ச இருக்கும் பொழுது தம்பியின் படத்தை அரச செயலகங்களில் வைப்பது?*

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** சோனியா காந்திக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆபத்து இருப்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் கப்பல்துறை மத்திய அமைச்சர் ரி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** *சோனியா காந்தி இன்னமும் இந்தியாவில் தான் இருக்கின்றாரா?*

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### மன்னார் கடலில் இளம் குடும்பஸ்தர் பலி!



மன்னார் முத்தரிப்புத்துறை கடலில் பழுதடைந்த படகின் வெளி இணைப்பு இயந்திரத்தை திருத்த முற்பட்ட இளம் குடும்பஸ்தர் இயந்திரத்தின் கூரிய கம்பி கழுத்தில் குத்தி உயிரிழந்த சம்பவம் கடந்த 12ம் திகதி இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் கொக்குப்படையான் கிராமத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தையான றெஜினோல்ட் (வயது–28) என தெரியவந்துள்ளது. முத்தரிப்புத்துறையைச் சேர்ந்த மீனவர்களின் படகு இயந்திரம் கடலில் பழுதடைந்துள்ளது. இந்த நிலையில் குறித்த படகின் வெளி இணைப்பு இயந்திரத்தை திருத்தி அவர்களுக்கு உதவி செய்யும் முகமாக குறித்த குடும்பஸ்தர் கடலில் சென்று குறித்த வெளி இணைப்பு இயந்திரத்தை திருத்தியுள்ளார். இதன் போது குறித்த வெளி இணைப்பு இயந்திரத்தில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக அதிக குதிரை விசை கொண்ட இயந்திரத்தின் துண்டுகள் உடைந்து கை மற்றும் கழுத்துப்பகுதியில் வெட்டப்பட்ட நிலையில் குறித்த குடும்பத்தர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

### கிளிநொச்சியில் 3 வயது சிறுவன் பாம்பு தீண்டி மரணம்!

கிளிநொச்சி மலையாளபுரத்தில், 3 வயது சிறுவன் ஒருவன் பாம்பு தீண்டியதில் உயிரிழந்துள்ளான். குறித்த சிறுவன், இரவு உறங்குவதற்காக படுக்கை அறைக்குச் சென்றுள்ளார். சிறிது நேரத்துக்கு பின்னர் வீட்டுக்குள் இருந்து, கண்டங்கருவளை இனத்தைச் சேர்ந்த பாம்பு வெளியேறியுள்ளது. அந்தப் பாம்பை, சிறுவனின் தந்தை அடித்துக் கொன்று விட்டார். அதன் பின்னர் எழுந்து வந்த சிறுவன், மீண்டும் உறங்குவதற்காகச் சென்று விட்டதாகவும் தெரியவருகின்றது. இந்நிலையில், காலை சிறுவனை எழுப்பியபோது நினைவற்று இருந்ததாகவும் இதன்பின்னர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சிறுவனை எடுத்துச் சென்றபோது அவர் பாம்பு தீண்டியதில், ஏற்கெனவே உயிரிழந்து விட்டார் என்றும் வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காணாமல் போன மருத்துவ பீட மாணவன் காட்டில் சடலமாக மீட்பு!

காட்டுக்குச்சென்று காணாமல் போன இளைஞன் படுகாட்டுக்குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார். நீண்ட தேடுதலின் பின்னர் கடந்த வாரம் முற்பகல் குறித்த மாணவன் காட்டிற்குள்ளிருந்த மண் அகழப்பட்ட குழி ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குழிக்குள் தவறி விழுந்து உயிரிழந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. கடந்த வாரம் குறிசுட்டகுளம் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டிலிருந்து தடி வெட்டுவதற்காக காட்டுப்பகுதிக்கு சென்ற இளைஞனே காணாமல் போயிருந்தார். நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பாததையடுத்து, இளைஞனின் பெற்றோர்களால் கனகராயன்குளத்திலுள்ள சிறீலங்கா நாட்டுக் காவல் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் சடலாமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் யாழ் பல்கலைகழக மாணவனான 23 வயதான பாலசுப்பிரமணியம் தர்மிலன் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


### தொடருந்து மோதி உணவக உரிமையாளர் பலி!



யாழ்ப்பாணம் இந்து மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள அன்னசத்திர வீதியில் கடந்த 13ம் திகதி தொடருந்து கடவை ஊடாக கடக்க முற்பட்ட ஒருவர் காங்கேசன்துறையில் இருந்து வந்த தொடருந்துடன் மோதிப் பலியாகியுள்ளார். குறித்த நபர் விபத்துக்குள்ளாகி படுகாயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பலியானார். நாவலர் வீதியில் பொருளியல் கல்லூரிக்கு முன்பாகவுள்ள உணவகத்தின் உரிமையாளரான நிசாந்தன் (வயது 31) என்ற ஒரு பிள்ளையின் இளம் தந்தையே பலியானார். மீன் வாங்கிக் கொண்டு உந்துருளியில் வந்த நேரத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

### வாழைச்சேனையில் வீசிய காற்றினால் ஒருவர் பலி

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கறுவாக்கேணி, சுங்கான்கேணி பகுதியில் கடந்த 22ம் திகதி அதிகாலை வீசிய சுழல் காற்றினால் ஒருவர் மரணமடைந்துள்ளார். கறுவாக்கேணியில் அமைந்துள்ள தனியார் ஒருவரின் கடைத் தொகுதியை பராமரிக்கும் பாடசாலை வீதி சுங்கான்கேணியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஆறுமுகம் (வயது 62) என்பரே உயிரிழந்துள்ளார். கடைத் தொகுதியை பராமரிக்கும் குறித்த நபருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போது வீசிய சுழல் காற்றினால் வீட்டின் கூரை வேறொரு இடத்தில் வீசப்பட்ட போது வீட்டின் சுவர் பகுதி உயிரிழந்தவரின் தலையில் விழுந்தமையால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.



சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
THE TRAVEL COMPANY
Tél: 01 34 29 08 51 / Mob: 06 58 75 05 09
thetravelcompanyparis@gmail.com




# காலத்தைவென்ற நாயகர்களின் நினைவு சுமந்த மாதம் கார்த்திகை

காலத்தைவென்ற நாயகர்கள் எமது மாவீரர்களின் நினைவு சுமந்த இந்த கார்த்திகை மாதம் முழுவதும் தமிழர்களின் தேசிய மாதமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். என்ன நோக்கத்திற்காக அவர்கள் தமது உயிர்களை பிரிந்தார்களோ அவர்களை நினைப்பது அவர்களின் அர்ப்பணிப்பிற்கு மதிப்பளிப்பதாகும்.

தமிழர்களின் தேசியப்பூவாக, கார் காலத்தில் மலர்ந்திடுவதும், தமிழீழத் தேசியக்கொடியின் வர்ணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதும், தமிழீழத் தேசியத் திருநாளாம் மாவீரர் நாள் வருகின்ற திங்களில் கொடிபரப்பி பூத்துக் குலுங்குவதும், தமிழீழ தேசமெங்கும் பரவி முகிழ் விடுவதுமான கார்த்திகைப் பூ பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

தமிழீழத்தில் மாவீரர் நாள் என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி தாய்நாட்டுக்காக தமது உயிரை ஈந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களையும், அவர்களோடு சேர்ந்து போரிட்டு உயிர் ஈந்த எல்லைப்படை துணைப்படை வீரர்களையும், விடுதலைப் புலிகளோடு இணைந்து உயிர் ஈந்த ஈழ புரட்சிகர மாணவர் இயக்க உறுப்பினர்களையும், மற்றும் குட்டிமணி, தங்கத்துரை போன்ற வேறு சில ஈழப்போராட்ட போராளிகளையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செய்து, பெருமைப்படுத்தும் நாள் ஆகும். இதற்குரிய நாளாக நவம்பர் 27 ஆம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் 1989 ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் ஈழப் போரில் வீரச்சாவைத் தழுவிய போராளிகளை நினைவுகூருவது, மதிப்பது தமது அடிப்படைக் கடமைகளில், கொள்கைகளில் ஒன்றாகக் கருதுகிறார்கள். தொடக்க காலங்களில் மாவீரர் நாளில் ஈகைச்சுடரேற்றுவது நள்ளிரவு 12.00 மணிக்கு என்றிருந்தது. பின்னர் அது மாலை 06.05 மணிக்கு என்று மாற்றப்பட்டு விட்டது. அதற்கும் காரணம் உள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதற் களப்பலியான சங்கர் வீரச்சாவடைந்தது நவம்பர் 27, 1982 அன்று மாலை 6.05 மணிக்கு. லெப். சங்கர் தனது தாய் நாட்டுக்காக தன் இன்னுயிரை அணைத்துக்கொண்ட அதேநாள், அதே நேரமான 6.05 மணியே தமீழீழ மாவீரர்நாளில் ஈகைச்சுடரேற்றும் நேரமானது. 1990ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரை, நவம்பர் 21 தொட்டு 27 வரையிலான ஒருவாரம் மாவீரர் வாரமாக சிறப்பிக்கப்பட்டது. 1995ம் ஆண்டிலிருந்து, நவம்பர் 25, 26, 27ம் நாட்கள் மாவீரர் எழுச்சி நாட்களாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன.

முதலாவது துயிலும் இல்லம், கோப்பாயில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் கோப்பாய் துயிலுமில்ல மண்ணில், போராளிகளின் வித்துடல்கள் விதைக்கப்பட்டதோடு, எரிக்கப்பட்டும் வந்தன. 1991ல் வித்துடல்கள் எரிக்கப்பட மாட்டாது, விதைக்கப்படும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. இதுபற்றி 1991ம் ஆண்டின் ஐப்பசி - கார்த்திகை விடுதலைப் புலிகள் ஏடு, மாவீரர்களைத் தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில், இப்போது மாவீரர்கள் விதைக்கப்பட்டு, இங்கே கல்லறைகள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எங்கள் மாவீரர்கள்.



போராட்டக் காலத்தில் மாவீரர் நாளில் பல மாவீரர் குடும்பங்கள் மாவீரர்களின் கல்லறைக்களுக்கு சென்று அஞ்சலி செலுத்துவர். கொடியேற்றுதல், ஈகைச்சுடரேற்றுதல், மலர்தூவி அஞ்சலி செய்தல் என்பன மாவீரர்நாளின் முக்கிய நிகழ்வுகளாக இடம்பெறுகின்றன. அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரையும், விடுதலை வேட்கையையும், வீர உணர்வுகளையும் தரக்கூடியதான கலைநிகழ்வுகளும், பல்வேறு நினைவுகூர் நிகழ்வுகள், உரைகளும் இடம்பெற்றன. மாவீரர் வாரத்தில் மாவீரர் குடும்பங்களின் உறுப்பினர்களும் கௌரவிக்கப்பட்டனர். 2009 ஈழப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின் சிறீலங்காவின் ஆக்கிரமிப்புப் படைகளினால் மாவீரர்நாள் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டும், மாவீரர்நாள் நினைவு நிகழ்வுகள் தடைசெய்யப்பட்டன.

புலம்பெயர் நாடுகளிலும் தமிழீழத்தில் கடைப்பிடிக்கப்படும் அத்தனை முறைகளும் மாவீரர்நாளில் கடைப்பிடிக்கப்படுகிறது. தற்போது சில ஆண்டுகளாக அந்த நிலையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பெற்று மாவீரர் நாளான நவம்பர் 27ம் நாளிலேயே அனேகமான புலம்பெயர் நாடுகளில் மாவீரர்நாள் நிகழ்கிறது.

‘உங்கள் கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்,
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும் சந்ததி தூங்காது
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும் புலிகளின் தாகங்கள் தீராது
எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்
உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது உரைத்தது தமிழீழம்
அதை நிரைநிரையாகவே நின்றினி விரைவினில் நிச்சயம் எடுத்தாழ்வோம்.
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர(சு) என்றிடுவோம்
எந்த நிலைவரும் போதிலும் நிமிர்வோம் உங்கள் நினைவுடன் வென்றிடுவோம்.’

உலகத் தமிழர் அனைவரும் மாவீரர் நாளன்று தமிழ் மக்களைக் காக்க இன்னுயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் அதேவேளையில், அவர்கள் கண்ட தமிழீழக் கனவை நனவாக்க தொடர்ந்து உழைப்போம் என்று உறுதியெடுத்துக் கொள்ளவும் வேண்டும். அவர்களுக்குச் செய்யும் அஞ்சலியாக இருக்கமுடியும்.

‘கிழக்கில் இருந்து’ எழுவான்

## தேசமெங்கும் மிளிரும் விடுதலை விளக்குகள்

விழிசொரிந்த கண்ணீரில்
கல்லறைகள் நனைந்த
காலமெங்கே..?
மாவீரர் துயிலும்
இல்லங்கள் எங்கே..?
தூய ஒளியிலே
உம் முகம் கண்ட
விழிகள் இங்கே..?

தடயங்கள்,
சுவடுகள் இல்லை
மாவீரரே நீர் கொண்ட
தமிழீழ தாகம்
நூற்றாண்டுகள் கடந்தும்
உம்மை பூசிக்கத்
தோணும்

இதயம் சுமக்கும்
இறவாத வீரராய்
தேசமெங்கும்
மிளிரும் விடுதலை
விளக்குகளே...
உம் விடுதலை சக்தி
அபூர்வம்
உம் நாமம்
இனிமை மதுரம்
விதைப்பில் தீரம்
எம் நெஞ்சில் வீரம்
யுகங்கள் கடக்கும்
தலைமுறைகள் மாறும்
என்றும் உங்கள்
நினைவுகள் நிலைக்கும்.

- தங்கராசா சுதர்சன்
(பரிஸ்)





# கோத்தபாய பதவிக்கு வந்த பின்னர்

# ஒலிகளும் எதிரொலிகளும்

சிங்கள அரசு தான் மாறியிருக்கிறது. சிங்கள அரசாங்கம் மாறவில்லை. எனவே தெற்கிலிருந்து நீதியான தீர்வு வரும் என்று நம்ப முடியாத நிலையில், சர்வதேசத்திடமிருந்தே தீர்வினை பெற வேண்டிய நிலையில் இருக்கிறோம்.



– வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக கடந்த 1005 நாட்களாக போராடிவரும் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர்.

♦ காலி தலாபிட்டிய பள்ளிவாசல் மற்றும் இரத்தினபுரி நிவித்திகல –கெட்டனிகேவத்த பள்ளிவாசல் ஆகியவற்றின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இரு பள்ளிவாசல்கள் மீதும் கற்கள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதன்போது குறித்த பள்ளிவாசல்களின் யன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.?

நான் பிரதமராகப் பதவி வகித்த காலப்பகுதியில் புகழ்ச்சி மற்றும் பாராட்டுக்களைப் போன்றே, பெருமளவான விமர்சனங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. நல்லதைப் போன்றே கெட்டதையும் கேட்ட வேண்டியிருந்தது. என்னைப் போற்றிய, தூற்றிய, பாராட்டிய, விமர்சித்த அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றிகூறுகின்றேன்.



– பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்பாக ரணில் வெளியிட்டிருந்த விசேட ஊடக அறிக்கையில்.

♦ கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த ஊழல் வழக்குகள் அனைத்தும் கைவிடப்பட்டன. அவர் வெளிநாடு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் விலக்கிக் கொள்ளப்பட்டது.

புதிய ஜனாதிபதி தமிழ் மக்களது கருத்து வெளிப்பாட்டுக்கு மதிப்பளித்து செயற்படவேண்டும். அவர் அவ்வாறு செயற்படுவார் என நம்புகின்றேன். அவ்வாறு செயற்படுவதன் மூலம் நாம் அனைவரும் இலங்கை நாட்டின் சமமான குடிமக்கள் எனும் உணர்வு ஏற்படும் என்பதையும். நாடு பிளவுபடாது பாதுகாக்கப்படும் என்பதையும் புதிய ஜனாதிபதிக்கும் அவர் சார்ந்தோருக்கும் தமிழ் மக்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

– தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோத்தபாயவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில்.

♦ சிறீலங்காவின் அனுபவம் மிக்க, முன்னணி குற்றங்கள் தொடர்பிலான மர்மங்களை துலக்கிய குற்றப் புலனாய்வாளரான தற்போதைய சி.ஐ.டி. எனப்படும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட காவல் அத்தியட்சர் ஷானி அபேசேகர அந்த பதவியில் இருந்து நீக்கி, தெற்கு பிரதிப் காவல் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் விசாரணை நடத்திக் கண்டுபிடித்த லசந்த, வஸீம் தாஜுதீன், 5 மாணவர் உள்ளிட்ட 11 பேர் காணாமல் சம்பவங்களுடன் தற்போதைய ஆட்சியில் உள்ளவர்களே சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, குறித்த வழக்குகளை விசாரணை செய்து வரும் சிஐடி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படலாம் என்று எதிர்பார்கப்படுகிறது.




கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைந்து அமைச்சு பதவிகளை பெற்று, சேவையாற்ற வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள். எதிர்காலத்தில் அரசில் இணைந்து அமைச்சு பதவிகளை பெற்றுக் கொள்வது குறித்து பரிசீலனை செய்யவுள்ளோம்.

– தனியார் தொலைக்காட்சியொன்றின் நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

♦ சர்வதேச செய்தி நிறுவனம் இலங்கை ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச தேர்ந்தெடுக்கப்பட்ட போது அவரை 'தமிழ் இன ஒழிப்புக்கு காரணமான இராணுவத் தலைவர்' என விபரித்த பிபிசி செய்தி நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க கோரி சுரகிமு சிறீலங்கா மற்றும் சிங்களே அபி அமைப்பு உள்ளிட்ட நான்கு அமைப்புக்கள் பிரித்தானிய பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளன. அத்தோடு கொழும்பு 7 பௌத்தாலோக மாவத்தையில் உள்ள பிரித்தானிய தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவருடன் பேசுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

– தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா

♦ தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கடந்த 16ம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றதிலிருந்து ஒரு வாரத்திற்குள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பதிவாகிய வன்முறைகளை பட்டியல்படுத்தியுள்ளது. அதற்கமைய சிறீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் 35 வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ள அதேவேளை, தேசிய மக்கள் சக்தி சார்பில் எவ்வித வன்முறைகளும் பதிவாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 17 தேர்தல் மாவட்டங்களிலும் 45 வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. களுத்துறை மாவட்டத்திலேயே அதிகளவான வன்முறைகள் பதிவாகியுள்ளன.

சிறுபான்மையினரின் வாக்குகளின்றி, இந்த நாட்டில் அரசாங்கமொன்றை உருவாக்க முடியாதென்ற கருத்து நிலவியிருந்ததாகவும் ஆனால் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள், அந்தக் கருத்தைத் தவிடுபொடியாக்கி உள்ளது. இந்த நாட்டுக்கு இப்போது, சிறந்த தலைமைத்துவமொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அதனால், பொதுபல சேனா என்ற அமைப்பின் தேவை, இனி தேவைப்படாது.பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, எமது அமைப்பைக் கலைத்துவிடத் தீர்மானித்துள்ளோம்.

– பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

♦ உண்மையான பௌத்தர் நாட்டின் தலைவராக தெரிவாகியிருப்பதாக தீவிர பௌத்த அமைப்புக்கள் மகிழ்ச்சி வெளியிட்டு வரும் நிலையில், பாணந்துறையில் உள்ள வீதியொன்றின் பெயர்ப் பலகையில் இருந்து தமிழ் மொழி நீக்கப்பட்டுள்ளது. பாணந்துறை, சுசந்த மாவத்தையிலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது. சிறீலங்காவின் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, இந்த படங்களை தனது டுவிற்றர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.




அரசர்களுக்கு பிறகு நாட்டிற்கு சிறந்த தலைவர் ஒருவர் கிடைத்துள்ளார். இனியும் தேசத்தைப் பாதுகாக்க தேசிய அமைப்புகள் தேவையில்லை. இதன் காரணமாக எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை தொடர்ந்து நவ சிங்கள ராவய அமைப்பை கலைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

– நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர்

♦ வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா பிராந்திய அலுவலகத்திற்கு முன்பாக சிங்கள மொழியில் மாத்திரம் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக குறித்த பகுதியில் சஜித் பிரேமதாசவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ், சிங்கள மொழிகளில் பதாதைகள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில் தற்போது விமல் வீரவன்ச, மகிந்த ராஜபக்ச, பசில், கோத்தாபய ராஜபக்சவின் படங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் தனிச்சிங்கள மொழியில் வசனங்கள் அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது



52 வயதான நான் நாட்டுக்கு சிறந்ததை கொடுக்கவே முயன்றேன். நான் சிறந்த பௌத்தன். எனினும் பௌத்தர்கள் எனக்கு அதிகளவில் வாக்களிக்காது விட்டுவிட்டனர். தேர்தல் பிரச்சாரக் காலத்தில் நான் சகலரையும் நம்பினேன். எனது கட்சியின் தலைமை எனக்கு துரோகம் செய்தது. எனக்கு உரிய பணத்தை கட்சி வழங்கவில்லை. நான் தற்போது கடனாளியுள்ளேன். தேர்தல் பிரச்சாரத்திற்கு பணமின்மையால் நெருக்கடிகளை எதிர்கொண்டேன். எனக்கு துரோகம் செய்யப்பட்டுள்ளதாக உணர்கிறேன். சிலர் பாம்புகளை போல செயற்பட்டனர்.



– சஜித் பிரேமதாசா தனக்கு மிகவும் நெருக்கமான அரசியல்வாதிகளை அழைத்து சந்திப்பொன்றை மேற்கொண்டபோது.

## இனப்படுகொலையாளிகளின் மீள் வருகை

## சிறீலங்காவில் மீண்டும் இராணுவ ஆட்சி?




இனஅழிப்புப் போருக்கான கட்டளைகளை வழங்கிய முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, தற்போது சிறீலங்கா ஜனாதிபதி.

♦ ♦ ♦



இனஅழிப்புப் போரைத் தலைமைதாங்கி வழிநடத்திய முப்படைகளின் தளபதியும் முன்னாள் ஜனாதிபதியுமாகிய மகிந்த ராஜபக்ச, தற்போது சிறீலங்காவின் பிரதமர்.

♦ ♦ ♦



இனஅழிப்புப் போரில் 53வது படையணிக்கு தலைமை தாங்கி களமுனையில் இருந்து கொண்டு பெரும் இனஅழிப்பைச் செய்த மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, தற்போது பாதுகாப்பு செயலாளர்.

♦ ♦ ♦



இனஅழிப்புப் போரில் பின்னணியில் இருந்து ஆட்கடத்தல்கள், படுகொலைகள் என துணை இராணுவமாகச் செயற்பட்ட ஈ.பி.டி.பி. குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது கடற்தொழில் மற்றும் நீரியல்வள மூலங்கள் அமைச்சர்.

♦ ♦ ♦



இனப் படுகொலையை களத்தில் நின்று வழிநடத்தி சர்வதேச நாடுகளால் போர்க் குற்றவாளி என அடையாளம் காணப்பட்ட சிறீலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, கடும் எதிர்ப்பிற்கும் மத்தியில் தொடர்ந்தும் அந்தப் பதவியில் கோத்தபாயவினால் தக்கவைக்கப்பட்டுள்ளார்.

# முறிந்தும் முறியாத பனை மரங்கள்



நிலவன்

**'நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிதென்று வாழுங்கள். நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்குச் சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.'**

*- தமிழீழ தேசியத் தலைவர்*

தமிழீழ தேச விடுதலை சுதந்திர இலட்சியத்தின் விடிவிற்காகவும் விடுதலைக்காகவும் மாவீரர்கள் செய்திட்ட தியாகங்களில் தான் எத்தனை எத்தனை பரிமாணங்கள். விடுதலைப் போராட்டத்தை முடக்கிப்போட நினைத்து உலக வல்லரசு நாடுகள் கூட்டாக நின்றபோதும் தாயக விடுதலை என்ற ஒற்றை இலட்சியத்திற்காக தரையில், கடலில், வான் வெளியில் களமாடி சாவிலும் சரித்திரம் படைத்தவர்கள் எம்மாவீரர்கள்.

உலகம் முழுவதிலும் இன்று ஈழத்தமிழர்கள் பரவிவாழ்ந்தாலும் அவர்களது தாயகம் தமிழீழமே ஆகும், மானுடச் சமூகம் தோன்றிய காலத்திலிருந்தே எமக்கென்று ஒரு தாய் மொழி, தாய் நிலம், தனித்துவக் கலை, பண்பாட்டு விழுமியங்கள், வேளாண்மை, வாழ்வியல், அறிவியல் என அனைத்திலும் வாழ்ந்தார்கள். சொல்லில் மட்டுமல்ல வாழ்வியல் சமூக பண்பாட்டிலும் ஒரு வரையறை ஒழுங்கைபின் பற்றி தன்னிறைவான வாழ்வை வாழ்ந்து வருபவர்கள் தமிழர்கள்.

தமிழர் சிந்தனையில், கலையும், ஆய்வும், பண்பாடும், நாகரீகமும், மொழியும், மருத்துவமும் காதலும், வீரமும் தமிழர் பண்பாட்டின் அடிப்படை உயிரையும் உடமையையும் காக்கும் வீரமறவர்களைப் போற்றுவதும் சமூகம் என்ற சேர்ந்து வாழும் பண்பாட்டின் அடையாளமாக தமிழர் தம் வாழ்வியல் கோட்பாடாகவே இன்றும் கைக்கொள்கின்ற நிலையிலும் ஓர் இனத்தின் இருப்பையும் அடையாளத்தையும் அழித்து தமிழர் சக்தி வலுவற்றதாய்ச் செய்திட பல நூறாயிரத்திற்கும் மேல் தமிழர்களின் உயிர் குடித்து இனவழிப்புச் செய்து வருவதே மிகப்பெரிய காரணம் என்பதை யாருமே மறுக்கமுடியாது.

தமிழரின் வாழ்வும் வளமும் சிதைந்து அதியுச்ச ஒடுக்குமுறையின் கொடுமைகளுக்கு உள்ளாகி 2009-ல் முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாகத் ஒரே நாளில் பல்லாயிரக் கணக்கானவர்கள் படுகொலைசெய்து அழிக்கப்பட்டார்கள். அதன் தொடர்ச்சியாகப் படுகொலைகள் நீடித்துக்கொண்டு தான் இருக்கிறது. சர்வதேச கண்ணோட்டத்துக்கும் மத்தியில் வன்னி நிலப்பரப்பில் வாழ்ந்த பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இறுதியில் முள்ளிவாய்க்கால் பகுதியிலேயே ஒன்று திரட்டி ஓர் இனத்துக்கு எதிரான மனித மீறல்கள் தொடர்ந்து ஆக்கிரமிப்பாளர்களாலும் அடக்குமுறையாளர்களாலும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது 'மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு மிதித்தது' போன்று இன்று ஈழத்தில் எம் உறவுகள் நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதே உண்மை.

**ஆலயங்களை இடித்து நிர்மூலம் ஆக்கினால் சாமி இல்லைஎன்று ஆகிவிடுமா என்ன? எங்களின் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரியதெய்வங்கள் அவர்கள். அவர்களை யாராலும் இலகுவில் அழித்திட முடியாது.**

விழுதெறிந்து விருட்சமாகும் ஆலயமான மாவீரர் துயிலும் இல்லங்களை சிங்கள அரசு இடித்துத்தரைமட்டம் ஆக்கியுள்ளது. ஆலயங்களை இடித்து நிர்மூலம் ஆக்கினால் சாமி இல்லைஎன்று ஆகிவிடுமா என்ன? எங்களின் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரியதெய்வங்கள் அவர்கள். அவர்களை யாராலும் இலகுவில் அழித்திட முடியாது.

போருக்கு முன்னரும் பின்னரும் நிகழ்ந்திடும் வலிந்துகாணாமல் ஆக்கப்படல், பயங்கரவாதப் பிரிவின் கைதும், பெண்களுக்கெதிரான வன்முறைகளும், மனித உரிமை மீறல்கள், அதிகரித்துவரும் சமூகக்குற்றங்கள் போன்றவை ஐ.நா-வின் தேவையை இன்னும் வலியுறுத்திக்கொண்டே உள்ளது. ஈழத்தில் எங்கள் உறவுகள் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்ற பொய்யான நிலையைப் பரப்புகின்றவர்களும் எங்கள் மத்தியில் வாழ்கின்றார்கள் என்பதை யாராலும் மறுக்கவும் மறைக்கவும் முடியாத உண்மை.

முப்பது வருடங்களாக தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளுக்காக ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தார்கள். இன்று யுத்தம் முடிவடைந்து 10 வருடங்கள் கடந்த நிலையிலும் யுத்தத்தின் பாதிப்புக்களை இன்றும் வடகிழக்கில் இருந்துவரும் செய்திகள் உறுதிசெய்கின்றன. தற்போது சமூகத்தில் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளாலும் உளரீதியாகப் பாதிக்கப்படுபவர்கள் அதிகம். இதில் ஆண்களைவிட பெண்கள் அதிகமான அச்சம், பதட்டம், வியர்த்தல், நித்திரை குறைவு போன்ற பதகளிப்புநிலையில் வாழ்வதாக ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னர் புலம்பெயர் ஈழத்தமிழராக தமிழீழம் என்ற பாதையில் நாம் எந்த இடத்தில் நிற்கின்றோம் என்பதற்கு முன்னாள் போராளிகளும் அவர்களின் வாழ்வும் பெரும்சாட்சி. முன்னாள் போராளிகளில் பெண் போராளிகள் சமூக ஒருங்கிணைப்பிலிருந்தும், அரசியல் தளத்தில் இருந்தும் ஓரங்கட்டி அரச படைகள் விசாரணை, வன்முறை நெருக்கீடு, தொடர் கண்காணிப்பு, அடக்குமுறை என அரசியல், பொருளாதார, சமூகரீதியில் பெரும் பதற்றத்தையும் உண்டாக்கி வருகின்றார்கள்.

முன்னாள் போராளிகளில் குறிப்பாக பெண்களைத் தனித்தனியாக அணுகி, அவர்களது தேவைகளைக் கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதற்கு வழிகாட்டி, அவர்களுக்கும் அவர்கள் சார்ந்த உறவினர்கள், சமூகத்தவர்கள் மற்றும் நிரந்தர வாழ்வாதாரத்தில் முக்கிய கவனம் செலுத்தி அவர்களது பிரச்சினைகளிலிருந்து மீட்டு விழிப்புணர்வை ஏற்படுத்திட புலம்பெயர் சமூகம் தவறியுள்ளது என்றால் தவறில்லை.

உரிமைப் போர்க்களத்தில் ஆக்கிரமிப்புப் படைகளை தாய்நிலத்தில் இருந்து விரட்டியடிக்க களமாடிய எண்ணற்ற சாதனை வீரமறவர்கள் செங்குருதி சிந்தி வரலாற்றை நிலைநிறுத்தி நிமிர்ந்து தன்மானத்தோடு வாழ்வதற்கு நின்றவர்களில் பெண்களும் உண்டு. இத்தகைய புரட்சிப் பெண் போராளிகள் பலர் உலகப் பெண்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்கின்றனர். அந்தவகையில் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் பெண்ணாக எம்மால் சாதிக்க முடியும் என்ற நேர்கொண்ட பார்வையுடன் மனித உரிமைக்காக அடக்குமுறையை எதிர்த்து நாம் போராட வேண்டிய தேவை உள்ளது.

தொடர்ச்சி 30ம் பக்கம்

## என் பிள்ளையை நினைப்பதை யார் தடுப்பது?

**'தாயகத்தில் இருந்து' உ.சாவின்**

மாவீரர்தினத்தை தாயகத்தில் நினைவு கூறுவதற்கான ஏற்பாடுகளை மக்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள். சிதைக்கப்பட்ட கல்லறைகளை பற்றைகளால் நிறைந்து போயிருக்கும் துயிலுமில்லங்களை தாமாகவே சென்று தூய்மை செய்கின்றார்கள். இளைஞர்களும் இராணுவத்தால் இடிக்கப்பட்ட கல்லறைகளை தூக்கி நிமிர்த்தி அதற்கு எழுச்சியின் வடிவம் கொடுக்கின்றார்கள். தமிழின அழிப்பு குற்றவாளி கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி ஆகியிருந்தாலும், அதன் பின்னர் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நெருக்கடிகளை கருத்தில் எடுக்காது மக்கள் துயிலுமில்லங்களை நோக்கி செல்வது ஒரு எழுச்சியின் அடையாளமாக தான் இருக்க முடியும்.



கோத்தபாயவின் வருகைக்கு பின்னர் வடக்கில் பாதுகாப்பு கெடுபிடிகள் உடனடியாகவே அதிகரித்திருக்கின்றன. இது தவிர இராணுவ கட்டமைப்பில் உடனடி மாற்றங்களும் கொண்டுவரப்படுகின்றது. குறிப்பாக முள்ளிவாய்க்கால் படுகொலையின் போது அதிகாரத்தில் இருந்த இராணுவ அதிகாரிகள் மீள அதிகாரத்திற்கு வர ஆரம்பித்திருக்கின்றார்கள். வடக்கில் உள்ள மாவட்ட படையதிகாரிகளும் விரைவில் மாற்றப்படவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இந்த படை தரப்பின் திடீர் மாற்றம் எதோ ஒரு காரணத்துக்காக தான் இடம்பெறுகின்றது என்பதனை ஊகிக்க முட்கின்றது. கோத்தபாய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் போதே வடக்கில் உள்ள இராணுவத்தின் முன்னாள் போராளிகளின் பெயர்விபரங்களை சரிபார்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இது தவிர சட்ட வைத்திய அதிகாரி சிவரூபனின் கைது, என பல திடீர் கைதுகளையும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு மேற்கொண்டிருந்தது.

மேலும் முல்லைத்தீவில் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டித்தமை குறித்தும் இது வரை ஐந்து பேரிடம் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு விசாரணைக்கு உட்படுத்தியிருக்கின்றது. ஐந்து மாதங்கள் கடந்து தற்போது மாவீரர் தினம் நடைபெறவிருக்கும் வேளையில் இந்த விசாரணை இடம்பெறுகின்றது என்றால், இந்த விசாரணையின் உள்நோக்கம் சொல்லி தெரியவேண்டியதில்லை.

தொடர்ச்சி 20ம் பக்கம்

‘தாயகத்தில் இருந்து’
**காந்தரூபன்**

# இனப்படுகொலையாளியின் மீள் வருகையும் தமிழர்களைச் சூழ்ந்துள்ள பேரச்சமும்

சர்வதேச போர்க்குற்றவாளிகளான கோத்தபாய ராஜபக்சவும் மகிந்த ராஜபக்சவும் சிறீலங்காவின் ஆட்சியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை உலகளாவிய ரீதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தீவான இலங்கையின் ஆட்சி ஈவிரக்கமற்ற கொலைகாரக் கும்பலின் கைகளில் சென்றமை குறித்து பன்னாட்டு இராஜதந்திரிகளும் அரசியல் ஆய்வாளர்களும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். ஈழத் தமிழர்களின் எதிர்காலம் தொடர்பாக அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். அதுவும் கார்த்திகை மாதத்தில் இந்த ஆட்சி மாற்றம் நடைபெற்றமை தமிழ் மக்களை ஏமாற்றமடைய வைத்துள்ளது.





உலக வரலாற்றில், இனமொன்றின் விடுதலைக்காக ஒப்பற்ற தியாகங்களைப் புரிந்த வீர மறவர்களை நினைவுகூரும் மாதம் கார்த்திகை. உலகில் எந்த இனமும் செய்யாத, செய்யத் துணியாத உச்சபட்சத் தியாகங்களைப் புரிந்தவர்களை தமிழினம் பூசிக்கும் மாதம் இது. தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு தமிழீழம் தேசத்தை உருவாக்குவதற்காகப் போரிட்ட அந்தச் சாதனை வீரர்களை, அந்தத் தியாகிகளை, அந்தப் புனிதர்களை, அந்த மாவீரர்களை உலகத் தமிழினம் போற்றிக் கௌரவிக்கும் மாதம் கார்த்திகை.

ஆம், மாவீர்களுக்குச் சொந்தமான கார்த்திகையில் சிறிலங்காவின் ஆட்சி போர்க்குற்றவாளிகளின் கைகளுக்குச் சென்றிருக்கின்றமை ஈழத் தமிழ் மக்களை மட்டுமன்றி, ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

மனிதகுல வரலாற்றில், நாகரிகங்கள் தோற்றம்பெற்ற போது, தமிழர்கள் தனித்துவமான நாகரிகத்துடன் வாழ்ந்தார்கள் என்பதை வரலாற்று ஆய்வுகள் நிரூபிக்கின்றன. இதற்கான ஆகப் பிந்திய ஆய்வாக கீழடி ஆய்வு பல உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கின்றது. உலகின் பல நாடுகளை தமிழர்களே ஆட்சி செய்தார்கள் என்பதற்கு ஏராளம் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்று மெருகூட்டப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற ஏராளமான தொழில்நுட்பங்களை முதன்முதல் கண்டுபிடித்து பயன்படுத்தியவர்கள் தமிழர்கள் என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. இதை எண்ணி தமிழினம் பெருமைகொள்ள வேண்டும். சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் காலத்திற்கு முன்னரும் தமிழினம் பெருமைமிகு பண்பாட்டுடன் வாழ்ந்தமையை பல சான்றாதாரங்கள் வெளிப்படுத்துகின்றன.

அதேபோன்று, 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி 21 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஈழத்தமிழர்கள் உலகில் பெரும் புரட்சி யுகத்தை ஏற்படுத்தினர். இதுவும் வரலாற்றில் பதிவாக்கம் பெறுகின்றது. தமிழீழ தேசியத்த் தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் இப்புரட்சி யுகம் உருவாக்கப்பட்டது. அடக்கி ஒடுக்கப்பட்ட இனத்தின் சுதந்திர விடுதலைக்காக ஒருவர் எந்தளவு உயரிய தியாகங்களைப் படைக்க முடியும் என்பதை பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் உலகுக்கு எடுத்துக்காட்டினர்.

**படுமோசமான இனவாதத் தீயில் சிக்கியிருந்த சிங்கள தேசம் கோத்தபாயவிற்கு வாக்குகளை அள்ளி வழங்கியதன் மூலம் அவர் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.**

ஆண்கள் மட்டுமன்றி, பெண்களும் கள முனையில் நின்று எதிரிகளைத் தாக்கி அழித்து படை முகாம்களைக் கைப்பற்ற முடியும் என்பதை தலைவர் பிரபாகரனின் தமிழீழப் பெண்கள் படையணி வெளிப்படுத்தியது. அடுப்பெரிக்கும் பெண்களுக்கு படிப்பெதற்கு? என உலகம் பழைமைக்குள் மண்டியிட்டுக் கிடந்தபோது, யுத்த களத்தில் பிரகாசிக்கச் செய்தமை மட்டுமன்றி, உலக இராஜதந்திரிகளுக்கு நிகராக, பெண்களை பேச்சு மேசைக்கு அனுப்பி வெற்றி கண்டவர் பிரபாகரன்.

உலக அசைவியக்கத்தில் புதிய வரலாற்றைப் படைத்து, புதிய யுகம் ஒன்றை உருவாக்குவதற்கு ஏறக்குறைய 40 ஆயிரம் வரையான மாவீரர்கள் தங்கள் உயிர்களை ஆகுதியாக்கினர். தமக்கான அன்றி, தம் இனத்திற்காக உயிர்க்கொடை செய்த அந்தத் தியாகிகளை நினைவுகூரும் மாவீரர் தினம் தமிழர் வாழும் நாடுகள் எங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது.

2009 இல் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து மாவீரர் தினத்தை அனுஸ்டிப்பது கேள்விக்குறியானது. மாவீரர் துயிலும் இல்லங்களை படையினர் இடித்து அழித்து துவம்சம் செய்தபோதிலும் தமிழ் மக்கள் மனங்களில் இருந்து மாவீரர் கனவுகளை சிங்களச் சேனைகளால் துடைத்தழிக்க முடியவில்லை. கடந்த சில வருடங்களாக துயிலும் இல்லங்களை தாங்களாக வடிவமைத்த தமிழ் மக்கள் அதே எழுச்சியுடன் தமது காவல் தெய்வங்களுக்கு வணக்கம் செலுத்தினர். கடந்த வருடம் (2018) கிளிநொச்சியில் நடைபெற்ற மாவீரர் தினத்தை நேரடி ஒளிபரப்பு செய்யும் அளவிற்கு மாவீரர் தினம் மீள் எழுச்சி பெற்றிருந்தது.

ஆனால், அந்த நிகழ்வுகளுக்கு இப்போது மீண்டு பேரிடி வீழ்ந்திருக்கின்றது. சிறிலங்காவில் மீண்டும் காட்டாட்சி உருவாக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களைக் கொடூரமாக அழித்த, சர்வதேச போர்க்குற்றவாளிகளான (உலகில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்துபவர் சர்வதேச போர்க்குற்றவாளி) கோத்தபாய ராஜபக்சவும் மகிந்த ராஜபக்சவும் சிறீலங்காவின் ஆட்சியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். அதைத் தொடர்ந்து மகிந்த ராஜபக்ச பிரதமராகத் தெரிவாகியிருக்கின்றார். பயங்கரவாதத்திற்கு எதிரான மனிதாபிமான போர் என்ற பேரில் தமிழின அழிப்பு யுத்தத்தை நடத்திய இவர்களின் ஆட்சி மீண்டும் உருவாகியதால் தமிழ் மக்கள் மீண்டும் அச்சத்துடன் வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

சிறிலங்காவின் ஆட்சி ராஜபக்ச கும்பலிடம் சென்றமை குறித்து தமிழ் மக்கள் அச்சமும் கவலையும் அடைவதற்கு காரணம் என்ன என்பது சிறு பிள்ளைக்கும் தெரியும். 2005 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஸ்கரித்தமையால் ஆட்சிக்கு வந்த ராஜபக்ச கும்பல் தொடர்ந்து 10 வருடங்கள் ஆட்சி நடத்தினர். மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகவும் கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் அவர்களின் ஏனைய சகோதர்கள் அமைச்சர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகளாகவும் பதவி வகித்தனர்.

அப்போது இவர்களின் காட்டுமிராண்டித்தன ஆட்சி மூலம் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தனர்.

தொடர்ச்சி 23ம் பக்கம்

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM



# தாயகம் சென்று பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு மருத்துவப் பணி செய்ய ஆவலோடு இருக்கின்றேன்!

புலம்பெயர் மண்ணில் பிறந்த எத்தனையோ தமிழ் இளைஞர், யுவதிகள் தற்போது உயர் தொழில்களில் நிபுணத்துவம்பெற்று எமது தமிழ் இனத்திற்கே பெருமைசேர்த்து இலைமறைகாயாக வாழ்ந்து வருகின்றார்கள். அந்தவகையில் பிரான்சு பரிசின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான vigneux sur seine நகரில் வசிக்கும் சத்திர சிகிச்சைப் பிரிவில் விசேட நிபுணத்துவம் பெற்ற உணர்வகற்றியல் (Anesthésie-réanimation) **மருத்துவர் அன்ரன்ராஜ் வினோத்** அவர்கள் அண்மையில் எமது ஈழமுரசு இதழுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல் இது.

**சந்திப்பு : கந்தரதன்**

**கேள்வி: உங்களுக்கு மருத்துவத்துறையில் எவ்வாறு ஈடுபாடுவந்தது என்பதைக் கூறுங்கள்?**

**மருத்துவர்:** எனக்கு 6 வயதாக இருந்தபோதே மருத்துவராக வருவேன் என்று சொல்லிக்கொள்வேன். அப்போதிருந்தே நான் மருத்துவராக வரவேண்டும் என்ற உறுதியை வளர்த்துக்கொண்டேன். எனது பெற்றோரும் அதற்கு உந்துசக்தியாக இருந்துவந்துள்ளார்கள்.

நான்கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு உயர்தரத்திற்குச் செல்லும்போது மருத்துவப்பிரிவைத் தெரிவுசெய்தேன். அப்படியே தொடர்ந்து இந்நிலைக்கு வந்துள்ளேன். 2008 ஆம் ஆண்டு மருத்துவப் பிரிவில் சித்தியடைந்து 6 வருடங்கள் மருத்துவமனையில் பயிற்சியில் ஈடுபட்டேன். சமநேரத்தில் பல்கலைக்கழகத்திலும் மருத்துவக் கற்கையினை மேற்கொண்டு அதன்பின்னர் மேலும் ஒரு தேர்வில் சித்தியடைந்தேன். அதன்பின்னர் Anesthésie-réanimation பிரிவினைத் தெரிவுசெய்து மேலும் 5 வருடங்கள் உள்ளகப் பயிற்சியாளராக (Internship) வேலை பார்ப்பது போன்று மருத்துவமனைகளில் பணியாற்றினேன். தற்போது அனைத்துத் தேர்வுகளையும் எழுதி முடித்து சித்தியடைந்து மருத்துவராகப் பணியாற்றுகின்றேன்.

**கேள்வி: மருத்துவமனைகளில் நீங்கள் உள்ளகப் பயிற்சியாளராக (Internship) வேலை பார்த்த காலத்தில் உங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்?**

**மருத்துவர்:** மருத்துவமனையில் நான் பணியாற்றிய வேளையில் பல அனுபவங்கள் இருக்கின்றபோதும் முக்கியமாக ஒன்றைச்சொல்லவேண்டும். அதாவது, பல தமிழ் மக்கள் நோயாளர்களாக வரும்போது, அவர்களுக்கு மொழிப்பிரச்சினை இருக்கின்றது. பிரெஞ்சுமொழி அவர்களுக்குத் தெரியாத நிலையில் அவர்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்ளுகின்றார்கள். அவர்கள் என்னைக் கண்டவுடன், நீங்கள் தமிழா என்று ஆவலுடன் கேட்பதை என்னால் உணரமுடிந்தது. மொழியறிவு என்பது எவ்வளவு முக்கியமானது என்பதையும் நான் அறியமுடிந்தது. அதன்பின்னர், நான் அங்கு இல்லாவிட்டாலும், தமிழ் நோயாளர்கள் வந்தால் உடனே எனக்குத் தொலைபேசியில் அழைப்பார்கள். நான் அருகில் இல்லை என்றால், தொலைபேசியின் வாயிலாக நான் அவர்களுக்கு மொழிபெயர்த்து உதவியிருக்கின்றேன்.

அத்தோடு, சத்திரசிகிச்சையின் பின்னர் மயக்கத்தில் இருக்கும் நோயாளரை மயக்கம் தெளிவித்து எழுப்பும் வரை அவர்களின் வலியைப்போக்கி அனைத்து விடயங்களையும் நாங்களே கவனிக்கவேண்டும். அவ்வாறானவர்களுக்கு வரும் பிரச்சினைகளுக்கும் நாங்களே பொறுப்புக்கூறவேண்டும் என்ற வகையில் மிகவும் கவனமாக அவர்களைக் கையாளவேண்டும். அதாவது சத்திரசிகிச்சைக்கு முன்னும் சத்திரசிகிச்சையின் பின்னும் நாங்களே குறித்த நோயாளரை கவனிக்கவேண்டும். சத்திர சிகிச்சையை செய்யும் விசேட மருத்துவர் சத்திரசிகிச்சையை மட்டுமே செய்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி: பிரான்சில் ICU எனப்படும் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு எவ்வாறான நோயாளர்கள் கொண்டுவரப்படுகின்றார்கள்?**

**மருத்துவர்:** தீவிர சிகிச்சைப் பிரிவு என்று சொல்லும்போது, அதிகமாக விபத்துக்களில் படுகாயமடைபவர்களே கொண்டுவரப்படுகின்றார்கள். அதிகமாக உந்துருளிகளில் ஏற்படும் விபத்துக்களிலேயே வருவார்கள். பலர் மயக்கமடைந்த நிலையில் இருப்பார்கள். இவர்களில் பலரும் மிக இளவயதுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கொண்டுவரப்படுபவர்களில் 70 வீதமானவர்கள் காப்பாற்றப்படுகின்றார்கள். அத்தோடு, நீண்டகாலம் அதாவது வருடக்கணக்காக மருத்துவமனைகளில் சிகிச்சை பேறவேண்டிய நிலையும் இவர்களுக்கு ஏற்படுகின்றது. இவர்களுடைய கல்வி மற்றும் தொழில் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறானவர்களின் குடும்பத்தினருக்கு அமைதியான முறையில் நாங்கள் ஆறுதல் வார்த்தைகளைக் கொடுக்கவேண்டிய தேவையும் உள்ளது. அதுமட்டுமல்லாமல், நோயாளரின் நிலை, அவர்களுக்கு எவ்வாறான வைத்தியம் பார்க்கப்படுகின்றது, எவ்வளவு காலம் எடுக்கும் போன்ற விடயங்கள் எல்லாம் பகிரப்படவேண்டும். இ வாறு வரும் பிரெஞ்சு மக்கள் உட்பட அனைத்து இன மக்களுக்கும் நாங்க ஆறுதல்களைப் பகிர்ந்துவருகின்றோம் குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல் கா மடைந்து சிகிச்சை பெறுபவருக்கும் மனோ தத்துவ நிபுணர்கள் ஆலோசனைகளை யும் ஆறுதல் வார்த்தைகளையும் பகிர்வ கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உந்துரு விபத்துக்கள் மகிழுந்துகளின் தவறுக னாலேயே ஏற்படுகின்றன. மகிழுந்து ளில் செல்வோர் உந்துருளிகளைக் கவனி காத நிலையிலேயே இந்த விபத்துக்க அதிகமாக ஏற்படுகின்றன.

மிதிவண்டிகள், துரோத்துநேற்றர்க போன்றவிபத்துக்கள் மற்றும் குழுமோத கள் அவற்றோடு திருடர்களின் மோ மான தாக்குதல்களினாலும் அதிகமா வர்கள் படுகாயமடைந்த நிலையில் கொண் வரப்படுகின்றார்கள்.

விபத்தினால் நீண்டகாலம் நடக்கமுடி யாமல் இருக்கும் நோயாளர்களுக்கு kin என்று சொல்லப்படுகின்ற உடற்பயி சியும் வழங்கப்படுகின்றது. இவ்வாறா விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு அனை வரும் ஒழுங்கான போக்குவரத்து வி களை பின்பற்றவேண்டும் என்ற வேண் கோளையும் இங்கே நான் முன்வைக் விரும்புகின்றேன்.

**கேள்வி: மருத்துவமனையில் நீங்க இணைந்து பணியாற்றியபோது ஆர பத்தில் உங்களுடைய மனநிலை எ வாறு இருந்தது?**

**மருத்துவர்:** முதல் வருடத்தில் நா கள் தனியாக இவ்வாறான விடயங் ளைச் செய்வதற்கு அனுமதிக்கமாட்டா கள். அனுபவம் வாய்ந்த வேறு வை தியருடன் இணைந்தே பணியாற்றினேன் ஆரம்பத்தில் இவற்றை எல்லாம் பார்த் போது ஒரு மன அழுத்தம் இருந்தது. பி னர் அது பழகிவிட்டது. தொடர்ந்து மூ றாவது வருடத்தில் நான் தனியே இ வாறான விடயங்களைச் செய்ய அனு மதித்தனர். அதன்பின்னர் இரவுவேலை செய்தபோது, ஓய்வுநேரம் கிடைத்தாலு தூங்கச்செல்லமாட்டேன். ஒரு பதற்ற தோடு எல்லாவற்றையும் கவனித்து கொண்டு இருப்பேன். மறுநாள் காலை யில் பகல்வேலைக்கு வரும் வைத்தி அதிகாரியிடம் இரவுநடந்த அனைத் விடயங்களையும் விபரமாகச் சொல் வேண்டும். இரவுவேலையின்போது எமக் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால், பெரி வைத்தியரிடம் தொலைபேசியில் தொடர் கொண்டு உதவி கேட்கமுடியும். அவ கள் வீட்டில் இருந்தாலும் தொலைபே யில் அதற்குரிய வழிமுறைகளைச் சொ லுவார்கள். இதேவேளை வரும் நோய ளிகளை சிலவேளைகளில் எங்களால் கா பாற்ற முடியாமல் போய்விடும். அ வாறு நிகழ்ந்தால் அது எங்களின் தவ அல்ல. நாங்கள் முடிந்தளவிற்கு முயற் செய்வோம். மாரடைப்பு ஏற்பட்டா அதற்குரிய சிகிச்சைகளை முடிந்தளவிற் வழங்குவோம். அவ்வாறு செய்தும் அ ரைக் காப்பாற்றமுடியாமல் போகு போது அதுவும் எங்களின் தவறு அல்ல.



தொடர்ச்சி 14ம் பக்க

# மகிந்த 3 தடவை ரணில் ஐந்து தடவை


## முழுமையாக அனுபவிக்காத பதவி

மகிந்த ராஜபக்ச தனது தம்பி கோத்தபாய ராஜபக்ச முன்னிலையில் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துக் கொண்டார். அவர் பிரதமராக பதவியேற்ற மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும். 1970ம் ஆண்டு சிறீலங்கா நாடாளு மன்றத்திற்கு தெரிவான மகிந்த, மீன்பிடி, தொழிற்துறை போன்ற அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார். அவர் 2004 ஆண்டிலேயே முதன்முறையாக பிரதமர் பதவிக்கு தெரிவானார். அது முழுமையாக முடிவதற்குள் 2005ம் ஆண்டு ஜனாதிபதியாக போட்டியிட்டு வெற்றிபெற்றார். 2015ம் ஆண்டுக்கு பின்னர் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் நாடாளு மன்றத்திற்கு தெரிவான அவர், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 26ம் திகதி மறுபடியும் பிரதமாராக தெரிவானார். ஆனால் நீதிமன்றம் அது செல்லுபடியற்றதென அறிவித்ததால் பதவியைப் பறிகொடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தரிடம் இருந்து பறித்தெடுத்தார். இப்போதும் ரணிலை விரட்டிவிட்டு பிரதமாகராகப் பதவியேற்றுள்ளார். ஆனால் இதுவும் ஒரு சில மாதங்களுக்கே. ஏனெனில் அடுத்த வரும் (2020) மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றவுள்ளதாக கூறப்படுகின்றது.




இதேவேளை, சிறீலங்காவில் பல தடவைகள் பிரதமர் பதவியை வகித்த பெருமை ரணில் விக்ரமசிங்கவையே சாரும். 1993ம் ஆண்டு முதன் முறையாக பிரதமரான அவர், 1994ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்தவுடன் அவர் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இரண்டாவது தடவையாக 2001ம் ஆண்டு பிரதமராக தெரிவுச் செய்யப்பட்டார். இதனை அடுத்து 2004ம் ஆண்டு நடைபெற்ற பொது தேர்தலில் தோல்வியடைந்தார். அதன் பின்னர் 2015ம் ஆண்டு ஜனாவரி 9ம் திகதி மூன்றாவது தடவையாகவும் பிரதமரானார். எனினும் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 26ம் திகதி பிரதமர் பதவியில் இருந்து அவரை விரட்டிவிட்டு தானே பிரதமரானார் மகிந்த. நீதிமன்ற முடிவினால் ரணில் அதே வருடத்தின் டிசம்பர் மாதத்தில் ஐந்தாவது தடவையாகவும் பிரதமர் பதவியை ஏற்றார். ஆனால் தற்போது மகிந்தவினால் அவரது பதவி மீண்டும் பறிபோயுள்ளது. ஐந்து தடவைகள் பிரதமர் பதவியை வகித்திருந்தாலும் அவரால் ஒரு அரசாங்க காலத்திலேனும் பிரதமர் பதவியை முழுமையாக வகிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை என்பது குறிப்பிடதக்கது.

## சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தல்களும் பெற்ற வாக்கு வீதங்களும்



| | |
|---|---|
| 1) 1982 - ஜே.ஆர்.ஜெயவர்தன | : 52.91 வீதம் |
| 2) 1988 - ரணசிங்க பிரேமதாச | : 50.43 வீதம் |
| 3) 1994 - சந்திரிக்கா | : 62.28 வீதம் |
| 4) 1999 - சந்திரிக்கா | : 51.12 வீதம் |
| 5) 2005 - மஹிந்த ராஜபக்ச | : 50.29 வீதம் |
| 6) 2010 - மஹிந்த ராஜபக்ச | : 57.88 வீதம் |
| 7) 2015 - மைத்திரிபால சிறிசேன | : 51.28 வீதம் |
| 8) 2019 - கோத்தபாய ராஜபக்ச | : 52.25 வீதம் |

# தாயகம் சென்று பாதிக்கப்பட்ட எமது....

**கேள்வி: மருத்துவமனையில் நீங்கள் வேலை பார்க்கும் போது உங்களுக்கு மறக்கமுடியாத சம்பவம் ஏதாவது ஏற்பட்டாதா?**

***மருத்துவர்:*** *மறக்கமுடியாத சம்பவம் என்று குறிப்பிடமுடியாது. ஆனால், இரண்டுவிடயங்களை இந்த இடத்தில் குறிப்பிடவேண்டும். ஒன்று எமது பகுதியில் வசிக்கும் தமிழ் அக்கா ஒருவர் குழந்தை பெறுவதற்காக நான் வேலை பார்க்கும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவவுக்கு பிரெஞ்சுமொழி தெரியாது. அவ அச்சத்துடன் இருந்துள்ளார். அன்று எனக்கு வேலை இல்லாதபோதும், நான் மற்றொருவருக்குப் பதிலாகப் பணிக்குச் சென்றிருந்தேன். அங்கே அந்த அக்கா என்னைக் கண்டதும் அவவுக்கு பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. பின்னர் எல்லா விடயங்களையும் நான் தமிழில் கேட்டு, அந்த அக்காவுக்கு உதவிபுரிந்தேன். பின்னர் எனது தாயாரைச் சந்தித்த அந்த அக்கா, தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். உங்கள் மகனே எனக்குரிய மருத்துவ விடயங்களைச் செய்திருந்தார் என்றும் உங்கள் பிள்ளையை மருத்துவமனையில் கண்டபோது கடவுளைக் கண்டதுபோல் இருந்தது என்றும் கூறியிருந்தார். இரண்டாவது, இதயநோய்ப் பாதிப்புக்குள்ளாகிய அன்ரி ஒருவர் அடிக்கடி மருத்துவமனைக்குச் சென்று வருவார். அவவுக்கும் பிரெஞ்சு மொழி தெரியாது, கணவருக்கும் பிரெஞ்சில் மருத்துவ ரீதியில் பேசும் அனுபவம் இல்லை. மொழி பெயர்ப்புக்கு ஆட்களை அழைத்துச் செல்வது வழமை. ஆனால், பிரெஞ்சுமொழிபெயர்ப்பாளர் சரியாக மொழி பெயர்க்காததால், அவரது உடல் நிலை நன்றாகப் பாதிக்கப்பட்டது. பின்னர் அவர்களுக்காக நான் மருத்துவமனையில் கதைத்த போது, அவவின் உடல்நிலை பற்றித் தெரியவந்தது. பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். முன்கூட்டியே அவருடைய நோய்விவரம் தெரிந்திருந்தால் அவவைக் காப்பாற்றியிருக்கமுடியும். இந்த விடயங்கள் எனது மனதில் மறக்கமுடியாதவை. ஆரம்பத்தில் கூறியதுபோல் மொழிப் பிரச்சினை இவ்வாறான நிலைமைகளுக்குக் காரணமாகிவிட்டது.*



**கேள்வி: மருத்துவத்துறை மட்டுமல்லாமல் நீங்கள் வயலின் இசைப்பதிலும் வல்லவர் என்று அறிகின்றோம். அது எவ்வாறு சாத்தியமாகின்றது?**

***மருத்துவர்:*** *நான் ஆறு வயதில் இருந்து வயலின் பயின்றேன். அதனைத் தொடர்ந்து ஆர்வமாகக் கற்றுவந்தேன். சிலர் மேற்படிப்பு வந்தவுடன் இவ்வாறான கலைகளை நிறுத்திவிடுவார்கள். ஆனால் நான் அவ்வாறு நிறுத்தவில்லை. இன்றும் தொடர்கின்றேன். ஒவ்வொருவாரமும் அனைவருடனும் இணைந்து குழுவாக வயலின் இசைப்பேன். நான் வயலினில் அனைத்துப் பிரிவுகளையும் முடித்து அதற்குரிய சான்றிதழையும் பெற்றுவிட்டேன். பல முக்கிய நிகழ்வுகளில் வயலின் இசைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனை நான் பெருமையாக எண்ணுகின்றேன். தேவாலயத்திலும் ஒவ்வொரு வாரமும் திருப்பலியின் போது பாடலுக்கு வயலின் இசைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அனைத்துத் திருப்பலிகள் மற்றும் விசேட தினங்கள் என்பவற்றுக்கு நாங்கள் சென்று வயலின் இசைப்போம். 2010 ஆம் ஆண்டு பிரெஞ்சுத் தொலைக்காட்சியிலும் எமது வயிலின் இசைக் காட்சியை ஒளிபரப்பியிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. நான் மருத்துவக் கற்கையைத் தொடர்ந்தபோது, வயலின் வகுப்புக்குச் செல்ல வாய்ப்புக்கிடைக்காததால் அதனை நிறுத்த எண்ணியபோது, பிரெஞ்சு வயலின் ஆசிரியை எனது வீட்டுக்கே வந்து இதனை நிறுத்த வேண்டாம் எனக்கூறி வீட்டிலேயே வகுப்பு எடுத்தார். வயலின் இசை எனது மருத்துவக் கல்வியை ஒருபோதும் பாதிக்கவில்லை. தொடர்ந்து புத்தகம் புத்தகம் என்று படித்துக்கொண்டிருந்தால், மூளைக்கு ஓய்வுகிடைக்காமல் போய்விடும். இவ்வாறான இசைகளை இடையில் இசைப்பதன்மூலம் மூளையை இலகுவாக வைத்திருக்கமுடியும். இது நான் அனுபவத்தின் வாயிலாகக் கண்ட உண்மை.*

**கேள்வி: தாயகத்துக்குச் சென்று எமது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்கள் மருத்துவப் பணியைச் செய்வதற்கு ஒரு வாய்ப்புக்கிடைத்தால் என்னசெய்வீர்கள்?**

***மருத்துவர்:*** *நான் நிச்சயமாக தாயகம் சென்று பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு மருத்துவப் பணியைச் செய்ய வேண்டும் என்பதில் ஆவலோடு இருக்கின்றேன். எனது பெற்றோரின் ஆசையும் அதுதான். ஆனாலும், இங்கும் நிறைய ஏழைகள் இருக்கின்றார்கள். அவர்களையும் இனங்கண்டு அவர்களுக்கும் உதவிசெய்யவேண்டும் என்று விரும்புகின்றேன். எனது அம்மாவும் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் 1987 ஆம் ஆண்டு வரை மருத்துவத் தாதியாகப் பணியாற்றியுள்ளார். அவவும் என்னை தாயகத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமாகத்தான் உள்ளார்.*

**கேள்வி: மருத்துவத்துறையைத் தெரிவுசெய்ய வலியுறுத்தி எமது தமிழ் மாணவர்களுக்கு என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

***மருத்துவர்:*** *ஆரம்பத்திலேயே மருத்துவத்துறையைத் தெரிவுசெய்ய விரும்புபவர்களுக்கு, அது கடினம், அதைப் படித்தால் சித்தியடையமுடியாது என்று பல காரணங்களையும் கூறி அச்சமூட்டுவதற்கு சமூகத்தில் பலரும் இருப்பார்கள். ஆனால், அவற்றைக் காதில் விழுத்தாமல், அச்சமில்லாமல் மருத்துவத்துறையைத் தெரிவுசெய்து நன்றாக உறுதியோடு படித்தால் நிச்சயம் வெற்றியடைய முடியும் என்பதையே நான் எமது தமிழ் இளைஞர், யுவதிகளுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.*

# மேற்குலகம் தமிழர்களைக் கைவிடுகின்றதா, கையாள்கின்றதா? 2

கலாநிதி
ர.சிறீஸ்கந்தராஜா

## மீட்பர்களாக முன்னிறுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள்

'தமிழர்களுக்காக நாங்கள் எதையுமே செய்ய மாட்டோம். அப்படி ஒரு தேவை மேற்குலகிற்கு இல்லை. நீங்கள் சிறீலங்கா அரசாங்கத்துடன் பேசித் தான் உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.'

இவ்வாறு என்னிடம் சுவிஸ் வெளியுறவுத்துறை அமைச்சின் இராசதந்திரி மார்டின் ஸ்ரேசிங்கர் தெரிவித்தது எனக்கு மட்டுமல்ல, எனது அருகிலும், எனது முன்புறத்திலும் அமர்ந்திருந்த புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளை ஒரு கணம் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளுடன் சுவிற்சர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சு மேற்கொண்ட மூன்று நாள் மாநாட்டின் இரண்டாம் நாளின் முற்பகல் அமர்வு நிறைவு பெற்று மதியபோசனம் நடந்து கொண்டிருந்தது.

அன்று காலை (19.10.2019 சனிக்கிழமை) எமது விடுதியை மூடியிருந்த பனிப்புகார், மதியப் பொழுதில் நீங்கி, சுவிற்சர்லாந்தின் சுயரூபத்தைக் காண்பித்த வண்ணம் இருந்தது.

எனது தட்டில் இருந்த உணவை ஒரு கணம் வெறித்துப் பார்த்தேன். சுவையற்ற ஒரு மரக்கறிக் கலவையை மாவில் தோய்த்து, அதைப் பொரித்து வைத்திருந்தார்கள். அந்த இடத்திலேயே வாந்தி எடுக்க வேண்டும் போன்ற குமட்டலை அந்த உணவு ஏற்படுத்தியது.

அன்றைய மதிய போசனத்திற்கு புலால் உணவைத் தவிர்த்து, மரக்கறி உணவை நானே தேர்தெடுத்திருந்தேன். ஆனால் அதன் சுவை இவ்வாறு குமட்டலை ஏற்படுத்தும் வகையில் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

எனது எதிர்ப்புறமிருந்த தமிழர் பிரதிநிதியின் தட்டைப் பார்த்தேன். அவரும் சுரத்தையின்றி தனது உணவை உட்கொண்ட வண்ணம் இருந்தார்.

மார்டின் மட்டும் எந்தச் சலனமும் இல்லாமல் உணவை இரசித்து, ருசித்து அருந்திக் கொண்டிருந்தார். அவர் சுவிற்சர்லாந்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சூடாக எமக்குப் பரிமாறிக் கொண்டிருந்தார். யதார்த்தம் வேப்பங்காயாக எமக்குக் கசந்து கொண்டிருந்தது.

மனதில் எழுந்த குமுறல்களை அடக்கிக் கொண்டு மார்டின் அவர்களிடம் நான் கூறினேன்: 'நீங்கள் தானே எமக்கு வாக்குறுதி தந்தீர்கள். தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டால், தமிழ் அரசியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அகற்றப்பட்டால், தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மேற்குலகம் குரல் கொடுக்கும் என்று. அமைதி வழியில் தமிழர்கள் போராடினால் மேற்குலகின் உதவியுடன் தமிழர்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கலாம் என்று'

குருசேத்திரப் போரில் கர்ணன் ஏவிய நாகாஸ்திரம் போன்று உடனே என்னை நோக்கி பதில் கேள்விக் கணையை மார்டின் தொடுத்தார்: 'நாங்கள் எப்பொழுது உங்களுக்கு அப்படி உத்தரவாதம் அளித்தோம்? சுவிற்சர்லாந்து அரசாங்கம் உங்களுக்கு அப்படி எந்தச் சந்தர்ப்பத்திலாவது உத்தரவாதம் அளித்ததா?'

அவரது கேள்வியில் அனல் பறந்தது. தமிழர்களுக்கு உதவும் தார்மீகக் கடப்பாடு மேற்குலகிற்கு இல்லை என்ற தொனி அதில் தெறித்தது.



**மேற்குலகை நம்பி எதுவுமே நடைபெறவில்லை என்ற விரக்தியின் விளிம்பில் தமிழ் மக்கள் உள்ளார்கள். இதே நிலை நீடித்தால் இலங்கையில் விரக்தியடைந்துள்ள தமிழர்கள் ஆயுதம் ஏந்தக் கூடும். இன்னுமொரு ஆயுதப் போராட்டம் இலங்கையில் வெடிப்பதையா நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

ஒரு கணம் எனது மூளையம் நிலைகுலைய, நாடி நரம்புகள் முறுக்கேறின. ஆனாலும் பதிலுக்கு சீற்றத்துடன் பேசுவது நாகரீகம் அல்ல என்பதை சுதாகரித்துக் கொண்டு நான் கூறினேன்: 'அப்படி ஒரு வாக்குறுதியை சுவிற்சர்லாந்து அரசாங்கம் வழங்கியதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இவ்வாறான வாக்குறுதியை யுத்தம் முடிந்ததும் அன்றைய பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் டேவிட் மிலபாண்ட் தமிழர்களுக்கு வழங்கினார். தமிழர்கள் அமைதி வழியில் போராடினால் அவர்களின் போராட்டத்திற்கு மேற்குலகம் அங்கீகாரம் வழங்கும் என்று அன்றைய நோர்வீஜிய பன்னாட்டு அபிவிருத்தித்துறை அமைச்சர் எரிக் சுல்கைம் வாக்குறுதி அளித்திருந்தார்.'

இவ்வாறு கூறிவிட்டு கர்ணன் ஏவிய நாகாஸ்திரத்தை பலவீனப்படுத்திய அருச்சுனின் வெற்றி மிதப்போடு மார்டின் அவர்களின் முகத்தை நான் உற்றுப் பார்த்தேன். பதில் சொல்ல முடியாது திணறி ஏதாவது தட்டுத் தடுமாறி சாக்குப் போக்குக் கூறுவார், அதை வைத்து ஆளை மடக்கலாம் என்பது தான் எனது வியூகமாக இருந்தது.

ஆனால் அந்தக் கணத்திலேயே தான் ஒரு பழுத்த இராசதந்திரி என்பதை மார்டின் நிரூபித்தார். நான் கூறியதற்கு அவர் எந்தப் பதிலும் கூறவில்லை. மௌனமாகத் தனது தட்டை வெறித்துப் பார்த்தார். பின்னர் வெற்றி மிதப்போடு தனது கத்தியால் இறைச்சித் துண்டொன்றை வெட்டி, அதனை முள்ளுக்கரண்டியால் குத்தித் தனது வாயில் வைத்து மென்று உண்ணத் தொடங்கினார்.

சில விநாடிகளுக்கு மௌனம் நீடித்தது.

நான் ஏவிய பாசுபத அஸ்திரம் பிசுபிசுத்துப் போய்க் கிடந்தது.

மீண்டும் நானே கேள்விக் கணையைத் தொடுத்தேன்: 'சமாதான காலத்தில் நீங்கள் தானே சமஸ்டித் தீர்வை ஏற்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளை வற்புறுத்தினீர்கள்? இப்பொழுது ஏன் இது விடயத்தில் சிறீலங்கா அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்க மறுக்கிறீர்கள்?'

மீண்டும் அனல் பறக்க என்னிடம் மார்டின் சீறினார்: 'அதைத் தானே புலிகள் நிராகரித்து விட்டார்களே? பிறகென்ன சமஸ்டி?'

நானோ விடவில்லை: 'சரி, இப்பொழுது தமிழ் அரசியல் கட்சிகள் சமஸ்டி பற்றிப் பேசுகின்றன. ஏன் அது விடயத்தில் சிறீலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு நீங்கள் மறுக்கின்றீர்கள்?'

தொடர்ச்சி 30ம் பக்கம்



எங்கள் தோழர்களின் புதைகுழியில்
மண்போட்டுச் செல்கின்றோம்...
இவர்கள் சிந்திய குருதி – தமிழ்
ஈழம் மீட்பது உறுதி..




விழியில் சொரியும் அருவிகள்
எமை விட்டுப் பிரிந்த குருவிகள்...
பகைவன் கப்பலை உடைத்தனர்
எரிமலையின் வெடியாய் வெடித்தனர்...

**மதம் சொல்லி மொழி சொல்லி**
**மரபுகள் இனங்கள் சொல்லி**
**வதம் செய்யும் ஆட்சி தன்னை...**

**உதைத்திட எழுந்ததீரர்**
**சிதைந்தது மானம் என்றால்**
**சினந்திடும் வீரவான்கள்...**










# வையத் தலைமை கொள்வோம்

மானமாவீரர்கள்
நினைவொளி
மனமதில் நிறைய நிறைய
நனவாகும் அவர் கனவு.
நானிலத்தில்
நிறைவாய் மலரும்
தன்னிகரில்லாத் தமிழீழம்.
காலமிது காலமிது
தமிழின வரலாற்றில்
வராது வந்த மாமணியாம்
கரிகாலன் காலமிது.
அவர்காலத் தலைமுறை
தீதும் நன்றும்
தெளிவுறத்தான் அறிந்தபின்
ஒருபொழுதும் வீணெழியாது
வீணர்கள் பற்றிப்
பேசிப்பேசி
வேளையதைப் போக்காது
வரும் வரும்
தலைமுறையெல்லாம்
எமை எண்ணியெண்ணி
நொந்து நொந்து
வாழக்கூடாது.
தேசங்கள் எங்கினும்
நீறுபூத்த நெருப்பாய்
இருப்பவையும்
எம் கண் முன்னே
கொழுந்துவிட்டெரியும்
நிலைமைகளும்
எல்லாம் அறிந்துகொண்டும்
தேம்புதலும் புலம்புதலும்
வேண்டாம்.
தேரவாதம் தேறாது.
அதன் வழியில் நடக்கும்
தலைமைகளும் மாறது.
தம்பிள்ளைகளைத்
தலைவர்களாக
வளர்த்துக்கொண்டு
சிங்களத்துக் குஞ்சு
குருமன்களை
தலைமழித்துக் காவிகட்டி
தமிழின அழிப்புச் செய்து
தம் குழியைத்
தாமே வெட்டி
தறிகெட்டு நடக்கும்
பௌத்த பேரினவாத
வெறிபிடித்த சிங்களம்
ஒருநாளும் மாறாது.
கோணேஸ்வரிக்குக்
குண்டு வைக்கவும்
பார்வதி அம்மாளின்
எரிசாம்பலில்
நாயக் கட்டுப்
போடவும்தான்
திரிபீடகம் அவர்களுக்கு
கற்றுக்கொடுத்துள்ளதோ
மானமாவீரர்களும் மக்களும்
கொடுத்த விலையே
தமிழருக்கு ஆயுதம்
உறும் இன்னலுமில்லை
உயிரீகமுமில்லை
ஒவ்வோர்
வாய்ப்புக்களையும்
கெட்டியாகப்
பற்றிக்கொண்டு
தனக்குவமை தானேயான
தமிழினத் தேசியத் தலைவர்
வழியில்
விழிப்பும் வினைத்திட்பமும்
கொண்டோராய்
தக்கோராய் மிக்கோராய்
உலகத் தமிழரெல்லாம்
தலைநிமிர்ந்து நடப்போம்
வெல்லும் தமிழீழம்

– ச.இ

# எழுச்சிபெறும் ரஸ்யக் கப்பற்படை

## புதிய போர்க்களமும் பேராபத்தும்

சோழகரிகாலன்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான கண்டனக் குற்றச்சாட்டு வலுப்பெற்று, அழுத்தமும் விசாரணையும் அதிகரித்து வருகின்றது. உக்ரைன் அரசுடன், அமெரிக்க இராஜாங்க விதிகளையும் மீறி, ட்ரம்ப் உறவுகளையும், சதிகளையும் மேற்கொண்டு வந்ததமை நிரூபிக்கப்படும் நிலையில், ரஸ்யா தன்னைப் பலப்படுத்தும் ஏற்பாடுகளை மிக வேகமாகச் செய்து வருகின்றது.

சோவியத் ஒன்றியம், அமெரிக்காவின் சதியினால் உடைக்கப்பட்ட பின்னர், களும், ரஸ்யாவின் தற்போதையக் கடற்படைப்பலத்தின் 20 சதவீதம் மட்டுமே. ஒப்பிட்டு நோக்குகையில் அமெரிக்காவின் கடற்படைக்கு ஈடாக, ரஸ்யா தனது கடற்படையைக் கட்டியெழுப்பி உள்ளது.

அமெரிக்காவின் பசுபிக் கடற்படையணியில் முப்பது தாக்குத நீர்மூழ்கிக் கப்பல்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன. இதில் புதிதாக எட்டு யுத்தப் போர்க்கலங்களும் முன்னறிவிப்பின்றி இணைக்கப்பட்டுள்ளன.

நாட்கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. நேட்டோ படையணிகளின் கண்களில் சிக்காமல் இந்தப் போர் ஒத்திகைகளை ரஸ்யா மேற்கொண்டுள்ள போதிலும், அமெரிக்காவின் செல்லப்பிள்ளையும், அமைதியின் பேரில் அழிவை மேற்கொள்ளும் சக்தி வாய்ந்ததுமான நோர்வே நாட்டின் உளவுத்துறை, ரஸ்யாவின் இந்த நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது.

EYES) பாதுகாப்பு வலையமைப்பை ஏற்படுத்தி அதில் பிரித்தானியா, கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியாவுடன் தன்னையும் சேர்த்து, பெரும் உளவு அமைப்பை ஏற்படுத்தியது. இதில் முக்கியமாக UKUSA உடன்படிக்கை மூலம், பிரித்தானியா தனது அனைத்து உளவு வளங்களையும் அமெரிக்காவுடன் பகிர்வதோடு, அமெரிக்க உளவுத்துறையின் முக்கிய தலைமையகத்தையும், தன்நாட்டில் உருவாக்கி



மீண்டும் தனது கடற்படைப் பலத்தினை வலுவாக்கும் முயற்சியில் ரஸ்யா களமிறங்கி உள்ளது.

பனிப்போரின் பின்னராக மீண்டும், ரஸ்யா கடற்படைப் கடுமையான போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. ஒக்டோபர் மாதக் கடைசியில் இருந்து ரஸ்யாவின் பாரிய கடற்படைப் போர்ப்பயிற்சியில் நவீனக் கடற்படை ஈடுப்பட்டுள்ளது.

ஆறு அணுசக்தி நீர்மூழ்கிப் போர்க் கலங்கள் உட்பட, எட்டு நீர்மூழ்கிப் போர்க்கலங்கள் ரஸ்யாவிற்கும் நோர்வேக்கும் இடைப்பட்ட, பாரெண்ட்ஸ் கடற்பகுதியிலும், நோர்வேக் கடற்பரப்பிலும், போர்ப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. அதே நேரம், புதிய சியரா வகையைச் சேர்ந்த தாக்குதல் நீர்மூழ்கிக் கலங்களான, Pskov மற்றும் Nizhny Novgorod ஆகியவையும் பரீட்சார்த்தத் தாக்குதற் பயிற்சியில் நோர்வேக் கடற்பரப்பில் ஈடுபட்டுள்ளன.

இந்தப் பத்து நீழ்மூழ்கிப் போர்க்கலங் அமெரிக்கா தன்னிடமுள்ள ஐம்பது தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பல்களையும் பசுபிக் மற்றும் அட்லாந்திக் படையணிகளிற்கிடையில் பகிர்ந்துள்ளது. அமெரிக்காவின் கடற்படைப் பலம் மெதுவாகச் சுருங்கி வரும் நிலையில், ரஸ்யா தன்னைப் பலப்படுத்துவது, மீண்டும் ஓர் பனிப்போரிற்கு, அதாவது அணுசக்தி நீர்மூழ்கிப் போரிற்கு வழிவகுத்து விடும் அபாயத்தை உருவாக்கி உள்ளது.

தனது ஏவுகணைத் தாங்கிப் போர்க் கலங்களைப் பாதுகாக்கும் ஒரு தடுப் பரண்களை ஏற்படுத்தும் நோக்குடனே, ரஸ்யாவின் நீர்மூழ்கிப் படையணி 60

இந்தப் போர்க்கலங்கள் வெறுமனே ஒத்திகையில் ஈடுபட்டுள்ளதாக மொஸ்கோ தெரிவித்திருந்தாலும், பயிற்சி பெறும் அதே நீர்ப்பரப்பில் இருந்தபடியே, உலகின் எந்த மூலைக்கும் கடுமையான தாக்குதலை ஏற்படுத்த வல்லதாகவே இந்தப் படையணி உருவாக்கப்பட்டுள்ளது.

பனிப்போர்க் காலத்தில், ரஸ்யாவின் தாக்குதற் கலங்கள், கிறீன்லாந்து, ஐஸ்லாந்து, மற்றும் ஐக்கிய இராச்சியத்தைக் கடந்து சென்றே நேட்டோக் கலங்களையும், அமெரிக்கக் கலங்களையும் தாக்க வேண்டிய நிலை இருந்தது. இதனாலேயே அமெரிக்கா தனது ஐந்து கண்கள் (FIVE

மிகவும் பலமாகக் கட்டப்பட்டுள்ள ரஸ்யாவின் கடற்படை, ரஸ்யாவின் வடபகுதிக் கடற்படைத் தளத்திலிருந்தபடியும், நோர்வேயின் கடற்பரப்பில் இருந்தும், அமெரிக்காவரை தாக்குதல் நடாத்தக்கூடிய நீண்ட தூரத் தாக்குதல் எல்லையை உருவாக்கி உள்ளது. இதன் ஏவுகணைகள் நீண்ட தொலைவுத் தாக்குதல் எல்லையைக் கொண்டவை.



உள்ளது. இதற்கு நோர்வே ஐரோப்பிக் கடற்பரப்பைக் கண்காணிக்க உறுதுணையாக உள்ளது.

ஆனால், இன்று மிகவும் பலமாகக் கட்டப்பட்டுள்ள ரஸ்யாவின் கடற்படை, ரஸ்யாவின் வடபகுதிக் கடற்படைத் தளத்திலிருந்தபடியும், நோர்வேயின் கடற்பரப்பில் இருந்தும், அமெரிக்கா வரை தாக்குதல் நடாத்தக்கூடிய நீண்ட தூரத் தாக்குதல் எல்லையை உருவாக்கி உள்ளது. இதன் ஏவுகணைகள் நீண்ட தொலைவுத் தாக்குதல் எல்லையைக் கொண்டவை.

ஐரோப்பிய இராணுவப்பலத்தோடு சவால்விட்டு, பாதுகாப்பு எல்லைகளைக் கடக்கவேண்டிய அவசியம் ரஸ்யாவிற்கு இனிமேல் இல்லையெனவும், ரஸ்யாவின் பலம் மேலோங்கி உள்ளதாகவும், அமெரிக்காவின் போர்த்தந்திரக் கல்விகளிற்கான பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அன்ரூ மெட்ரிக் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மோதல்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக, நேட்டோபடைகளும், அமெரிக் கப்படைகளும், பனிப்போர் பாதையினைத் தவிர்த்து, ரஸ்யப் படைகளைச் சந்திப்பதைத் தவிர்க்குமாறு போரியல் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

இதன் மூலம் அமெரிக்காவும், நேட்டோவும், பெருமளவு கடற்பரப்பின் ஆதிக்கத்தை இழக்கநேரிடும். பூமிப்பந்தின் கடற்பகுதியானது இரண்டு பெரும் சக்திகளிற்கு இடையில் சிக்கும் அபாயமும் தோன்றியுள்ளது.

நவீனயுகத்தின் போர்ச்சக்தியானது, இருந்த இடத்திலிருந்தே அழிவை ஏற்படுத்தும் நாசகார வல்லமையைப் பெற்றுள்ளது. ரஸ்யாவின் கடற்பலத்தை, நேட்டோவும் அமெரிக்காவும் சவால்விட்டு, மோத நினைத்தால், அது இரண்டாம் உலகப்போரின் அழிவைவிடப் பன்மடங்கான பேரழிவை உருவாக்கும் எனப் போரியல் வல்லுநர்கள் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

டொனால்ட் ட்ரம்பின் உக்ரைன் மீதான தொடர்பும், உக்ரைனை மீண்டும் தன் நிலப்பரப்புடன் சேர்க்க முயலும் ரஸ்யாவின் எத்தனிப்பும், மீண்டும் ஒரு உலகப் போரின் வெடிநிலைக்கு வித்திட்டுள்ளது.

ஒரு கதை

## புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா?

ஒரு சமயம் அரபுநாட்டு அரசர் கிருஷ்ணதேவராயருக்கு ஒரு அதிசய ரோஜா செடி ஒன்றை பரிசாக அளித்தார். அதை மன்னர் தனது தோட்டத்தில் நட்டு வைத்தார்.சிறிது காலத்திற்கு பிறகு அந்த செடியில் இருந்து ரோஜா மலர்கள் மலர்ந்தன. அங்கு வந்த தெனாலி ராமனின் மகன் அதை பறித்து தனது தாய்க்கு பரிசாக கொடுக்க நினைத்து பூக்களை பறிக்க தொடங்கினான். பூக்களைப் பறித்துக்கொண்டு இருக்கும் போது அரண்மனைக் காவலர்கள் பார்த்துவிட்டனர்.

அரண்மனைக் காவலர்கள் தெனாலி ராமனின் மகனை அரசர் கிருஷ்ணதேவராயரிடம் காண்பிக்க அழைத்துச் சென்றனர். செல்லும் வழியில் தெனாலி ராமன் காவலர்களை பார்த்து ‘என்மகனை எங்கே அழைத்துக்கொண்டு செல்கிறிர்கள்?’ என்று கேட்டான். அவர்களோ! ‘உங்கள் மகன் ரோஜா பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்து விட்டோம். இப்போது அவனை மன்னரின் பார்வைக்காக அழைத்துச் செல்கிறோம். வேண்டுமென்றால் அவன் கைகளில் உள்ள திருடிய ரோஜா பூக்களை பார்?’ என்று அவன் கைகளை காண்பிக்கச் செய்தனர்.

தெனாலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இருந்தாலும் தன் மகனை காப்பாற்ற விரும்பிய தெனாலி சிறுது நேரம் யோசித்து தான் அணிந்திருந்த மேலாடையை கழற்றி மகன் மேல் போர்த்திவிட்டான். இன்று வெயில் அதிகமாக உள்ளது. இந்த துணி என் மகனை காப்பாற்றும் என்று கூறிவிட்டுச் சென்றார். புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா? தெனாலிமகன் தந்தை கூறியதை யோசிக்க தொடங்கினான். உடனே ஒவொரு பூக்களாக சாப்பிட ஆரம்பித்தான். துண்டு முடி இருபதனால் அவன் பூக்களை சாப்பிடுவதை காவலர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை அரண்மனைக்




காவலர்கள் தெனாலி ராமனின் மகனை அரசர் கிருஷ்ணதேவராயர் முன்னால் அழைத்துச்சென்றனர். காவலர்கள் மன்னரை பார்த்து ‘அரசே! தெனாலி ராமனின் மகன் பூக்களை திருடிய போது அவனை நாங்கள் பிடித்துவிட்டோம். இந்த குற்றத்திற்கு நீங்கள் தண்டனை வழங்க வேண்டும்’ என்று கூறினர்.மன்னரும் எல்லாவற்றையும் கேட்டறிந்து, பின்னர் அரசர் காவலர்களை பார்த்து, ‘திருடிய பூக்கள் எங்கே?’ என்று கேட்டார். காவலர்கள் மன்னரை பார்த்து, ‘பூக்கள் அனைத்தும் அவன் கைகளில் தான் அரசே உள்ளது’ என்று காவலர்கள் கூறினர்.அரசர் தெனாலி மகனை பார்த்து, ‘உன் கைகளை காட்டு’ என்று கூறினார். அவனும் வெறும் கைகளை காண்பித்தான். அவன் கைகளில் எதுவும் இல்லை.மன்னர் தெனாலிமகனை பார்த்து, ‘நீ பறித்த பூக்கள் எங்கே?’ என்று கேட்டார்அவனோ! மன்னரைப் பார்த்து, நான் பூக்கள் எதுவும் பறிக்க வில்லை. என் தந்தைக்கு அவமானம் ஏற்படுத்தவே இந்த இரண்டு காவலர்களும் இப்படி செய்தார்கள்? என்று கூறினான்.மன்னரும் அந்த இரண்டு காவலர்களையும் திட்டி அனுப்பிவிட்டார். தெனாலியும் அவன் மகனும் எப்படியோ தப்பித்தோம் என்று சிரித்துக்கொண்டே வீட்டிற்கு புறப்பட்டனர்.

## ஏன் மாவீரர்களுக்கென்று ஒருநாள்?

“வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள் வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அது போல எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் எனும் ஒரு நோக்கத்துடனும் இந்த நாளை நாம் கொண்டாட முடிவு செய்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும்





அன்று எமது இயக்கத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாரணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத் தான் கருதுகிறோம் என்பதுடன் வீரச்சாவடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக இணைத்து மாவீரர் நாளாக இன்று கொண்டாடுகிறோம். இல்லாவிட்டால் காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அந்த மரியாதைகள் குறிப்பிட சில ஆட்களுக்குப் போகாமல் தடுத்துவிடும். எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூறப்படவேண்டும் என்பதற்காகத் தான் இந்த மாவீரர் நாள் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத இனம் ஒரு காட்டுமிராண்டி இனமாக மாறி அழிந்துவிடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிற–ார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள். அதேவேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர்நாளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம் எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம்.”

– தமிழீழத் தேசியத் தலைவர்
(1989 முதலாவது மாவீரர்நாளில் ஆற்றிய உரையில்)

ஒரு குறள்

அறத்துப்பால் – வாய்மை



பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

செய்யக்கூடாததைச் செய்யாததால் விளையும் நன்மையைவிடப் பொய் கூறாத பண்பு பொய்த்துப் போகாமல் கடைப்பிடிக்கும் அறவழி நன்மை தருவதாகும்.

ஒரு தகவல்

## கொடி எப்படிப் பறக்கிறது?



கொடி ஏற்றும்போது நீங்கள் கவனித்துப் பார்த்திருப்பீர்கள். அவ்வளவு நேரமும் கீழே தளர்வாகத் தொங்கிக்கொண்டிருந்த கொடி, மேலே போனவுடன் படபடவென்று ஓசையுடன் பறப்பது எப்படி? பெரும்பாலும் மெலிதான காற்றுக்கே இந்தக் கொடிகள் பறக்கின்றனவே, அது ஏன்? காற்றுத் திசைகாட்டும் கருவியைப் பார்த்திருப்பீர்கள். காற்று எந்தத் திசையில் வீசுகிறது, புயல் எந்தப் பக்கம் அடிக்கிறது என்று இந்தக் கருவியைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இது மிகவும் பழங்காலத்துக் கருவி. ஒரு செங்குத்தான கம்பியின் மேல் சுழலும் படுக்கை வசமான தகட்டுத் துடுப்புகள் பொருத்தப்பட்டிருக்கும். செங்குத்தான கம்பியின் மீது வைக்கப்பட்ட கூட்டல் குறியைப்போல இது அமைந்திருக்கும். காற்று வீசும்போது காற்றடிக்கும் திசையில் இந்தத் தகட்டின் முனை திரும்பி நிற்கும். இந்தத் தகட்டின் முனை காற்றடிக்கும் திசையை நோக்கித் திரும்ப வேண்டும் என்றால், ஒரு திசையில் அடிக்கும் காற்று, அதற்கு எதிர் திசையிலிருந்து வரும் காற்று தகட்டின் மீது ஏற்படுத்தும் அழுத்தத்தைவிடக் குறைவாகவோ கூடுதலாகவோ, தகட்டின் மீது அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டும். எதிரெதிர் திசைகளில் இருந்து வரும் காற்று சமமாக இருந்தால் தகட்டின் முனை திரும்பாமல் ஒரே நிலையில் நிற்கும். இல்லையென்றால் எந்தப் பக்கத்திலிருந்து காற்று வேகமாக வீசுகிறதோ அந்தப் பக்கத்தை நோக்கித் திரும்பும். இந்த வகையில்தான் கொடியும் பறக்கிறது. துணிக்கொடி காற்றை எதிர்கொள்ளும்போது, அந்தக் கொடி காற்றில் பறந்து சென்றுவிடுவதில்லை. ஏனென்றால் அதன் ஒரு பக்கவாட்டுப் பகுதி கொடிக் கயிற்றோடு கட்டப்பட்டிருக்கிறது. காற்றிற்கேற்ப கொடி அசையும்போது, இழுவிசையால் அந்தத் துணியில் உராய்வு உந்தப்படுகிறது. உராய்வு என்பது எதிர்வினைகொண்டது. கொடியில் காற்றின் திசைக்கு எதிர் திசையில் படுக்கை வசத்தில் உராய்வு செயல்படுகிறது. காற்றின்வேகத்தில்திசையைப்பொறுத்து, கொடியின் ஒருபுறத்திலிருந்து மற்றொரு புறத்திற்கு படுக்கை வசத்தில் உராய்வு கடத்தப்படுகிறது. இதன் காரணமாகவே கொடி படபடவென காற்றில் அடித்துக் கொள்கிறது. அது துணியாக இருப்பதால்தான் இந்த உராய்வு இழுவிசை ஏற்படுகிறது. அதே நேரம் திசை காட்டும் கருவியில் உலோகத் தகடு இருப்பதால் அது படபடப்பதில்லை. மாறாக காற்றடிக்கும் திசையை நோக்கி அந்தக் கருவியின் முனை திருப்பப்படுகிறது.

ஒரு பொன்மொழி

பயம், கோபம், பொறாமை ஆகிய மூன்றும் நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள். அவை நமது உயர்வைப் பெரிதும் பாதிக்கும்.

- இராமகிருஷ்ணர்

ஒரு பழமொழி

சபை வைப்பவர் நம்மாளாயிருந்தால்,
நடுச் சபையிலிருந்தால் என்ன
நுனிச் சபையிலிருந்தலென்ன?

ஒரு வரலாறு

## நெப்போலியனைத் தொட்ட வார்த்தை!



உலக வரலாற்றில் அதிகப் பக்கங்களில் இடம் பிடித்தவன், மாவீரன் நெப்போலியன். மனிதநேயத்தின் ஈரம், எப்போதும் அவன் இதயத்தில் இருந்து கொண்டே இருக்கும். காரணம், அவன் புத்தகங்களை அதிகமாக நேசிப்பவன். நெப்போலியனின் வாழ்வில் ஒரு நிகழ்வு... நெப்போலியனிடம் பிடிபட்ட இளைஞன் ஒருவன் தப்பி ஓட முயன்றான். அந்த நாட்களில் தப்பி ஓடுவது மரண தண்டனைக்குரிய குற்றம். இராணுவ விசாரணை நடைபெறும்போது அந்த இளைஞனின் தாய் அங்கு வந்தாள். ‘இவன் எனது ஒரே மகன். திருமணம் ஆகாதவன். ஆகவே என் வம்சம் அழியாமலிருக்க இவனுக்கு உயிர்ப்பிச்சை தர வேண்டும்’ என்று இறைஞ்சினாள்.

‘அவன் செய்தது கடுமையான குற்றம்’ என்றான் நெப்போலியன்.

‘அவன் நிரபராதி என்று நான் சொல்லவில்லை. கொஞ்சம் கருணை காட்டும்படிதான் வேண்டுகிறேன்’ என்றாள் அந்தத் தாய்.

‘கருணை காட்டக்கூட தகுதியற்றவன் உன் மகன்’ என்று சொன்னான் நெப்போலியன்.

‘பிரபுவே! கருணை என்பது தகுதியைப் பார்த்து செய்யப்படுவது அல்லவே?’ என்றாள் அப்பெண்மணி.


அந்த வார்த்தை நெப்போலியனின் மனதைத் தொட்டது. அவன் அவளது மகனை மன்னித்து விடுதலை செய்தான்.

இரக்கமற்ற முரட்டு வீரர்களான தைமூர், செங்கிஸ்கான் போன்றவர்கள் அவப்பெயர் பெற்று விளங்க, நெப்போலியனின் இரக்கத்துடன் கூடிய வீரம் என்றும் சிரஞ்சீவியாய் உள்ளது.

தைமூரின் பேரரசு இன்று இல்லை. செங்கிஸ்கானின் அரசு இருந்த சுவடைத் தற்போது தேட வேண்டியிருக்கிறது. ஆனால் நெப்போலியனின் பிரான்சு இன்றும் வல்லரசாகவே விளங்குகிறது. வானத்துத் தாரகையாய் அவன் புகழ் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. காரணம் ஈரம் கசிந்த அந்த இதயம்தான்.

படமும் கவியும்






# விடுதலைப் புலிகளின் போராட்டம் ஏன் தோற்றுப் போனது? துரோகத்தால் ஏற்பட்ட பாதிப்புத்தானே முதல் காரணம்..?

**கேள்வி:–** விடுதலைப் புலிகளின் போராட்டம் ஏன் தோற்றுப் போனது? துரோகத்தால் ஏற்பட்ட பாதிப்புத்தானே முதல் காரணம்..?

கிருஷ்ணமூர்த்தி கௌதமன் பொபினி பிரான்ஸ்

**பதில்:–** துரோகங்கள் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது உண்மைதான். ஆனால், துரோகத்தை விட அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை சூழ்ச்சிகள். கூட இருந்து குழி பறிப்பதென்பதும் சூழ்ச்சியின் ஒரு வடிவம்தான். நாகரீகமாக இதற்கு 'இராஜதந்திரம்' என்றும் பெயர் வேறு.

மகாபாரதக் கதை பலருக்கும் தெரிந்ததுதான். பாண்டவர்கள் பக்கம் நியாயம் இருந்தாலும், போரில் வெற்றிபெறுவதற்கான பலமும் வாய்ப்புக்களும் கௌரவர்களுக்கே அதிகம் இருந்தது. காரணம் பீஷ்மர், துரோணர், துரோணர் மகன் அஸ்வத்தாமன், கர்ணன் என பலம் பொருந்திய மாபெரும் போர்த் தளபதிகள் துரியோதனனுக்கு பக்கபலமாக நின்றார்கள். ஆனாலும், பலமிழந்து நின்ற பாண்டவர்களிடம் அவர்கள் எப்படித் தோற்றுப்போனார்கள்?

பீஷ்மர், துரோணர், அஸ்வத்தாமன், கர்ணன்... என துரியோதனன் வசமிருந்த பலமானவர்களை தோற்கடித்து போரில் வென்றது நேருக்கு நேர் மோதியல்ல. போருக்கு முன்பாக பின்னப்பட்ட ஏராளமான சூழ்ச்சிகள்.

பாண்டவர்களின் பக்கம் நின்ற கிருஷ்ணர்தான் அந்தப்போரின் வெற்றி - தோல்வியைத் தீர்மானித்தார். பாண்டவர்களைப் பலம்பெற வைத்து வெற்றி பெறுவதைவிட, கௌரவர்களை பலமிழக்க வைத்து வெற்றிபெறுவது இலகு என்று அவர் கருதினார். இதற்காக அவர் செய்த சூழ்ச்சிகள்தான் பாண்டவர்களின் வெற்றிக்கு காரணமாகியது.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, சிகண்டி என்பவன் அருச்சுனன் தேரில் ஏறிக்கொண்டு பீஷ்மரை நோக்கி சவால்விட்டான். சிகண்டியைக் கண்டதும் முற்பிறப்பில் தன்னை கொல்வேன் என்று சபதமெடுத்த பெண்ணென்பதை பீஷ்மர் தன் ஞானத்தால் உணர்ந்துகொண்டார். ஒரு பெண்ணை கொல்லல் அறமாகாது என்று வில்லை தாழ்த்தினார் பீஷ்மர். இதுதான் சமயம் என்றார் கிருஷ்ணர். சிகண்டியின் பின்னால் நின்ற அருச்சுனன் சரமாரியாக அம்புகளை பீஷ்மரை நோக்கி எய்து அவரது மரணத்திற்கு காரணமானான்.



துரோணரின் மகன் அஸ்வத்தாமன் உயிரோடு இருக்கும்போதே அவர் இறந்துவிட்டதாக புரளியைக் கிளப்பிவிட்டார் கிருஷ்ணர். அதனையும் நீதி தவறாத தர்மனின் வாயால் சொல்லவைத்து, துரோணரை நம்பவைத்தார். தன் மகன் இறந்துவிட்டதாகக் கருதிய துரோணர், மனமொடிந்து போயிருந்தார். அந்தவேளையில், பாண்டவர்கள் துரோணரை வசைபாட மேலும் கலங்கிய துரோணர், தன் கையிலிருந்த ஆயுதங்களை எறிந்து விட்டுத் தேரில் அமர்ந்திருந்தார். அப்போது, பாண்டவர்களின் மனைவியான திரௌபதியின் சகோதரர் திருட்டத்துயும் என்பவனால் துரோணர் கொல்லப்பட்டார். (தன் தந்தையைக் கொன்ற திருட்டத்துயுமை பின்னர் அஸ்வத்தாமன் கொன்று பழி தீர்த்தான்)

கர்ணனை அழிப்பதற்கு முன்னர் அவனது பலத்தை பல வழிகளிலும் திட்டமிட்டு பறித்தெடுத்தார்கள். இந்திரனைக் கொண்டு கவசகுண்டலங்களைப் பறித்தார்கள். இறுதியில் அர்ச்சுனன் மீது நாகஸ்திரத்தை



ஒருமுறைக்கு மேல் பிரயோகிக்கக் கூடாதென கர்ணனின் தாயைக்கொண்டே வரம் வாங்கி, கர்ணனையும் தோற்கடித்து சாகடித்தார் கிருஷ்ணர்.

இவற்றையெல்லாம் விட துரோகம் செய்யாத ஒருவரையே துரோகியாக்கி துரியோதனனின் தோல்விக்கு வழிவகுத்த சூழ்ச்சியும் நடந்தது. அஸ்வத்தாமன் சாகா வரம் பெற்றவன். மகாபாரதக் கதையைப் பொறுத்தவரையில் இன்றும் உயிருடன் இருப்பதாக நம்பப்படுபவன் இந்த அஸ்வத்தாமன். துரியோதனனின் பெரும் பலம் அவன். சாகாவரம் பெற்ற அஸ்வத்தாமன் படைத் தளபதியாக களம் இறங்கினால், பாண்டவர்களால் வெற்றி பெறவே முடியாது. அஸ்வத்தாமன் களமிறங்குவதை முறியடிக்க கிருஷ்ணர் ஒரு சூழ்ச்சி செய்தார். போருக்கு முன்பாக துரியோதனன் மாளிகைக்கு சென்ற கிருஷ்ணர், திருதராஷ்டிரன், துரியோதனன், கர்ணன், பீஷ்மர் என பலரும் இருந்தவேளையில், அஸ்வத்தாமனை மட்டும் தன் அருகில் தனியா அழைத்தார். இதனைத் துரியோதனன் பார்த்துக் கொண்டிருந்தான். அஸ்வத்தாமனிடம் நலம் விசாரித்த கிருஷ்ணர், தன் விரலில் இருந்த மோதிரத்தை நழுவவிட்டார். அது பூமியில் விழுந்தது. அதை குனிந்து எடுத்தான் அஸ்வத்தாமன். கிருஷ்ணனிடம் மோதிரத்தை கொடுக்கப்போன அஸ்வத்தாமனிடம், வானத்தை காட்டி கிருஷ்ணர் ஏதோ கூறினார். அங்கு நிகழ்வதை துரியோதனன் பார்ப்பான் என்று கிருஷ்ணருக்கு தெரியும். அஸ்வத்தமானும் வானத்தை பார்த்தான். பின்னர் கிருஷ்ணரின் விரலில் அந்த மோதிரத்தை அணிவித்தான் அஸ்வத்தாமன். இதை பார்த்த துரியோதனன், 'நான் கௌரவர்கள் பக்கம் இருந்நதாலும், பாண்டவர்களுக்கு ஆதரவாகவே செயல்படுவேன். இது இந்த பூமி மற்றும் வானத்தின் மீது சத்தியம்' என கிருஷ்ணரிடம் அஸ்வத்தாமன் உறுதியளிப்பதாக துரியோதனன் கருதினான். இந்த சந்தேகத்தால், அஸ்வத்தாமனை கடைசிவரை படை நடத்தும் தளபதியாக துரியோதனன் நியமிக்கவில்லை. கிருஷ்ணர் எதிர்பார்த்ததும் அதைத்தான்.

தொடர்ச்சி 30ம் பக்கம்

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com

தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc

குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

# என் பிள்ளையை நினைப்பதை...

இந்த விசாரணைக்கு கொழும்பு நாலாம் மாடிக்கு சென்று வந்த ஒருவர் கூறுகையில், 'முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வுகளையும் யுத்தத்தில் இறந்த தங்களுடைய பிள்ளைகளை நினைவு கூருவதற்காக கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தினையும் கொண்டாடுகின்றனர். இவ்வாறான நினைவு நாட்களை கொண்டாடுவதற்கு மக்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கியுள்ளதாக சர்வதேசத்திற்கு காட்டிக்கொண்டு எங்களை அச்சுறுத்தி அவற்றை ஏற்பாடு செய்யாமல் தடுப்பதற்கு முயற்சித்து வருகின்றது. குறிப்பாக முள்ளிவாய்க்கால் கப்பலடிபகுதி தற்போது இராணுவத்தினரால் மக்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்த தடைகளை கடந்த வருடம் நினைவு தினம் ஒன்றையும் செய்திருந்தோம், அது தொடர்பிலும் எங்



களை விசாரணைக்கு உட்படுத்தியிருந்தார்கள். இந்த விசாரணையின் நோக்கம் மாவீரர் தினத்தை நாங்கள் முன்னின்று நடாத்துவதை தடுப்பதே உள்நோக்கம்' என்று கூறினார்.

கோத்தபாய ஜானதிபதி தேர்தலில் போட்டியிட்ட போது நடைபெற்ற சம்பவங்கள் இவை, கோத்தபாய ஜனாதியானதும், திருகோணமலையில், மற்றும் முல்லைத்தீவில் படையினரின் வீதி தடைகள் அதிகரிக்கப்பட்டு பொது மக்களுக்கு ஒரு வித அச்ச உணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வழமையாக மாவீரர் வாரம் ஆரம்பமாகின்ற போதே தமிழர் தாயகத்தில் ஆங்காங்கே நினைவு நிகழ்வுகள் நடைபெறுவது வழமை ஆனால் இம்முறை இது வரை எந்த வகையான நிகழ்வுகளும் நடைபெறவில்லை. அச்சம் காரணமாக யாழ்.பல்கலை மாணவர்களும் இதனை தவிர்த்திருக்கிறார்கள்.

வல்வெட்டி துறை தீர்வில் குமரப்பா புலேந்திரன் சதுக்கத்தை அவ்வூர் மக்கள் துப்பரவு செய்து கொண்டிருந்த போது அங்கு சென்ற பொலிசார் அதனை தடுத்து நிறுத்தியிருக்கின்றார்கள். இவ்வாறான அச்சமான ஒரு சூழலில் தான் மாவீரர்



தினத்தை மக்கள் அனுஷ்டிக்க போகின்றார்கள். கடந்த வருடங்களின் போதும் இவ்வாறன அச்சுறுத்தல்கள் காணப்பட்ட போதிலும் மக்கள் துணிந்து செய்திருந்தார்கள். ஆனால் இம்முறை ஜனாதிபதியாக இருப்பது 2009 பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை கொன்றவர். ஆயிரக்கணக்கான மக்களை காணாமல் ஆக்கியவர். நூற்றுக்கணக்கான இளைஞர்களை கடத்தி சுட்டு கொன்றவர்.

இவ்வாறான ஒருவர் மீதே தமிழ் மக்கள் அச்சம் கொள்கின்றார்கள். இந்த அச்சத்தை தேர்தலின் போதும் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள். எனினும் தங்கள் மாவீரர்களை அனுஷ்டிப்பதிலும் மக்கள் ஆர்வமாக இருக்கின்றனர். கடந்த வருடங்களை போன்றே இம்முறையும் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்துக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் அடுத்துவருகின்ற நாட்களில் சிறிலங்கா இராணுவம் எவ்வாறான நடவடிக்கைகளில் இறங்க போகின்றது என்பது தெரியவில்லை.

சிறீலங்காவில் யார் ஆட்சிக்கு வந்தாலும் எங்கள் விடுதலை போராட்டமும், எங்கள் மாவீரர்களை நினைவு கூருவதும் தொடரும், எனது மகன் சாதரணமாக இறந்து போகவில்லை ஒரு தேசத்தின் விடுதலைக்காக போராடி வீரச்சாவு எய்தியவன், அவனை நினைவு கூறுவது தொடர்பில் நானும் எனது தேசமும் தான் தீர்மானிக்க முடியுமே அன்றி யாரும் தீர்மானிக்க முடியாது என்று அந்த தாய் கூறுகின்றார். இந்த தாயின் மனோ நிலையோடு தான் தமிழர் தேசம் இந்த முறையும் தன்னை உருவகித்து கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் போராடினார்கள், அவர்கள் மீண்டும் போராடுவார்கள்.

# கொட்டைப் பாக்குக்கு விலைகூறும் சம்பந்தன்






**இன்றைக்குத் தான் மானமுள்ள ஒவ்வொரு தமிழர்களும் பிறந்த நாள் பாருங்கோ. தம்பி பிரபாகரன் பிறக்கும் வரைக்கும் ஒரு அடிமை இனமாக இருந்த எங்கடை இனம், தம்பிக்குப் பிறகு தான் தலைநிமிர்ந்தது. அந்த வகையில் மானமுள்ள ஒவ்வொருத்தரும் மறுபிறவி எடுத்த நாள் என்றால் அது இன்றைக்குத் தான் பாருங்கோ.**

வணக்கம் பிள்ளையள்.

மானமுள்ள எல்லோருக்கும் இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

என்னடா கிழவன் புதுசா எல்லோருக்கும் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லுது என்று தலையைச் சொறிய வேண்டாம். இன்றைக்கு எங்கடை தேசியத் தலைவரின்ரை பிறந்த நாள் மட்டுமில்லை பிள்ளையள்.

இன்றைக்குத் தான் மானமுள்ள ஒவ்வொரு தமிழர்களும் பிறந்த நாள் பாருங்கோ. தம்பி பிரபாகரன் பிறக்கும் வரைக்கும் ஒரு அடிமை இனமாக இருந்த எங்கடை இனம், தம்பிக்குப் பிறகு தான் தலைநிமிர்ந்தது.

அந்த வகையில் மானமுள்ள ஒவ்வொருத்தரும் மறு பிறவி எடுத்த நாள் என்றால் அது இன்றைக்குத் தான் பாருங்கோ.

சரி, விசயத்துக்கு வாறன். ஒரு மாதிரி ஒரு தேர்தல் திருவிழா முடிஞ்சு போய்ச்சுது.

ஆனால் இதோடு எங்கடை கூத்தமைப்புக்காரர் சும்மா இருக்கப் போகிறதில்லை பிள்ளையள். இனி அடுத்தது நாடாளுமன்றத் தேர்தல் வரும். அதுக்குப் பிறகு மாகாண சபைகளுக்குத் தேர்தல் வரும்.

இப்படி இருக்கேக்குள்ளை அவையளாலை சும்மா இருக்க முடியுமே?

அது தான் இனி எங்கடை மாவீரரின்ரை தியாகத்தை வைச்சுக் கொண்டு இனி அரசியல் செய்ய வெளிக்கிடுவீனம்.

இருந்து பாருங்கோ பிள்ளையள், நாளைக்கு மாவீரர் நாளை வைச்சு என்ன மாதிரி உந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர் அரசியல் செய்யப் போகிறாங்கள் என்று.

இப்ப எனக்கு இருக்கிற கேள்வி என்னவென்றால், எப்ப தமிழீழத் தனிநாட்டை எங்கடை சம்பந்தன் ஐயா பிரகடனம் செய்யப் போகிறார் என்பது தான்.

ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி, அடுத்த தீபாவளிக்குள் அரசியல் தீர்வு, உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு, அது இது என்று கடந்த ஐந்து வருசமாக முழங்கித் தள்ளின எங்கடை சம்பந்தன் ஐயா, நடந்து முடிஞ்ச தேர்தலுக்கு முதல் சொன்னவர், தேர்தலில் சஜித் தோல்வியடைந்து தமிழர்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டால் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்குச் சர்வதேச சட்டங்களின் கீழ் தமிழ் மக்களுக்கு உரிமை உண்டு என்று.

இப்ப சஜித் பிரேமதாசாவும் கவிண்டு கொட்டுண்டுட்டார்.

சமஸ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று எப்பவோ கோத்தபாய மாத்தையாவும் அறிவிச்சுப் போட்டார். பிறகென்ன? இனித் தனிநாட்டைப் பிரகடனம் செய்ய வேண்டியது தானே.

ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன் பிள்ளையள்.

இனி யாரும் போய் சம்பந்தன் ஐயாவிட்டை தனிநாட்டுப் பிரகடனம் பற்றிக் கதைச்சுப் பாருங்கோ. வட்டுக் கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப் பாக்குக்கு விலை சொன்ன கதையாகத் தான் சம்பந்தன் ஐயாவின்ரை பதில் இருக்கும் பிள்ளையள்.

பின்னை என்ன?

தமிழீழத் தனிநாட்டுக் கோரிக்கைக்கு அடிப்படையாக இருக்கிற முதலாவது அரசியல் ஆவணம் வட்டுக்கோட்டைத் தீர்மானம். ஆனால் உதைப் போய் சம்பந்தன் ஐயாவிட்டைக் கதைச்சால் மனுசன் உங்களிட்டைக் கட்டாயம் கொட்டைப் பாக்கைத் தந்து அதுக்கு காசு பிடுங்குகிற வழியைத் தான் பார்க்கும்.

இல்லையென்றால் புத்தி கெட்ட சம்பந்தன் என்கிற ராஜாவுக்கு, ஒரு மதி கெட்ட மந்திரி என்ற கதையாக இருக்கிற எங்கடை சுமந்திரன் மாத்தையா, சிறீலங்கா அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை எடுக்கப் போவதாக தேர்தல் முடிந்த கணமே அறிவிப்பாரே?

மா பழுத்தால் கிளிக்காம், வேம்பு பழுத்தால் காக்கைக்காம் என்ற கதையாக, ஆடும் வரைக்கும் ரணில் மாத்தையாவோடு ஆடிப் போட்டு இப்ப கோத்தபாயவோடு கொட்டமடிக்கிறதுக்கு கூட்டமைப்பு தயாராகுமே?

ஆனால் நாட்டில் இருக்கிற எங்கடை சனம் தான் பாவம் பிள்ளையள்.

நான் எங்கடை சனம் என்று சொல்கிறது தமிழ் மக்களை மட்டுமன்றி, எங்கடை தமிழ் பேசுகின்ற முசுலிம் சகோதரர்களையும் சேர்த்துத் தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முசுலிம் காங்கிரசும் சொன்னதைக் கேட்டு எங்கடை தமிழர் தாயகத்தில் வசிக்கிற மக்களில் எண்பது வீதமான ஆட்கள் சஜித் பிரேமதாசாவிற்கு வாக்களிச்சு இருக்கீனம். சஜித் வந்தால் அரசியல் தீர்வு கிடைக்கும், சிங்கள - பௌத்த பேரினவாதத்தை மனுசன் அடக்குவார், தமிழ் - முசுலிம் மக்கள் நினைச்சால் கோத்தபாயவை ஆட்சிக்கு வராமல் தடுக்கலாம் என்றெல்லாம் உந்த பாழாய்ப் போன அரசியல்வாதிகள் சொன்னதை நம்பி சஜித்திற்கு வாக்களிச்சுப் போட்டு பாழ்படுவான் இனி என்ன செய்வான் என்று தெரியாமல் இன்றைக்கு எங்கடை தமிழ் பேசுகின்ற சனம் பதற்றத்திலை முழுசிக் கொண்டு இருக்குது.

பேய்க்குச் சிரிச்சாலும் கோபம் வரும், அழுதாலும் கோபம் வரும் என்ற கதையாக இனித் தமிழர்களும் சரி, தமிழ் பேசும் முசுலிம்களும் சரி என்ன செய்தாலும் கோத்தபாய ஈவிரக்கம் இல்லாமல் கொல்லுவான்.

கடைசியாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து கிடைக்கின்ற தகவல்களின் படி, கிழக்கில் முசுலிம்



மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடங்கிறதுக்கும், வடக்கில் சிங்களக் குடியேற்றங்களையும், புத்த விகாரைகளையும் நிறுவுவதற்குமான ஏற்பாடுகளில் கோத்தபாய இறங்கியிருக்கிறதாகத் தெரிய வருகுது.

இனி வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிய கதை தான்.

பேசாமல் தேர்தலைப் புறக்கணிச்ச ஆறரை இலட்சம் தமிழ் - முசுலிம் உறவுகளோடு சேர்ந்து எங்கடை ஏனைய தமிழ் - முசுலிம் மக்களும் தேர்தலைப் புறக்கணிச்சிருந்தால் சர்வதேசத்திற்காவது ஒரு அழுத்தம் திருத்தமான செய்தியைச் சொல்லியிருக்கலாம்.

ஈக்களிடமிருந்து மன்னரைக் காப்பாற்றப் போர் வாளை எடுத்த முட்டாள் தளபதி போல் எங்கடை கிழட்டுச் சம்பந்தன் செய்த முட்டாள்தனமான காரியத்தால் இப்ப முழுசிக் கொண்டிருக்கிறது எங்கட சனம் தான்.

ஏதோ, மாவீரர்கள் தான் எங்கடை சனத்துக்குத் துணை நிற்க வேண்டும்.

வரட்டே?

# எல்லா மீன்களும் கிடைக்கிறது ஜாமீன் மட்டும் கிடைத்தபாடில்லை!

**துரோகியின் கதி**
**ப.சிதம்பரத்துக்கே**
**இந்த கதி.**
**87 நாட்கள் கடந்து விட்டது.**
**எல்லா மீன்களும் கிடைத்து விட்டது.**

**ஆனால் அவருக்கான ஜாமீன் மட்டும் கிடைத்த பாடில்லை.**

**100-வது நாளை சிறையில் கொண்டாடுவார் போல!**

**ஒரு சம்பவத்தை சொல்லோனும்.**



**2009 - மே 18 ஈழ மண் முள்ளிவாய்க்காலில் தமிழின அழிப்பு முடிவதற்கு 15 நாள் முன்பாக வேண்டப்பட்ட ஒருவரிடம், 'இன்னும் 10 நாட்களுக்குள் அங்கே (முள்ளிவாய்க்காலில்) சாம்பல் மேடு தான் மிஞ்சும். வேறேதும் மிஞ்சாது. அங்கு ஒன்றுமே இருக்காது' என்று கூறியிருந்தார்.**

**இது எப்படி ப.சிதம்பரத்திற்கு தெரியும்? என்ற கேள்வியோடு குமுதம் இணைய தொலைக் காட்சி நிழ்ச்சியில் சர்ச்சையாக்கியிருந்தேன். அதுவே வேறு வகை நெருக்கடியை கொடுத்தது.**

**ப.சிதம்பரம் சொன்ன கெடுப்படி 13வது நாளில் அங்கே இன அழிப்பு நடந்தேறியது. அப்படி என்றால் இன அழிப்பு அவருக்கு தெரிந்துள்ளது. தெரிந்தே துணையாக நின்றுள்ளார்.**

**இது பற்றி 2010 முதலாம் ஆண்டு இன அழிப்பு நாளிலும் பேசப்பட்டது.**

**ஆனால், 'கூட்டணி' கொண்டாட்டம் எல்லாவற்றையும் திரை போட்டு மறைத்து விட்டது.**

**இதை எதற்கு இப்போது சொல்கிறேன்?**

**அந்த துரோகம் தான் இப்போ சுத்தி சுத்தி இப்படி பழி வாங்குகிறதோ என்ற சந்தேகத்தில் தான்...**

*சமூகவலைத்தளத்தில் பதிவு*
*பா.ஏகலைவன்*
*(எழுத்தாளர் தமிழகம்)*
*15.11.2019 பதிவிட்டிருந்தது*

# புலிகள் பன்றிகளை கொல்லாது...

விடுதலைப்-புலிகள் இயக்கம் எப்போதும் பன்றிகளை கொல்வதில்லை. அது தமிழகத்து பன்றிகளாக இருந்தாலும்சரி, டெல்லி பன்றிகள் என்றாலும் சரி, இத்தாலி பன்றிகள் என்றாலும் சரி...

அதுவும் ஏற்கனவே செத்து நாற்றமெடுத்த பன்றிகளை...

இங்கே பிழைப்புக்காகவும், ஓட்டுக்காகவும் புலிகளின் பெயரைச் சொல்ல வேண்டியது. அங்கே விடுதலைப் புலிகளால் உயிருக்கு ஆபத்து என்று கதற வேண்டியது.

இதுவும் ஒரு பிழைப்பு. இப்படியும் ஒரு பிழைப்பு.

புலிகள் எப்போதும் உங்களை சீண்டாது. நாற்றமெடுத்த பிறவிகள் என்று ஒதுங்கிதான் இருக்கும்.

அதைவிட உங்களை கருவறுப்பதாக சபதமெடுத்திருந்தது சீக்கிய இனம். அமிர்தசரஸ் பொற்கோயில் ப்ளு-ஸடார் ஆப்ரேஷின் நினைவிருக்கின்றதா?

ஆமாம், அந்த சீக்கிய இனம் இந்திராகாந்தியை சொல்லி வைத்து செய்தது. நாங்கள் எல்லாம்கூட அழுதோம். இந்திரா மட்டுமல்ல, குடும்பத்தையே கருவறுப்போம் என சபதமெடுத்தார்களாம்.



அதைத்தான் அந்த 'நேமிசந்த் ஜெயின்' என்கிற சந்திராசாமி சொன்னான். 'சொல்லி வை அவனிடம் (ராஜிவ்). அவன் அம்மா சிதறியதைப் போல் அவனும் சிதறி சாவான்' என்று ஆசிரமத்திற்குள் ஆவேசமாக கூறி சபதமெடுத்ததாக உடனிருந்தவன் ஜெயின் கமிஷினில் சாட்சி சொன்னான்.

சந்திராசாமி சொன்னபடியே ராஜிவ்காந்தி இறந்தார். அதற்கும் நாங்கள் அழுதோம். அந்த சந்திராசாமியை விசாரிக்காமல் கடந்த பத்தாண்டுகால காங். ஆட்சியில் காலாட்டிக்கொண்டே இருந்துவிட்டு இப்போது வந்து புலிகளால் உயிருக்கு ஆபத்து என்பது அயோக்கியத்தனம் இல்லையா.

(காங்கிரஸ்கட்சி தலைமை சூமன்மோகன் சிங்கை பத்தாண்டுகள் பதவியில் வைத்து அழகு பார்த்ததே சீக்கிய இனத்தின் கோபத்தை தணிக்கத்தான் என்பது உண்மையா?)

ஆக, இப்படியாக நீங்கள் வடக்கே பழி தீர்த்த பல இனக் குழுக்களின் கோபம் மிச்சம் இருக்கலாம். அவர்கள் யாரேனும் உங்களை பழி தீர்க்கலாமே ஒழிய புலிகள் ஒரு போதும் உங்களைச் சீண்ட மாட்டார்கள்.

அதுவும் கூட்டுச்சேர்ந்து 'முற்றாக அழித்து ஒழித்து விட்டோம்' என அறிவித்துவிட்ட பிறகு எப்படி பழி தீர்ப்பார்கள்.?

டி.ஆர்.பாலுதான் சொல்ல வேண்டும்.

சொக்கத்தங்கம் சோனியா மீது இவ்வளவு அக்கறை இருக்கும் திமுக பிறவிகள் என்ன செய்திருக்க வேண்டும்.?

ராஜிவ் கொலையில் உண்மை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் படவில்லை என்ற ஜெயின் கமிஷின் பரிந்துரையில் பிரதமர் வாஜ்பாய் அமைத்த CBI-யின் MDMA விசாரணை குழு இன்றும் விசாரிப்பதாக உள்ளதே. கடந்த பத்தாண்டு கால காங்.கட்சி ஆட்சியில் அதை விசாரிக்கச் சொல்லி போராடியிருக்கலாமே? ஏன் செய்யவில்லை?

போகட்டும்...

திமுக-வின் டி.ஆர். பாலு அப்படி பேசியதைப் போன்று, யாராவது ஒரு சீக்கிய எம்.பி எழுந்து, சீக்கிய தீவிரவாத அமைப்புகளால் சோனியாவின் உயிருக்கு ஆபத்து உள்ளது? என்று பேசிவிட்டு ஊர்போய் சேரமுடியுமா?

ஆனால், தமிழகத்தில் உள்ள எம்.பி.க்கள் அப்படி பேசிவிட முடிகிறது என்றால் இங்கு உணர்வாளர்களாக இருக்கும் திராவிட கம்பெனிகள் பலவும் 'டபுள் ஏஜன்ட்' தொழிலில் இருப்பதுதான் காரணம்..

குறிப்பு- ஏதாவது ரோசம்-மானம்-சூடு சொரனை இருக்கும் திராவிட கட்சிகள்-இயக்கங்கள்-அமைப்புகள் டி.ஆர். பாலுக்கு மட்டுமல்ல, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மற்ற தமிழக எம்.பிகளையும் எதிர்த்து விமான நிலையத்தில் கறுப்பு கொடி காட்டுவார்களா? என பார்ப்போம்.

*சமூகவலைத்தளத்தில் பதிவு*
*பா.ஏகலைவன்*
*(எழுத்தாளர் தமிழகம்)*
*20.11.2019 பதிவிட்டிருந்தது*

# கோத்தபாய Vs சஜித்
## பெற்ற வாக்குகளும் கைப்பற்றிய மாவட்டங்களும்



நடந்து முடிந்த சிறீலங்காவின் 8வது ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச 13 இலட்சத்து 60 ஆயிரத்து 16 மேலதிக வாக்குகளினால் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். இந்தத் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச 16 தேர்தல் மாவட்டங்களை கைப்பற்றினார். சஜித் பிரேமதாச 6 மாவட்டங்களையே கைப்பற்றினார். அந்த ஆறு மாவட்டங்களும் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவையே.

**மொத்த வாக்குகள்**

கோத்தாபய ராஜபக்ச - 6,924,255
சஜித் பிரேமதாச - 5,564,239
அநுர குமார திஸாநாயக்க - 4,18553
எம்.கே.சிவாஜிலிங்கம் - 12,256.
எம்.எல்.ஏஎம்.ஹிஷ்புல்லாஹ் - 38,814.
நாமல் ராஜபக்ச - 9,497.

### கோத்தபாய வெற்றி பெற்ற மாவட்டங்கள்

கொழும்பு மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 727,713
சஜித் பிரேமதாச – 559,921

களுத்துறை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 482,920
சஜித் பிரேமதாச – 284,213

மாத்தளை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 187,821
சஜித் பிரேமதாச – 134,291

காலி மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 466,148
சஜித் பிரேமதாச – 217,401

அம்பாந்தோட்டை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 278,804
சஜித் பிரேமதாச – 108,906

குருநாகல் மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 652,278
சஜித் பிரேமதாச – 416,961

அநுராதபுரம் மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 342,223
சஜித் பிரேமதாச – 202,348

பதுளை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 276,211
சஜித் பிரேமதாச – 251,706

இரத்தினபுரி மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 448,044
சஜித் பிரேமதாச – 264,503

கம்பஹா மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 855,870
சஜித் பிரேமதாச – 494,671

மஹநுவர மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 471,502
சஜித் பிரேமதாச – 417,355

மாத்தறை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 374,481
சஜித் பிரேமதாச – 149,026

புத்தளம் மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 230,760
சஜித் பிரேமதாச – 199,356

பொலனறுவை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 147,340
சஜித் பிரேமதாச – 112,473

மொனராகலை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 208,814
சஜித் பிரேமதாச – 92,539

கேகாலை மாவட்டம்
கோத்தாபய ராஜபக்ச – 320,484
சஜித் பிரேமதாச – 228,032


### சஜித் வெற்றி பெற்ற மாவட்டங்கள்

யாழ்ப்பாணம் மாவட்டம்
சஜித் பிரேமதாச – 312,722
கோத்தாபய ராஜபக்ச – 23,261
சிவாஜிலிங்கம் – 6,845

வன்னி மாவட்டம்
சஜித் பிரேமதாச – 174,739
கோத்தாபய ராஜபக்ச – 26,105
சிவாஜிலிங்கம் – 1,295

மட்டக்களப்பு மாவட்டம்
சஜித் பிரேமதாச – 238,649
கோத்தாபய ராஜபக்ச – 38,460
ஹிஸ்புல்லாஹ் – 13,228

திருகோணமலை மாவட்டம்
சஜித் பிரேமதாச – 166,841
கோத்தாபய ராஜபக்ச – 54,135
அநுர குமார திஸாநாயக்க – 3,730



அம்பாறை மாவட்டம்
சஜித் பிரேமதாச – 259,673
கோத்தாபய ராஜபக்ச – 135,058
அநுர குமார திஸாநாயக்க – 7,460

நுவரெலியா மாவட்டம்
சஜித் பிரேமதாச – 277,913
கோத்தாபய ராஜபக்ச – 175,823
அநுர குமார திஸாநாயக்க – 5,891

# இனப்படுகொலையாளியின் மீள் வருகையும்....

அந்த ஆட்சியில் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தற்போது ஆட்சி மற்றத்திற்கான தேர்தல் நடைபெறும்போதும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டமைக்கு கோத்தபாய ராஜபக்சவே பொறுப்பாக இருந்தவர். வெள்ளை வான்களில் இளைஞர்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்த பின்னர், சிறுநீரகம் உள்ளிட்ட முக்கிய உறுப்புக்களை எடுத்துவிட்டு படுகொலை செய்து முதலைகள் உள்ள குளத்தில் வீசினர். இது முற்றிலும் உண்மையானது என்பதை, இந்தக் கடத்தலில் ஈடுபட்ட வாகனச் சாரதி ஒருவரே அண்மையில் ஊடகங்களுக்கு முன்பாக ஒப்புக்கொண்டிருந்தார்.

மேலும், தமிழ் இளைஞர்களை புலனாய்வுச் செயற்பாடு என்ற ரீதியில் தமது வலைக்குள் வீழ்த்தி அவர்கள் மூலம் இளைய சமூகத்தையும் பாடசாலை மாணவர்களையும் கஞ்சா போதைப்பொருக்கு அடிமையாக்கியவர் கோத்தபாய. அத்துடன், படையினரைப் பயன்படுத்தி இளைஞர்களைக் கண்டபடி தாக்கிக் காயப்படுத்தியதுடன் வீதிகளில் வைத்தும், வீடுகளுக்குள் புகுந்தும் துப்பாக்கிச் சூடுகளை நடத்தி அவர்களைப் படுகொலை செய்தவர். இதன்மூலம் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் இன்று வரை கண்ணீருடன் இருப்பதற்குக் காரணமானவர் கோத்தபாய.

இதைவிட, யுத்த காலத்தில், சர்வ தேசத்தில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளையும் இரசாயனக் குண்டுகளையும் தருவித்து போர்க்களத்தில் பயன்படுத்தியதன் மூலம் ஒன்றரை இலட்சம் வரையான மக்களைப் படுகொலை செய்தவர்களும் இதே ராஜபக்சக்கள் தான்.

தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் அழிவுகளைச் செய்த கோத்தபாய ராஜபக்ச தேர்தல் களத்தில் நிற்கின்றார் என்பதை அறிந்தவுடனேயே தமிழ் இளைஞர்கள் உட்பட தமிழ் மக்கள் அனைவரும் அச்சமடைந்தனர். அவர் வெல்லக்கூடாது என்பதில் குறியாக இருந்தனர். இதனால் தான் அவருக்கு எதிராகப் போட்டியிட்ட சஜித் பிரேமதாசவிற்கு வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் அனைவரும் வாக்களித்தனர். இதன் மூலம் கோத்தபாயவுக்கு பலமான எதிர்ப்பை வெளிப்படுத்தினர். எனினும், படுமோசமான இனவாதத் தீயில் சிக்கியிருந்த சிங்கள தேசம் கோத்தபாயவிற்கு வாக்குகளை அள்ளி வழங்கியதன் மூலம் அவர் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்த அறிவிப்பை புறந்தள்ளி மக்கள் வாக்களித்தமைக்கு காரணம், தமிழினத்தைக் கொன்றொழித்த கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காகவே. தமிழர்களின் எதிர்ப்பையும் மீறி அவர் ஆட்சிக்கு வந்தமையால் தமிழ் மக்கள் கடும் அச்சமடைந்துள்ளனர். புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் செய்வதறியாது திகைத்துப்போயுள்ளனர்.

கோத்தபாய ராஜபக்சவின் கடும்போக்கு ஆட்சியில், தமிழர் தாயகத்தில் நில ஆக்கிரமிப்புக்களும் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதும் சிங்களக் குடியேற்றங்களும் தீவிரப்படுத்தப்படவுள்ளது. மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்திலும் பாரிய படை முகாம்கள் அமைக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இவைகளை எண்ணி தமிழ் மக்கள் கடும் அச்சமும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.

கோத்தபாய சிறிலங்காவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றமை, ஈழத் தமிழ் மக்களை மட்டுமன்றி தமிழகம் உட்பட பன்னாடுகளில் வாழும் தமிழ் மக்களையும் கடும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது. தேர்தலில் கோத்தபாய 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்ததை உலகத் தமிழர்களை அதிர்ச்சிக்கும் ஏமாற்றத்திற்குள்ளும் தள்ளிவிட்டது என, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கருத்து வெளியிட்டுள்ளார். ஈழத் தமிழர்களின் நலன்களைப் பேணவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் மோடி அரசு அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேபோன்று தமிழகத்தில் உள்ள தமிழீழ விடுதலை உணர்வாளர்களும் தீவிர செயற்பாட்டாளர்களுமான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ், தமிழ்த் தேசிய முன்னணித் தலைவர் பழ.நெடுமாறன் போன்றோர் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாகியமைக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இதற்கு எதிராகவும், தமிழர் தாயகத்தில் தமிழின இருப்பை உறுதிப்படுத்தக் கோரியும் விரைவில் தமிழகத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது நல்லதொரு காலகட்டம். தமிழினத்திற்குக் கிடைத்த வரலாற்றுக் காலகட்டம். தமிழர் தரப்பு இதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களைக் கொன்றொழித்த ராஜபக்சக்களின் ஆட்சிக்கு எதிராக, தமிழின இருப்பை உறுதிப்படுத்தக் கோரி, தமிழகத்திலும் புலம்பெயர் தேசங்களில் போராட்டங்கள் முனைப்புப் பெறவேண்டும்.

இந்த இடத்தில்தான் புலம்பெயர் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களின் ஒற்றுமை வேண்டப்படுகின்றது. தற்போது, புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழீழக் கட்டமைப்புக்களும் தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய அமைப்புக்களும் பலமிழந்துள்ளன. இவற்றை இயக்குபவர்களான தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அனைத்துலக செயற்பாட்டாளர்களும் தமக்குள் பலப் பரீட்சையில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது.

தமிழீழம் பறிபோய்க்கொண்டிருக்கும் நேரத்தில் உங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தயவுசெய்து நிறுத்திக்கொள்ளுங்கள். நான் பெரிது, நீ பெரிது என வாழாமல் நாடு பெரிதென வாழுங்கள் என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்திற்கு இணங்க அனைவரும் ஓரணியில் திரண்டு ஓரிடத்தில் ஒன்றுகூடிப் பேசுங்கள். அனைவரும் ஓரணியில் திரள்வதன் மூலம் பெரும் புரட்சியை, வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். சிங்கள தேசம் திகைத்துப்போகும் அளவிற்கு தமிழினப் பாய்ச்சல் இருக்கவேண்டும். இதுவே தாயக மக்களின் தற்போதைய கோரிக்கையாக உள்ளது.

இந்திய அரசை நோக்கி தமிழகத்திலும் பன்னாடுகளை நோக்கி புலம்பெயர் தேசங்களிலும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் வெடிக்கவேண்டும். இந்த எதிர்ப்பு அலைகளும் கோரிக்கைகளும் சிறிலங்கா ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோரை குற்றவாளிக் கூண்டில் ஏற்றும். அதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே, தமிழக மக்களும் தமிழீழ மக்களும் ஓரணியில் திரளத் தயாராகுங்கள்.



Mohan
Jewellery Mart
3/4 Fois
sans Frais
(Piéce d'identité
+ Rib + C.B)

பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
தங்கநகை சேமிப்புத்திட்டத்தில் இன்றும்
நீங்கள் இணைந்து கொள்ளலாம்!
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord

பரிஸ் லா சப்பலில்
25 ஆண்டுகளுக்கு மேலாக!
மளிகைப் பொருட்கள் அனைத்தும்
ஒரே கூரையின் கீழ்...

Gopal and co
Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

பாலன்ஸ் சலூன்
தமிழர்களால்
நடத்தப்படும்
ஆண்கள்
அழகு நிலையம்

29 rue Philippe de Girard,
75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

Rapid
Emballages

உங்கள் உணவகம், இல்லம்
மற்றும் மண்டப நிகழ்வுகளுக்கான
உபயோகப் பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள...
1 Bis rue du chemin vert,
93800 Epinay sur Seine
Tel : 0158340422 / 0616812200

பரிஸ் லா சப்பலில்

பல் பொருள் அங்காடி
AMBAAL
STORE
இலங்கை, இந்திய, ஆபிரிக்க மற்றும்
ஆசிய மளிகைப்பொருட்கள்,
மரக்கறி வகைகள்,
கடல் உணவு வகைகள்...

192, rue du Fbg.st.Denis
75010 Paris
Tél: 01 42 05 41 85

மாலா மளிகை
மலிவிற்கு மறுபெயர் மாலா
மாலா மார்க்
2Kg நால் 13€95
2Box நண்டு 10€95
2Kings மிளகாய்த்தூள் 11€90
2Kg நால் 10€99
அனைத்து
மளிகைப் பொருட்களும்
ஒரே இடத்தில் - உயர் தரத்தில்
60 Rue Louis Blanc, 75010 Paris
Tél : 01 40 34 42 49
M°: La Chapelle ou Gare du Nord

சாரி பிளவுஸ்
30 நிமிடங்களில்
தைத்துத் தரப்படும்
Devi Textile & Tailors

ஆண் பெண்
இருபாலாருக்கும்
அனைத்து விதமான ஆடைகளும்
மற்றும் உங்கள் வசதிக்கு
அமைவான தோல்பைகளும்
உங்கள் எண்ணத்திற்கேற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
Tél: 09 51 01 85 59
Suresh: 07 81 29 86 50
29, Bld de la Chapelle
75010 Paris
M°: La Chapelle (ligne 2)

# எஸ் - 400 ஏவுகணைகள் திட்டமிட்டப்படி ஒப்படைக்கப்படும்

## - ரஷ்ய அதிபர் அறிவிப்பு -

எஸ்-400 ரக வான் பாதுகாப்பு ஏவுகணைகள், இந்தியாவிடம் திட்டமிட்டபடி ஒப்படைக்கப்படும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டின் தெரிவித்துள்ளார். ரஷ்யாவிடமிருந்து 5.43 பில்லியன் டொலர் மதிப்பில் (39 ஆயிரம் கோடி இந்திய ரூபா) எஸ்-400 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை கொள்முதல் செய்வது தொடர்பாக, இரு நாடுகளுக்கும் இடையே கடந்த





ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டினின் இந்திய வருகையின்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிலையில், பிரேசில் தலைநகர் பிரேசிலியாவில் நடைபெற்ற 'பிரிக்ஸ்' நாடுகள் மாநாட்டின் இடையே, பிரதமர் நரேந்திர மோடியும், அதிபர் விளாடிமீர் புட்டினும் கடந்த 13ம் திகதி இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்திய – ரஷ்ய உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து அவர்கள் விரிவாக விவாதித்தனர். பிரிக்ஸ் மாநாடு 14ம் திகதி நிறைவடைந்ததையொட்டி, செய்தியாளர்களுக்கு அதிபர் விளாடிமீர் புட்டின் பேட்டியளித்தார். அப்போது, அவர் கூறுகையில், எஸ்-4 வான் பாதுகாப்பு ஏவுகணை தயாரிப்பு பணிகள் ஏற்கனவே திட்டமிட்டபடி சரியாக நடைபெற்று வருகின்றன. எனவே, அந்தப் பணிகளை விரைவுபடுத்துமாறு, இந்தியா தரப்பில் கோரப்படவில்லை. இருப்பினும் திட்டமிட்டபடி எஸ்-4 வான் பாதுகாப்பு ஏவுகணைகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும் என்றார்.

ரஷ்யா, ஈரான் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளிடமிருந்து ஆயுதங்கள், பாதுகாப்புத் தளவாடங்களை கொள்முதல் செய்யும் நாடுகள் மீது தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா ஏற்கெனவே அறிவித்துள்ளது. அந்த வகையில் இந்தியாவையும் அமெரிக்கா எச்சரித்தது. எனினும், ரஷ்யாவிடமிருந்து எஸ்-400 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை வாங்கும் ஒப்பந்தத்தை கைவிடப் போவதில்லை என்றும் அமெரிக்காவிடம் இந்தியா தெரிவித்துவிட்டது. இந்த விவகாரத்தில் தேச நலனே முக்கியம் என்றும் இந்தியா தெரிவித்தது.

இந்நிலையில், இந்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார். எஸ்-400 ஏவுகணை தடுப்பு அமைப்பை தங்கள் எதிர்ப்பை மீறி இந்தியா பெறுவதற்காக அதன் மீது பொருளாதார தடை விதிக்கப்படாது என்று கூறியுள்ளார். இந்த விவகாரத்தில் இந்தியா மீது பொருளாதார தடை விதிக்க எந்த காலக்கெடுவும் நிர்ணயிக்கப்படாதபோது, அதுகுறித்த பேச்சுக்கு இடமில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இந்தியா தனது பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதில் எந்த தவறும் இல்லை என்றாலும், ஒருபுறத்தில் ஆயுதங்களை கொடுத்துவிட்டு, மறுபுறத்தில் ரஷ்யா உளவு பார்க்க துடிக்கும். எனவே, இந்தியா மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

எஸ்-400 ஏவுகணை தடுப்பு அமைப்பை வாங்கியுள்ள துருக்கி விவகாரத்திலிருந்து, இந்தியா முற்றிலும் மாறுபடுவதாகவும் அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். இந்தியா போன்று அமெரிக்காவின் கடும் எதிர்ப்பை மீறி ரஷ்ய நாட்டிடம் இருந்து எஸ்-400 ஏவுகணைத் தடுப்பு அமைப்பை துருக்கி வாங்கியது. இதனையடுத்து, துருக்கிக்கு வழங்கவிருந்த போர் விமானங்களில் ஒன்றான எஃப்-35 ரக போர் விமானத்தை வழங்க முடியாது என அமெரிக்கா திட்டவட்டமாக மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா மற்றும் இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி எஸ்-400 ஏவுகணை தடுப்பு ஆயுதத்தின் அனைத்து தொகுப்புகளும் 2023ம் ஆண்டு இறுதிக்குள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எஸ்-400 வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பானது, எதிரிகளின் போர் விமானம், அதிவேக ஏவுகணைகள் ஆகியவற்றை தாக்கி அழிக்க கூடியதாகும். தரையிலுள்ள இலக்குகளை தாக்கவும் இந்த அமைப்பை பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, ரஷ்யாவுடன் ஆயுத ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள எகிப்தின் முடிவை எதிர்த்து பொருளாதாரத் தடை விதிக்கப்படலாம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. ரஷ்யாவிடமிருந்து சுமார் 20 மில்லியன் டொலர் மதிப்புள்ள இருபது F-35 ஜெட் விமானங்களை வாங்க எகிப்து ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்நிலையில் ரஷ்யாவுடனான எகிப்தின் ஆயுத ஒப்பந்தத்தை அமெரிக்கா விமர்சித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் எகிப்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் ரஷ்யாவுடனான எகிப்து மேற்கொண்டுள்ள ஆயுத ஒப்பந்தங்கள் எதிர்காலத்தில் அமெரிக்கா, எகிப்துக்கு அளிக்கும் பாதுகாப்பு பரிவர்த்தனைகள் மற்றும் பாதுகாப்பு உறவைச் சிக்கலாக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் எகிப்து மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படலாம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

## 5.4 பில்லியன் பேஸ்புக் கணக்குகள் நீக்கம்

ஆபாசமான மற்றும் தவறான தகவல்களை வெளியிட்ட 5.4 பில்லியன் போலி பேஸ்புக் கணக்குகளை அந்நிறுவனம் நீக்கி உள்ளது. இது தொடர்பாக பேஸ்புக் வெளியிட்டுள்ள தகவலில், ஒவ்வொரு ஆண்டும் இது போன்ற போலி கணக்குகளை கண்டறிந்து நீக்கி வருகிறோம் என தெரிவித்துள்ளது. ஆபாசமான மற்றும் தவறான தகவல்கள் பதிவிடப்படும் கணக்குகள், சமூக வலைதள பாதுகாப்பு அடிப்படையில் நீக்கப்பட்டு வருகிறது என கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த ஆண்டு 5.4 பில்லியன் பேஸ்புக் கணக்குகள் நீக்கப்பட்டுள்ளன என கூறப்பட்டுள்ளது. ஆனால் நீக்கப்பட்ட அடுத்த நிமிடமே புதிய கணக்குகள் உருவாக்கப்படுகிறது எனவும் தெரிவித்தது. இதை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கி உள்ளோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய போலி கணக்குகளை கண்டறியவும், நீக்கவும் பேஸ்புக் நிறுவனம் பெரிய அளவிலான தொகையை முதலீடு செய்துள்ளது என கூறியுள்ளது. இத்தகைய போலி கணக்குகள் வைத்திருப்போர் குறித்த விரிவான அறிக்கையை அளிக்க வேண்டும் என அமெரிக்க அரசு கேட்கும் விபரங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என தெரிவித்தது. பேஸ்புக் கணக்குகள் குறித்து அதிக விபரங்கள் கேட்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா, ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகள் முன்னணியில் உள்ளதாக கூறப்படுகிறது.

## ஒசாமா பின்லேடன், ஹக்கானி, ஹபீஸ் சயீத் கதாநாயகர்கள்

- பர்வேஷ் முஷாரப்

ஒசாமா பின்லேடன், ஹக்கானி, ஹபீஸ் சயீத் ஆகியோர் எங்கள் கதாநாயகர்கள் என்றும், முஜாகிதீன் அமைப்புக்கு பயிற்சி அளித்து ஆயுதம் வழங்கினோம் என்றும் பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச ஊடகம் ஒன்றில் பேசிய பர்வேஷ் முஷாரப் கூறியதாவது: 1979ம் ஆண்டில், ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானுக்கு நன்மை செய்வதற்காகவும், ரஷ்யாவை




நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காகவும் நாங்கள் மதப் போர்க்குணத்தை அறிமுகப்படுத்தினோம்.

நாங்கள் உலகம் முழுவதிலும் இருந்து முஜாகிதீன்களை அழைத்து வந்தோம், அவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கினோம். நாங்கள் தலிபான்களுக்கு பயிற்சி அளித்தோம்,

காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் வந்தவர்களுக்கு ஆதரவு அளித்து பயிற்சி அளித்தோம். ஒசாமா பின்லேடன், ஹக்கானி, ஹபீஸ் சயீத் ஆகியோர் எங்கள் ஹீரோக்கள். அய்மான் அல்-ஜவாஹிரி எங்கள் கதாநாயகர்கள். பின்னர் உலகளாவிய சூழல் மாறியது. உலகம் விடயங்களை வித்தியாசமாக பார்க்கத் தொடங்கியது. எங்கள் கதாநாயகர்கள் வில்லன்களாக மாற்றப்பட்டனர் என அவர் கூறினார்.

## குழந்தைகளின் இறப்பு நைஜீரியா முதலிடம்!

நிமோனியாவால் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் நைஜீரியா முதலாவது இடத்தில் உள்ளது என ஐநா கூறியுள்ளது. உலகளவில் ஒவ்வொரு 39 விநாடிக்கும் ஒரு குழந்தை நிமோனியாவால் உயிர் இழக்கிறது. நிமோனியா, குணப்படுத்தக்கூடிய மற்றும் தடுக்கக்கூடிய நோயாக இருந்தும் 2018ம் ஆண்டில் நிமோனியாவால் ஐந்து வயதிற்

»»»

ஸ்பெயினில் கடந்த 4 ஆண்டுகளில் 4வது முறையாக பொதுத் தேர்தல் கடந்த 10ம் திகதி நடைபெற்றது. கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு பிரதமராகப் பொறுப்பேற்ற பெட்ரோ சான்செஸால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க முடியாமல் போனதையடுத்து, இந்தத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் பிரசாரத்தில் காடலோனியோ பிரிவினைவாதத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

»»»

ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் அருகே உள்ள திறந்தவெளி மிருக காட்சி சாலையில் 2015ம் ஆண்டு சைபீரிய புலிக்கு உணவாக ஆடு ஒன்றை



உயிருடன் அனுப்பினர். ஆனால் ஆட்டைச் சாப்பிடுவதற்கு பதிலாக புலி அதன் மீது அன்பு மழை பொழிந்தது. ஆடும் புலியும் நட்பாக பழகின. நான்கு ஆண்டுகளாக நட்பாக பழகி வந்த ஆடு, அண்மையில் உடல்நலக்குறைவால் பரிதாபமாக உயிரிழந்தது.

»»»

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான உகாண்டாவில், கடந்த வாரம் இடியுடன் கூடிய கனமழை பெய்தது. ஒரு கூட்டத்தினர் மழையில் நனையாமல் இருக்க ஒரு மரத்துக்கு அடியில் ஒதுங்கி நின்றனர். அப்போது திடீரென அங்கு மரம் மீது இடி விழுந்ததில் ஆறு பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 11 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உகாண்டா நாட்டில் இது போல் இடி தாக்கி மக்கள் இறப்பது வழக்கமாக நடைபெறக்கூடிய ஒன்று தான். கடந்த இரு மாதங்களுக்கு முன்பு கூட நான்கு விவசாயிகள் இடி தாக்கி உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

»»»

சுவிட்சர்லாந்து வங்கிகளில் செயல்பாடற்ற நிலையில் இருக்கும் கணக்குகளின் விவரங்களை 2015ம் ஆண்டு அந்நாட்டு அரசாங்கம் வெளியிட்டது. பெருமளவான வெளிநாட்டவர்களின் இந்த கணக்குகள் அனைத்தும் 1955ம் ஆண்டிலிருந்து செயல்பாடற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 2600 வங்கிக் கணக்குகளின் விவரங்களை சுவிஸ் அரசாங்கம் வெளியிட்டது. இந்த கணக்குகளுக்கு உரிமை கோருவதற்கான காலக்கெடு அடுத்த ஆண்டோடு நிறைவடைகிறது. இந்த கணக்குகளுக்கு உரிய ஆவணங்களோடு யாரும் உரிமை கோரவில்லையெனில் அந்த பணம் சுவிட்சர்லாந்து அரசாங்கத்திற்கு சொந்தமானதாக மாற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

»»»

அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவின் பிரதான சாலை ஒன்றில் சூழலியல் செயற்பாட்டாளர் கிரெட்டா துன்பெர்கின் பிரம்மாண்ட ஓவியமொன்று வரையப்பட்டுள்ளது. பதினைந்து வயதே ஆன கிரெட்டா துன்பெர்க்,

SEREE MAHAL
ARTICLES DE CADEAUX, BRICOLAGE
வீட்டு விழாக்களுக்குத் தேவையான
தரமான அன்பளிப்புப் பொருட்கள் மலிவு விலையில்!
100% எலி, பூச்சி கொல்லி மருந்துகள்
எம்மிடம் கிடைக்கும்!
14, rue Cail, 75010 Paris
Tel: 06 69 58 61 61
09 51 15 82 03
(M) La Chapelle ou Gare du Nord

Île-de-Franceஇல்
சொந்தமாக ஒரு வீடு!
நீங்கள் விரும்பிய இடத்தில்!
தொடர்பு: 07 64 08 93 83
1F (Studio) முதல் F5 (5 அறைகள்) வரையான வீடுகள்.
அடுக்குமாடி கட்டிடத்தில்!
- Frais de Notaire 0% முதல் 2,5% வரை
- வங்கிக்கடன் ஆலோசனைகள்!
- வட்டி இல்லாத கடன்கள்

எம்மிடம் வீடுகள் இருப்பில் உள்ள இடங்கள்...

நல்ல நிலையில்
கடந்த 4 வருடங்களாக
இயங்கிவரும்
BB Grill Bail
விற்பனைக்கு



தொடர்புகளுக்கு:
07 64 08 93 83




www.acheter-appartement-neuf.com
தமிழில் உரையாடி தமிழிலே விளக்கங்களை பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு: 07 64 08 93 83

OM MURUGA
DESIGN & PRINT
+33 1 71 93 34 32
Info@omprint.fr
71 Rue Louis Blanc 75010 Paris


NEW
Ria MONEY TRANSFER
OM MURUGA
பணம் அனுப்பும் சேவை
BANK CARD மூலம் RIAஇல்
பணம் அனுப்பிக் கொள்ளலாம்
VISA
VISA Electron
EUROCARD MasterCard
Maestro

மண்டபம், அலங்காரம் உட்பட
உங்கள் விழாக்களிற்குத் தேவையான
அனைத்து ஒழுங்குகளிற்கும்!



baby.ballon@live.fr
Baby ballon
பேபி பலூன்
டெக்கரேஷன்
01 39 80 85 23 - 06 13 06 20 29

VICHNESH SHOP
மளிகை ஸ்தாபனம்
அனைத்து வகையான
மளிகைப் பொருட்கள் மற்றும்
அனைத்து நாடுகளுக்கான
தொலைபேசி அட்டைகள்
கழிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்!



8, Esplanade de L'Europe
95100 Argenteuil
Tél: 01 39 81 35 60

# ஆப்கான், ஈராக் போர்க்குற்றங்கள்

## அமெரிக்க அதிகாரிகளுக்கு மன்னிப்பு

## ஆதாரங்களை மறைத்தது பிரித்தானியா

ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட இரண்டு அமெரிக்க இராணுவ அதிகாரிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக டிரம்ப் அறிவித்துள்ளார். ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தொடங்கிய போர் 19வது ஆண்டாக நீடித்து வருகிறது. அங்கு ஆட்சியில் இருந்த தலிபான்களை விரட்டியடித்து விட்டாலும்கூட, அமெரிக்க படைகள் அங்கிருந்து தலிபான்களுக்கு எதிராக தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. இந்த நிலையில் அங்கு அமெரிக்க படையில் இடம்



பெற்று போர் புரிந்து வந்த இரு இராணுவ அதிகாரிகள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக லெப்டினன்ட் ஜெனரல் கிளிண்ட் லாரன்ஸ், மேஜர் ஜெனரல் மேத்யூ கோல்ஸ்டீன் ஆகியோர் மீது விசாரணை நடைபெற்றது.

அமெரிக்க படையினரை நோக்கி உந்துருளியில் வந்த 3 பேரை சுட்டுக்கொல்லும்படி சக படையினருக்கு கிளிண்ட் லாரன்ஸ் உத்தரவிட்டதற்காக 19 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் 6 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத்தண்டனை அனுபவித்து



வந்தார். இந்த நிலையில் அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டார். ஆப்கானிஸ்தானில் பிடிபட்டிருந்த ஒரு பயங்கரவாதி வெடிகுண்டு தயாரிப்பதில் வல்லுனராக இருந்து, அமெரிக்க படைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்ததாக கூறி மேத்யூ கோல்ஸ்டீன் சுட்டுக்கொன்று விட்டார். அவர் மீது விசாரணை நடந்து வந்தது. இந்த நிலையில் அவருக்கும் ஜனாதிபதி டிரம்ப் மன்னிப்பு வழங்கியுள்ளார். போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கு ஆளான கடற்படை அதிகாரி எட்வர்டு கல்லாகர் விடுவிக்கப்பட்ட நிலையில், அவருடைய தகுதியை இரத்து செய்ததை திரும்ப வழங்கி ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் பிரித்தானிய படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் சம்பந்தமான நம்பகமான சான்றுகளை பிரித்தானிய அரசாங்கமும் இராணுவமும் மூடிமறைத்துள்ளதாக பி.பி.சி. மற்றும் சண்டே டைம்ஸ் ஊடகங்களால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

படையினரால் சிறுவர்கள் கொல்லப்பட்டமை மற்றும் பொதுமக்கள் சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்வதற்கு பிரித்தானிய அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்டு கசிந்த இரு உத்தரவு ஆவணங்களிலேயே மேற்படி சான்றுகள் காணப்படுவதாக கூறப்படுகிறது.

பிரித்தானிய படையினர் ஒருவர் தன்னால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை அடித்து சித்திரவதை செய்து பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி படுகொலை செய்தமை தொடர்பான குற்றச்சாட்டும் இந்தக் குற்றச்சாட்டுக்களில் உள்ளடங்குகிறது. சண்டே டைம்ஸ் மற்றும் பி.பி.சி. பனோரமா நிகழ்ச்சியால் முன்னெடுக்கப்பட்ட ஒரு வருட கால விசாரணையின்போது போர்க்குற்றங்கள் தொடர்பான சான்றுகளைக் கண்டறிந்த இராணுவ புலனாய்வாளர்களால் மேற்படி மூடிமறைப்பு தொடர்பான விவகாரம் அம்பலமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதம் அதிகரித்தே காணப்படுகின்றது.

இது குறித்து ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (யுனிசெஃப்) தெரிவித்துள்ளதாவது:– உலகளவில், நிமோனியாவால் கடந்த ஆண்டு ஐந்து வயதிற்குட்பட்ட 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிர் இழந்துள்ளனர். அதாவது 39 வினாடிக்கு ஒரு குழந்தை ஆகும். பெரும்பாலான இறப்புகள் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஏற்பட்டுள்ளன. மேலும் வாழ்க்கையின் முதல் மாதத்திற்குள் கிட்டத்தட்ட 153,000 குழந்தைகள் இறந்துள்ளனர்.

நிமோனியாவால் குழந்தைகள் இறப்புகளில் ஐந்து நாடுகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. நைஜீரியா (162,000), இந்தியா (127,000), பாகிஸ்தான் (58,000),



கொங்கோ ஜனநாயக குடியரசு (40,000) மற்றும் எத்தியோப்பியா (32,000). இந்த ‘மறக்கப்பட்ட தொற்றுநோய்’ இப்போது ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் 15 சதவீத இறப்புகளுக்கு காரணமாக உள்ளது. ஆயினும், உலகளாவிய தொற்று நோய் ஆராய்ச்சி செலவினங்களில் வெறும் 3 சதவீதம் மட்டுமே இந்த நோய்க்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

நிமோனியாவால் குழந்தைகள் இறப்புகளுக்கும், வறுமைக்கும் இடையிலான வலுவான தொடர்பு மறுக்க முடியாதது. குடிநீருக்கான அணுகல் இல்லாமை, போதிய சுகாதாரப் பாதுகாப்பு இல்லாதது மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் உட்புற காற்று மாசுபாடு ஆகியவையே நோய் பாதிப்புக்கு முக்கிய காரணங்களாகும். நிமோனியா தொடர்பான இறப்புகளில் பாதி காற்று மாசுபாட்டுடன் தொடர்புடையது.


# தென் சீனக் கடல்

## இராணுவ பலத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும்

### அமெரிக்காவிடம் சீனா வலியுறுத்தல்

தென் சீனக் கடல் பகுதியில் இராணுவ பலத்தை காட்டும் வேலையை நிறுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்காவிடம் சீனா கூறியுள்ளது. தென்சீனக் கடல் பகுதியில் உள்ள தீவுகள் மீதான உரிமை தொடர்பாக சீனா, இந்தோனேசியா, மலேசியா, வியட்நாம், ஜப்பான் ஆகிய நாடுகளிடையே பல ஆண்டுகளாக பிரச்சனை நீடித்து வருகிறது. இதில் அமெரிக்கா, சீனாவுக்கு எதிரான நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இது சீனத் தரப்புக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், இம்மாதத் தொடக்கத்தில் அமெரிக்கா, அவுஸ்திரேலிய கடற்படையினர் இணைந்து தென் சீனக் கடல் பகுதியில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டனர். இதற்கு சீனா அப்போதே கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

சரக்கு போக்குவரத்திற்கு மிகமுக்கியமான கடல் வழியான தென் சீனக் கடலுக்கு, சீனா முழுஉரிமை கொண்டாடுவதை அமெரிக்கா ஏற்கவில்லை. தாய்லாந்து தலைநகர் பாங்கொங்கில் தென்கிழக்கு ஆசிய




நாடுகள் கூட்டமைப்பு (ஆசியான்) மற்றும் சர்வதேச நாடுகளின் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. இந்த நிலையில் சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் ஃபெங்கும், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மார்க் எஸ்பரும் கடந்த 18ம் திகதி பாங்கொக்கில் சந்தித்துப் பேசினர். அப்போது தென்சீனக் கடல், ஹொங்கொங் போராட்டம் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக சீனாவின் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வூ கியான் தெரிவித்துள்ளார்.

தென்சீனக் கடலில் அமைதி நிலவ வேண்டும் என்பதில் சீனா உறுதியாக இருப்பதாகவும், அந்த பகுதியில் தனது இராணுவ பலத்தை காட்டி பதற்றத்தை தூண்டும் வேண்டும் வேலையை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மார்க் எஸ்பரிடம் வெய் ஃபெங் கூறியதாக வூ கியான் கூறியுள்ளார்.

தென் சீனக் கடல் பகுதியில் தேவையில்லாமல் ஆதிக்கத்தை நிலை நாட்ட முயற்சிப்பது, அங்கு பிரச்சனை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுவது கூடாது என்று சீன தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இதுபோன்ற செயல்கள் அங்கு மேலும் பதற்றத்தை அதிகரித்து பிரச்சனைக்கு வழி வகுக்கும். எனவே, தென் சீனக் கடல் பகுதியில் அமெரிக்கா தனது செயல்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்திலிருந்து புவியைக் காக்க வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்டு தனியாளாகப் போராடி வருபவர். ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த சுவரோவியக் கலைஞர் ஆந்த்



ரேஸ் இக்லெசியாஸ், கோப்ரே என்ற புனைபெயரில் தனது ஓவியக் கலைப் பணியைத் தொடர்ந்து வருகிறார். இவர் தற்போது சான் பிரான்சிஸ்கோவின் பிரதான சாலையை ஒட்டிய உயரமான கட்டடத்தின் பக்கச் சுவரில் கிரெட்டா துன்பெர்க்கின் ஓவியத்தை வரைந்துள்ளார்.

»» »»

நெதர்லாந்து நாட்டின் ராணி மேக்சிமா, வருகிற 25ம் திகதி முதல் 27ம் திகததி வரை 3 நாள் அரசு முறை பயணமாக பாகிஸ்தான் செல்கின்றார். இந்த பயணத்தின் போது அவர் பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி மற்றும் பிரதமர் இம்ரான்கான் ஆகியோரை தனித்தனியாக சந்தித்து பேசுகிறார்.

»» »»

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜுலியன் அசாஞ்சேக்கு எதிரான பாலியல் பலாத்கார வழக்கை சுவீடன் அரசு கைவிட்டது. அமெரிக்காவுக்கு எதிரான பல்வேறு ஆவணங்களை வெளியிட்ட அசாஞ்சே பிரித்தானியாவில் உள்ள ஈகுவடோர் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார். 2 மாதங்களுக்கு முன் அசாஞ்சே தூதரகத்தில் இருந்து ஈகுவடோர் அரசு வெளியேற்றியது. தூதரகத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட அசாஞ்சேவை பிரித்தானியா கைது செய்து சிறையில் அடைத்தது.

»» »»

ரஷ்யாவின் மத்திய பகுதியில் உள்ள சமாரா நகரில் எரிபொருள் நிலையம் ஒன்று, தமது எரிபொருள் நிலையத்தை மக்களிடம் பிரபலப்படுத்துவதற்காக அதன் உரிமையாளர் வினோத சலுகை ஒன்றை அறிவித்து விளம்பரப்படுத்தினார். அதன்படி எரிபொருள் நிலையம் திறந்த பிறகு முதல்



3 மணி நேரத்துக்குள் நீச்சல் உடையில் வரும் அனைவருக்கும் இலவசமாக எரிபொருள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. பெண்கள் நீச்சல் உடையில் வந்து இலவச எரிபொருளைச் பெற்று செல்வார்கள். இதன் மூலம் எரிபொருள் நிலையம் கவர்ச்சிகரமான இடமாக மாறி மக்களிடம் பிரபலமாகி விடும் என உரிமையாளர் நினைத்தார். ஆனால் நடந்தது வேறு. இலவச எரிபொருள் குறித்த விளம்பரம் வெளியானதும் ஏராளமான ஆண்கள் பெண்களின் நீச்சல் உடையை அணிந்துகொண்டு எரிபொருள் நிலையத்துக்கு வந்தனர். நீச்சல் உடை அணிந்து வர வேண்டியவர்கள் ஆண்களா, பெண்களா என விளம்பரத்தில் குறிப்பிடாததால் எரிபொருள் நிலையத்தில் பெண்களை விட ஆண்களின் கூட்டம் அலை மோதியது.

# பிரான்சில் உணர்வெழுச்சியோடு இடம்பெற்ற மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு!

பிரான்சு வாழ் மாவீரர் பெற்றோர் உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த




24.11.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு Nanterre பகுதியில் பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் உணர்வெழுச்சியோடு இடம்பெற்றது.










# மாவீரர் நினைவுசுமந்த கலைத்திறன் போட்டிகள் 2019

பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் ஆண்டு தோறும் நடாத்தும் தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுசுமந்த கலைத்திறன் போட்டிகள் மூன்று தினங்கள் இடம் பெற்று முடிந்துள்ளன. கடந்த 03.11.2019 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 09.11.2019 சனிக்கிழமை பரிசின் புறநகர் பகுதியில் ஒன்றான நந்தியார் பிரதேசத்தில் தெரிவுப் போட்டிகளாக இடம்பெற்றிருந்தன.

இறுதிப் போட்டிகள் கடந்த 10.11.2019 ஞாயிற்றுக்கிழமை பொண்டி தமிழ்ச் சோலை மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு பேச்சு மற்றும் 13.00 மணிக்கு பாட்டு ஆகிய போட்டிகள் இறுதிப் போட்டிகளாக இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் மாவீரர் திருஉருவப்படத்திற்கான ஈகைச் சுடரினை 20.06.1999 அன்று யாழ்.கோண்டாவில் பகுதியில் வீரச்சாவடைந்த மேஜர் இன்பன் அவர்களின் சகோதரி





ஏற்றிவைத்து மலர்வணக்கம் செலுத்தியிருந்தார். தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு போட்டிகள் விறுவிறுப்பாக ஆரம்பமாகியிருந்தன.

இப்போட்டிகளில் துறைசார்ந்த நடுவர்கள் கலந்து சிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஓவியப்போட்டிகள் தமிழ்ச்சோலைப் பள்ளிமட்டத்தில் இடம் பெற்றிருந்தன.

அனைத்துப் போட்டிகளிலும் மாணவர்கள் போட்டிகளில் மிகவும் ஆர்வத்தோடு பங்கு பற்றியிருந்தமையைக் காணமுடிந்தது.













# மேற்குலகம் தமிழர்களைக்...

எனது கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்காமல் சுற்றி வளைத்து மார்டின் கூறினார்: 'பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தின் கீழுள்ள மாகாண சபைகள் தான் உங்களுக்கான தீர்வு. அது தான் உங்களுக்கான அடிப்படை. ஆனால் மாகாண சபைகளில் தமிழர்கள் அக்கறையின்றி இருக்கின்றார்கள். இப்படியே மாகாண சபைகளில் தமிழர்கள் அக்கறையின்றி இருந்தால் அதை சிறீலங்கா அரசாங்கம் கலைத்து விடும். வடக்கு மாகாண சபை சட்டங்களை இயற்றுவதற்கு என்று சுவிஸ் அரசாங்கம் பல மில்லியன் சுவிஸ் பிராங்ககளை விக்னேஸ்வரனுக்குக் கொடுத்தது. ஆனால் அவர் அதனைப் பயன்படுத்தவில்லை. அந்தப் பணம் திரும்பி வந்து விட்டது. நான் பசில் ராஜபக்சவை சந்தித்த பொழுது அவர் கூறினார், தமிழ் மக்களுக்கு மாகாண சபைகளில் அக்கறை இல்லை. எனவே தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மாகாண சபைகள் இல்லாதொழிக்கப்படும் என்றார் பசில்.'

உடனே நான் கூறினேன், 'மாகாண சபைகள் தமிழர்களுக்குத் தேவையில்லை. எங்களுக்குத் தேவை மாநில சுயாட்சி. அது இல்லையென்றால் தனிநாடு.'

'அப்படி என்றால் உங்களுக்கு ஒன்றுமே கிடைக்காது' என்றார் மார்டின்.

ஒரு கணம் எல்லோருமே திகைத்துப் போனோம்.

மீண்டும் நான் கூறினேன்: 'கடந்த பத்து ஆண்டுகளாக மேற்குலகை நம்பி எதுவுமே நடைபெறவில்லை என்ற விரக்தியின் விளிம்பில் தமிழ் மக்கள் உள்ளார்கள். இதே நிலை நீடித்தால் இலங்கையில் விரக்தியடைந்துள்ள தமிழர்கள் ஆயுதம் ஏந்தக் கூடும். இன்னுமொரு ஆயுதப் போராட்டம் இலங்கையில் வெடிப்பதையா நீங்கள் விரும்புகின்றீர்கள்?'

இம்முறை மீண்டும் மார்டின் மௌனம் சாதித்தார். ஆனால் முதல் தடவை மௌனம் சாதித்த பொழுது இருந்த வெற்றி மிதப்பு அவரது முகத்தில் காணப்படவில்லை. தனது கண்களைக் கீழே தாழ்த்தி, புருவங்களைச் சுருக்கிச் சில வினாடிகள் ஏதோ யோசித்தார். பின்னர் எதுவும் பேசாமல் மீண்டும் தனது தட்டில் இருந்த இன்னொரு இறைச்சித் துண்டை வெட்டி, அதனை மென்று உண்ணத் தொடங்கினார்.

ஆழ்ந்த சிந்தனையில் அவர் இருப்பது புரிந்தது.

✦ ✦ ✦ ✦

யூ.ரி.ஓ விடுதியை 17.10.2019 வியாழக்கிழமை இரவு நாம் சென்றடைந்த பொழுது எம்மை வரவேற்று அளவளாவிய பொழுது சாந்த சொரூபனாக இருந்த மார்டின் ஸ்ரேசிங்கரை 19.10.2019 மதியம் காண முடியவில்லை.

அதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது.

அதனைத் தனது வாயாலேயே என்னிடம் மார்டின் கூறினார்: 'நீங்கள் எல்லோருமே புலிகளைத் தமிழர்களின் மீட்பர்களாகத் தானே கருதுகின்றீர்கள்? அவர்களை விமர்சிப்பதற்கு நீங்கள் யாருமே தயாராக இல்லை.'

ஆம் இது தான் மார்டின் அவர்கள் சீறிப் பாய்ந்ததற்குக் காரணம்.

முதல் நாள் 18.10.2019 வெள்ளிக்கிழமை மதிய போசனத்தை முடித்துக் கொண்டு மாநாட்டு மண்டபத்திற்குள் நாம் நுழைந்த பொழுது அது நடந்தது.

வெது அடுப்பில் வைத்து மிதமாகச் சுடப்பட்ட மீன், பஸ்டா, உருளைக் கிழங்கு, நாவூறும் சிற்றுண்டிகள் என்று வயிறார உணவருந்திய களைப்பில், இருந்த இடத்தில் நித்திரை கொள்ளும் மனப்பான்மையுடன் அமர்ந்திருந்த அனைவரிடம் மார்டின் கூறினார்: 'நீங்கள் நித்திரை கொள்ளாதிருப்பதற்காக உடற்பயிற்சி ஒன்றை வழங்கப் போகிறோம். எல்லோரும் எழுந்து வாருங்கள். உங்களிடம் பொதுவாக பதினைந்து கேள்விகளைக் கேட்போம். அக் கேள்விகளோடு நீங்கள் முழுமையாக உடன்பட்டால் எனது வலது பக்கத்தில் நிற்கலாம். முழுமையாக உடன்படவில்லை என்றால் எனது இடது பக்கத்தில் நிற்கலாம். அரை மனதுடன் நின்றால் நடுவில் நிற்கலாம்.'

அதனைத் தொடர்ந்து அங்கிருந்த புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளை நோக்கிப் பதினைந்து கேள்விகள் தொடுக்கப்பட்டன. அதில் ஒன்றுதான் 'தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களின் மீட்பர்களா?' என்ற கேள்வி.

இந்தக் கேள்விக்கு அங்கிருந்த பத்தொன்பது பிரதிநிதிகளில் பதினேழு பேர் மார்டின் அவர்களின் வலது பக்கத்தில் வந்து நின்றார்கள். அதாவது அவர்களின் பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களின் மீட்பர்கள் என்பது தான். ஏனைய இரண்டு பிரதிநிதிகளும் நடுவில் நின்றார்கள். அதாவது இக் கேள்விக்கு ஆம் என்றும் இல்லாமல், இல்லை என்றும் இல்லாமல் அரைமனத்துடன் அவர்கள் இருவரும் நின்றார்கள்.

அவர்கள் வேறு யாருமல்ல. ஒருவர் இம்மானுவேல் அடிகளாரின் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் ஈரோஸ் இயக்கப் பிரமுகர். மற்றையவர் கனடாவில் இயங்கும் தமிழ் அமைப்பொன்றின் பிரதிநிதி. காங்கிரஸ் என்ற விகுதிப் பெயரைக் கொண்ட இந்த அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனடிய கிளை போன்று இயங்கும் ஒன்று.

இந்த இரண்டு பேருமே மதில்மேல் பூனைகளாக நின்றார்கள்.

எது எப்படியோ, தமிழீழ விடுதலைப் புலிகள் மீட்பர்கள் இல்லை என்ற கருத்தை எந்தவொரு தமிழர் பிரதிநிதியும் முன்வைக்கவில்லை.

இது தான் மார்டின் அவர்களையும், அவருடன் கூடவிருந்த சப்ரீனா என்ற இன்னொரு சுவிஸ் இராசதந்திரியையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்க வேண்டும்.

அது தான் மறு நாள் 19.10.2019 சனிக்கிழமை அன்று மதியபோசனத்தின் பொழுது அனல்பறக்கும் வகையில் மார்டின் எம்முடன் பேசிக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

# முடிந்தும் முடியாத....

புலம்பெயர்தலுக்குப் பல்வேறு காரணிகள் இருக்கின்றபோதிலும் எமது சமூகத்தின் ஆரோக்கியமான அரசியலிற்கு அத்திவாரமிடும் அறிவார்ந்த தைரியமான தலைமுறையாக பரிணமித்து எமது மக்களின் எதிர்காலத்தை நல்வழியில் கொண்டு செல்ல புலம்பெயர் தேசத்தில் பிறந்துவளர்கின்ற இளைஞர்களாக தாயகம் குறித்த புரிதல் என்ன? முதலில் அவற்றைப் புரிந்திட தாய்த் தமிழை முறையாகக் கற்று கற்பிக்கும் முயற்சிகளில் முனைப்புடன் செயற்பட்டால் ஆற்றல் வாய்ந்த எழுச்சி, பண்பாட்டு மலர்ச்சி கொண்ட தலைமுறையாக வாழமுடியும்.

ஈழத்தமிழராய் உலகில் எங்கு வாழ்ந்தாலும் நாம்தமிழர், நமது மொழி தமிழ், நமது நாடு தமிழீழம், நமது தேசியக் கொடி புலிக்கொடி, நமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் என்பவை கர்வத்துடன் உரக்கச் சொல்வதில் பெருமைகொள்ள வேண்டும். தாய் மண்ணுக்கு உரமாகிய சரித்திர நாயகர்களின் வீரமும் தியாகமும் விதைக்கப்படும் தாய் நிலத்தில் நிச்சயம் வேரூன்றி விருட்சமாக எழுவார்கள். நிலத்திலும், புலத்திலும் தாயக இலட்சியத்தை ஈடேற்றும் வகையில் ஒற்றுமையாய், ஓரணியாக திரண்டிடும்போது தமிழீழம் மலரும், எமது மக்கள் விடுதலையைப் பெறுவார்கள்.

தமிழீழம் நோக்கி வீறுகொண்டெழுவோம்.

# அரிச்சந்திரன் பதில்கள்...

இவ்வாறு ஒவ்வொரு நகர்வுகளும் சூழ்ச்சிகள் மூலமே பின்னப்பட்டு, கட்டமைக்கப்பட்டு துரியோதனன் பலம் சிதைக்கப்பட்டு பாண்டவர்கள் காப்பாற்றப்பட்டு வெற்றியைப் பெற்றார்கள். நியாயம் வெல்லவேண்டும் என்பதற்காக பலமாக இருந்த துரியோதனின் பலத்தைச் சிதைத்து அழித்து வெற்றியைப் பெறவைத்தார் கிருஷ்ணர். அதுதான் தர்மமும் கூட.

ஆனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இப்படியா நடந்தது?



நியாயத்தின் பக்கம் நிற்கவேண்டிய உலகம் அநியாயத்தின் பக்கம் நின்றது. இப்போதும் நிற்கின்றது. பலமாக இருந்த விடுதலைப் புலிகளின் பலத்தைச் சிதைப்பதற்கு சூழ்ச்சிகள் ஏராளம் புரிந்தது. இனத்தின் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் புலிகள் மீது பயங்கரவாத முத்திரையைக் குத்தி உலக நாடுகள் பலவற்றிலும் தடைசெய்தது. புலிகளின் பலம் மேலும்



அதிகரித்துவிடாதபடி ஆயுதக் கப்பல்களின் வருகையை சர்வதேசக் கடல் எல்லைவரை சென்று தடுத்து நிறுத்தியது. ஆழஊடுருவும் படையணிகளை இறக்கி இலக்குவைத்து தளபதிகளை கொன்றது. தமது சூழ்ச்சித் திட்டத்திற்குள் விழவைக்க வலுக்கட்டாயமாக சமாதானப் பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகளை இழுத்துவந்த உலகம், இறுதிப் போரின்போது ஏழு நாடுகளின் படைத்தளபதிகள் நேரடியாகக் களமிறங்கி வழிகாட்டியது. இன்னும் இப்படி எத்தனையோ சூழ்ச்சிகளைப் புரிந்தே ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டம் அழிக்கப்பட்டது.



மகாபாரதக் கதையில் கிருஷ்ணர் நியாயத்தின் பக்கம் நின்று சூழ்ச்சி செய்ததால் பாண்டவர்கள் வென்றார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உலகம் அநியாயத்தின் பக்கம் நின்று சூழ்ச்சி செய்ததால் ஆயுதம் தாங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டம் தோல்வியடைந்தது. இங்கு துரோகத்தையும் விஞ்சி நின்றது சூழ்ச்சிதான்.

மகாபாரதக் கதையில் கிருஷ்ணர் நியாயத்தின் பக்கம் நிற்காமல் அநியாயத்தின் பக்கம் நின்றிருந்தால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உலகம் அநியாயத்தின் பக்கம் நிற்காமல் நியாயத்தின் பக்கம் நின்றிருந்தால் வெற்றியை யார் பெற்றிருப்பார்கள்? என்று சிந்தித்துப் பாருங்கள், துரோகத்தையும் விட ஆபத்தானது சூழ்ச்சிகள் என்பது புரியும்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# Y.P.Thas JEWELLERY

சுப ஆரம்பங்களின் ஆரம்பம்!

9, Rue Perdonnet - 75010 Paris
Tél.: 09 81 62 12 81 Port.: 06 42 17 32 69

## Monsieur CISSE

பிரபல ஆபிரிக்க மாந்ரீகரும் சோதிடரும்
உங்கள் அனைத்துப் பிரச்சினைகளிற்குமான தீர்வுகள் என்னிடம் உள்ளன.
எல்லாவிதமான நோய்களும் குணப்படுத்தப்படும்
உடனடியானதும் நிரந்தரமானதுமான தீர்வுகளிற்கு
0609460517 / 0142455517

## SUTHAGINY SASU

Drancy RERக்கு அருகாமையில்
மளிகைப் பொருட்கள்
மரக்கறி வகைகள்
குளிர்பானங்கள்
11, Rue Morin, 93700 Drancy
Tél: 09 51 24 37 70

## Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை

## Anna Marché

அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

## பாரீஸ் அறிவாலயம்

Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

## பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!

# திரு.சகாதேவன்

எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
நேரில் வரமுடியாதவர்களுக்கு தபால் மூலம் மொழிபெயர்ப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்.
எமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள்!
தொடர்பு கொள்ள SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

## லா சப்பலில் சாரதி பயிற்சிநிலையம்

3i Conduite
CODE DE LA ROUTE பயிற்சி வகுப்புகள்
CONDUITE பயிற்சி வகுப்புகள்
CONDUITE EXAM அனுமதி பெற்றுத்தரப்படும்
9 இருக்கைகள் கொண்ட வாகனம் வாடகைக்குத்தரப்படும்
சகல பயிற்சிகளும் உங்கள் நேர வசதிக்கு ஏற்ப அமைத்துத்தரப்படும்
57 RUE LOUIS BLANC - 75010 PARIS
SRUTHI STUDIO வின் உள்புறம்
Tél : 06 51 38 87 33

## ரஜீந்தரா CASH AND CARRY

BOBIGNY வாழ் மக்களுக்காக...
இலங்கை, இந்திய, ஆசிய மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், இன்னும் பல ...
Tel. : 09 87 03 70 07
1 Ave. Edouard Vaillant - 93000 Bobigny

## Sport சாரதி பயிற்சி நிலையம்

பறிக்கப்பட்ட சாரதிப்பத்திரத்தை மீளப்பெறவும்
பெர்மிஸ் ஏக்ஸ்பிரஸ்
இழந்த புள்ளிகளை மீளப்பெறவும்
Sport Auto Ecole - 4, rue de Jules Ferry, 95400 Villiers Le Bel
Tél.: 01.74.93.70.40 / 06.13.38.85.50

## கபறினா இறைச்சிக்கடை

தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சி பங்கையும் பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc 75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis 75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

## மாங்கல்யம் நகை மாடம்

தரம் - நேரம் - விலை - டிசைன் - உத்தரவாதம்
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
உடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
122 Av Paul Vaillant Couturier - 93120 La Courneuve
Tél & Fax: 01 48 36 40 75
email: mangalyam93120@gmail.com
www.mangalyam-jewels.com

## S.P.Raju Jewellery

பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!
M La Chapelle ou Gare du Nord
199 Rue de Fbg St.Denis, 75010 Paris Tél: 01 58 20 17 33
13 Rue Cail, 75010 Paris Tél: 01 46 07 43 42

## EURO RESTO SERVICE

உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்
245 RUE DU FBG SAINT MARTIN - 75010 PARIS
TÉL: 01 40 36 00 09 / 06 68 67 15 55 M°: Louis Blanc

## ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.

COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE 93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

## Ocean Indien

30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60




27-11-2019 புதன் நேரம் 17:00மணி
L e Salle du Sacre Coeur
84 Rue Verdun
68100 Mulhouse

27-11-2019 புதன் நேரம் 12:30 மணி
Salle kléber
119 Route du Général de Gaulle
67300 Schiltigheim
Starsbourg

01-12-2019 ஞாயிறு நேரம் 12:30 மணி
Salle Lafourguette
28 Rue de Gironis
31100 Toulouse

27-11-2019 புதன் நேரம் 15:00மணி
A la Maison du Diocése
21 Rue Gustaye Mathieu
58000 Nevers

27-11-2019 புதன் நேரம் 17:00 மணி
Le Diapason
06- Rue Escoffier
06300 -Nice

30-11-2019 சனி நேரம் 15:30 மணி
Espace L' Alouette
20 Place de Croix Porchette
37300 Joue les Toure

27-11-2019 புதன் நேரம் 18:00 மணி
111 Avenue Jean Mermoz
69008 Lyon

01-12-2019 ஞாயிறு நேரம் 14:00 மணி
25.Avenue Maréchal Leclere
10120 Saint-André Les Vergers
Troyes

27-11-2019 புதன் நேரம் 17:00 மணி
Maison des Association
Avenue Paulin Enfert
45500 Gien

01-12-2019 ஞாயிறு நேரம் 14:00 மணி
21 Rue Buchou
33800 Bordeaux